தமிழ் நேசன்

மெர்தேகா மலர் - 1957

$1/25

2644

THE TAMIL NESAN

MERDEKA SOUVENIR - 1957

வாடிக்கைக்காரர்கள் அனைவருக்கும் எமது மெர்தேகா வாழ்த்து

முருகன் கம்பெனி

27, ரெம்பாவ் ஸ்திரீட், கிள்ளான்

40 ஆண்டுகளுக்கு மேலாக மலாயாவில் பிரசித்திபெற்றது 222 சுருட்டு பீடிகளே!

No. 222. BRAND

222

TRADE MARK. REGISTERED

222 CIGARS
(by Thambampatty Tobacco)
& BEEDIES
(Mysore Nipani Tobacco)
Manufacturers

222 சுருட்டுகளும்
(தம்பம்பட்டி புகையிலையால்)
பீடிகளும்
(மைசூர் நிப்பாணி புகையிலையால்)
தயாரிப்பவர்கள்..

MURUGAN COMPANY

(Sole Proprietor: M. S. N. Sundaram Pillay)

No. 27, Rembau Street, Klang, Malaya

Telephone No. 275 | Telegram: "MURUGANCO" Klang. | Post Box No. 20

Famous for **CIGARS & BEEDIES** for Over 40 Years.

Branch: **No. 510, Paya Lebar Road, Singapore - 14, Phone: 42993**

எங்கள் வாடிக்கைக்காரர்களுக்கும் பொது மக்களுக்கும்

சுதந்திரதின நல் வாழ்த்துக்கள்!

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்!

எங்கள் இன்ஜின் மார்க் பீடி இந்தியாவில் கைதேர்ந்த ஆட்களைக் கொண்டு உயர்ந்த ரக புகையிலையினால் மலாயாவிற்கென்றே விசேஷமாக தயார் செய்யப் பட்டது. விலையோ மிக மலிவு; ஆனால் விறுவிறுப் புள்ளது. பீடிகளில் தலை சிறந்தது. எங்கே ஒரு முறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

STOCKIST:

ENGINE BEEDI STORES

17, BELILIOS ROAD,

SINGAPORE-8

LAKSHMI TEXTILES

Importers. Exporters, Wholesale and Retail Merchants

Silk, Rayon and Cotton Textiles

37, BATU ROAD, KUALA LUMPUR

PHONE: 5372 Grams: "LAKHONE"

Godes usued: BENTLEY'S.

—o—

சில்க், ரயான், பருத்தி துணிகளுக்கு

லக்ஷ்மி டெக்ஸ்டைல்ஸ்

37, பத்து ரோடு, கோலாலம்பூர்

போன்: 5372 தந்தி: "லக்ஹோன்"

மகிழ்ச்சி தரக்கூடிய
திருமணம், காதணி,
பெயர் சூட்டு விழா
பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள்
எதுவாயினும்
சிறந்த முறையில் குறைந்த
கட்டணத்தில்
போட்டோ பிடித்துக்
கொடுக்கப்படும்.
தேவைக்கு உடனே போன் நெ. 6787-க்கு
கூட்பிடுங்கள்

கே. பழநி

போட்டோ கிராபர்

எண் 6. 2-வது மாடி, எம். ஸி. ஏ. பில்டிங்,
கோலாலம்பூர்

ஆனந்த பவன் ரெஸ்டாரண்ட் அண்ட் பார்

(உரிமையாளர்: தே. மருதையா)

தலைமை இடம்:
நெ. 81
ரெம்போ ஸ்திரீட்,
கிள்ளான்

போன்: 343

★

எந்த நேரத்திலும்
சூடான உணவு
பதார்த்தங்கள்
கிடைக்கும்.



கிளை:
நெ. 1691,
மெயின் ஸ்திரீட்,
பத்து ஆராங்

போன்: 205

★

விசேஷ வைபவங்
களுக்குச் சிறந்த
முறையில் தயார்
செய்து தரப்படும்

பீர் பிராந்தி, விஸ்கி, இன்னும் பலவித மது பானங்களும் கிடைக்கும்.

‘மெர்ஸ்விடா டானிக் 11’

(MERZVITA TONIC i1)

ஜெர்மனியில் செய்யப்பட்ட மல்டி வைடமின் டானிக் திரேகாரோக்கியத்திற்கும், பலத்திற்கும், நோயில்லா வாழ்விற்கும் தேவையான 11 வைடமின் சத்துக்கள் அடங்கி யுள்ளன. ருசியுள்ள திரவடானிக், வைடமின் குறைவின் காரணமாய்ப் போஷாக்குக் குன்றியவர்களும் மெலிந்து பல மற்ற குழந்தைகளும், பெரியோர்களும், கர்ப்ப ஸ்திரீகளும், பால் கொடுக்கும் தாய் மார்களும், வயோதிகர்களும், சோகை, இரத்தமின்மை, மற்றும் பொதுவாக எவ் வித பலஹீனத்திற்கும் ஆண், பெண், குழந்தைகள் யாவரும் சாப்பிடலாம். மெர்ஸ் விடா டானிக் 11’ புதிய இரத்தத்தையும், வலுவான எலும்புகளையும், அழுத்தமான சதையையும் உண்டாக்கி, இருதயத்தையும நரம்புகளையும் பலப்படுத்தி சக்தியை அதிகரிக்கச் செய்கிறது.

விலை: $ 3-00. தபால் செலவு 60 காசு.

CHARI & Co., (Post Box 123)

29, Robinson Road, Singapore-1

ஸ்ரீ மங்களாம்பிகா லஞ்சு ஹோம்

திருப்திகரமான முறையில் நல்ல உணவும், இனிய பக்ஷணங்களும், சுவைமிக்க காப்பியும், டீயும் சுத்தமாக கிடைக்கும். பிரத்தியேக ஆர்டர்கள் செய்து தரப்படும்.

44, சிராங்கூன் ரோடு,
சிங்கப்பூர்-8

Sri Mangalambika Lunch Home

The Most Upto-date Wholesome
Vegetarian Hotel in the City.

44, SERANGOON ROAD,

SINGAPORE-8 PHONE: 22050.

வாடிக்கைக்காரர்களுக்கு
எமது மெர்தேகா வாழ்த்துக்கள்!

★

அச்சு வேலையிலே ஓர் அழகு

உங்கள் மனம் விரும்பி லயிக்கும் வண்ணம் அழகான முறையில் - குறைவான விலையில் திருமணம், வாழ்த்துப் பத்திரம், ரசீது, பில், குறிப்பு, பேரேடு, லெட்டர் பேடு, ஐ. ஒ. யு., அண்டிமன் பாரம், கஸ்டம்ஸ் பாரங்கள் முதலியன குறித்த காலம் தவருமல் செய்து தரப்படும்.

★

பொது மக்கள் பாராட்டும் அச்சகம்

பிரிமியர் பிரிண்டிங் பிரஸ்

66, ரெம்போ ஸ்ட்ரீட்,

கிள்ளான்

தபால் பெட்டி எண்: 75

டெலிபோன்: 362

செலாமட்   மெர்தேகா

இந்தியன் பாங்க் லிமிட்.,

ஸ்தாபிதம்: 1907—பொன் விழா: 1957

தலைமை ஆபீஸ்: வடக்கு பீச் ரோட், சென்னை-1.



மலேயா பெடரேஷனின் மகத்தான சுதந்திர தினத்தன்று
மலேயா மக்களுக்கு எமது நல் வாழ்த்துக்கள்

கிளை ஆபீஸ்கள், தென்னிந்தியா முழுவதிலும், பம்பாய், கல்கத்தா, புதுடெல்லி, கொழும்பு முதலிய இடங்களிலும் இருக்கின்றன.

மலேயா கிளைகள்:

சிங்கப்பூர்—கோலாலம்பூர்—பினாங்கு—மலாக்கா.

எமது அந்நிய கரஸ்பாண்டெண்டுகள் உலகின் முக்கிய நகரங்களில் இருக்கின்றனர்

செலுத்தப்பட்ட மூலதனம்:	ரூ. 64.74	லக்ஷம்
ரிசர்வு மற்றும் இதர நிதிகள்:	ரூ. 90.50	லக்ஷம்
டிபாசிட்டுகள் 30—6—57:	ரூ. 33.86	கோடி

வெளி நாட்டு பரிவர்த்தனை உள்பட சகலவிதமான
பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

D. P. பார்த்தசாரதி
B. A. (Hons)., B. L.
செக்ரடரி.

மிக விரைவில்

எதிர் பாருங்கள்!

எம். ஜி. ராமச்சந்திரன்,
வைஜயந்திமாலாவுடன்
உலகப் புகழ் நடனமணி
கோபி கிருஷ்ணு
நடிக்கும்

பாக்தாத் திருடன்

★

சிவாஜி கணேசன்
பானுமதி நடிக்கும்
சாரங்கதாரா

★

மற்றும் பல சிறந்த தமிழ்ப்படங்கள்
விரைவில் வெளிவர விருக்கின்றன

விவரங்களுக்கு:

TAJMAHAL FILM DISTRIBUTORS,

35, ARAB STREET,

SINGAPORE - 7

Phone: 34710. Cable: "FAZAL"

வாழ்க சுதந்திரம்! வளர்க தமிழ் மொழி!

முக்கிய அறிவிப்பு

எங்களிடம் வியாபாரிகளுக்கு மொத்தமாயும், சில்லரையாகவும் எப்போதுமே கிடைக்கும்.

கும்பகோணம் T. S. R. & கோ சந்தனாதித்தைலம் அரைக்கீரை விதைத் தைலம், பிளவர் டஸ்டு - சந்தன வில்லை, ஸ்நானப் பவுடர் தசாங்கம் K. T. R. உயர்தரப் பன்னீர், தன்வந்திரி சந்தனாதி – அரைக்கீரை விதைத் தைலம், கேசவர்த்தினி, புனுகு, ஜவ்வாது, அரகஜா, காஷ்மீர் குஸூம், அசோகா பாக்கு, ரஸிக்கலால் பாக்கு, கண்மை, (ஐடெக்ஸ்) பல கலர், உயர்தர குங்குமம், பொட்டு டப்பி, பொட்டு அச்சு, ஜடைக் குஞ்சம், கொண்டைப்பூ, கொண்டை வளையம், கொண்டை ரூலர், சவுரி முடி, கவரி மான் மயிர், டிராமாக்காரர்கள் உபயோகிக்கக்கூடிய கலர் பவுடர்கள், ராஜபார்ட், ஸ்திரீ பார்ட் டோபா மயிர்கள், தாடி, மீசை, நாரதர் முடி முதலியனவும், சப்ளாக் கட்டை, ஜாலர், மிருதங்கம், கெஞ்சிரா, புல்புல் தாரா முதலிய வாத்தியங்களும் கல் பதித்த உயர்தர கிரீடங்களும், கலர் டிஸ்யூ பேப்பர், தளுக்குப் பொட்டு, மினுக்குப் பவுடர்களும் கிடைக்கும்: பனாரஸ், காஷ்மீர், சென்னை முதலான இடங்களில் செய்த பெண்கள் - ஆண்கள் நடையன்களும், ரவி வர்மா படங்கள், ஹிந்து கிரிஸ்தவ முகம்மதிய ஸ்கிரீன் படங்கள் எல்லா ரகத்திலும் விலை சகாயமாகவே தரப்படும்.

கோவில்களுக்கு வேண்டிய மாரியம்மன், சுப்பிரமணியர் விக்ரகங்களும், கும்ப கலசம், பெரிய தாம்பாளம், குடம், குத்து விளக்கு தவலை, செப்புப் பானை, கொத்துமணி, பூஜைமணி, ஆராய்ச்சி மணி பெரிது - சிறிது, தூபக்கால், தீபக்கால், சாம்பிராணி கலசம் முதலிய நானாவித சாமான்கள் மலிவாகக் கிடைக்கும்.

செப்புச் சட்டி ஈயம் பூசியது, ஒரு கந்தம் முதல் 13 கந்தம் வரை சாதம் வேக வைக்கலாம். பவுண்டு கணக்கில் நிறுத்து விலை சொல்லலாம். வேண்டுவோர் எத்தனைக் கந்தத்தில் தேவை என்ற விவரம் எழுதினால் ஈயம் பூசிய மேல் மூடியுடன் கொடுக்கப்படும்.

நவீன நாவல்கள், துப்பறியும் புதிய நாவல்கள், இதிகாச - புராண புத்தகங்கள், இலக்கிய - இலக்கண நூற்கள், பள்ளிகளுக்குத் தேவையான சகல புத்தகங்களும் லைபெரரி புத்தகங்களும் இங்கிலீஷ் - தமிழ் - மலையாளம் - ஹிந்தி - தெலுங்கு - டிக்ஷனரிகளும், கிடைக்கும். தேவைக்கு எழுதுங்கள்.

மனோன்மணி விலாச புத்தகசாலை

52, பத்து ரோடு, கோலாலம்பூர்.

செலாமட் THE UNITED COMMERCIAL BANK LTD மெர்தேகா

யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிமிட்.,

தலைமை ஆபீஸ்:

இந்தியா, எக்ஸ்சேஞ் பிளேஸ், கல்கத்தா

★

மலாயா பெடரேஷன் அரசாங்கத்திற்கும், அதன் மக்களுக்கும்

இந்த மகத்தான சுதந்திர தினமாகிய இன்று (31 ஆகஸ்ட், 1957)

இதயபூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

★

★ மலாயாவில் இந்த பாங்கின் முதலாவது கிளை, பினாங்கில் 1948-ல் திறக்கப் பட்டது. அதன் பின்னர், சிங்கப்பூரில் 1951–லும், கோலாலம்பூரில் 1956–லும் கிளைக் காரியாலயங்கள் தோன்றின.

★ இந்த பாங்கிற்கு ஏழு நாடுகளில் 100 கிளைகளுக்குமேல் இருக்கின்றன. உலகின் எல்லா தேசங்களுடனும்–சுமார் 60 அன்னிய பாங்குகளுடன் செய்யப்பெற்றுள்ள ஏற்பாட்டின் மூலம்–பல்வேறு அன்னியச் செலவாணித் தொழில்களை, இந்த பாங்க் மேற்கொண்டுள்ளது

★ இந்த பாங்கின் செலுத்தப்பட்ட மூலதனம் 2 கோடி ரூபாய் ஆகும்; ரிஸர்வ் நிதி 1 கோடி 15 லட்சம் ரூபாய்; நடைமுறையில் புழங்கும் தொகை ரூபாய் 91 கோடி 50 லட்சமாகும்.

எஸ். டி. சதாசிவன்
ஜெனரல் மானேஜர்

எஸ். சுப்ரமணியன்
கோலாலம்பூர் மானேஜர்

பொருளடக்கம்

தமிழ் நேசன் மெர்தேகா மலர், 1957

மெர்தேகா
ஆசிரியர் 13

இந்தியர்களை எண்ணிப் பெருமைப்படுகிறேன்
துங்கு அப்துல் ரஹ்மான் புத்ரா ... 14

இந்தியர்களின் பேருதவி
டத்தோ ஸர் செங் லாக் டான் ... 16

வகுப்புவாதம் கூடாது
வீ. தி. சம்பந்தன் 17

ஒற்றுமையே முதல் தேவை
இஞ்சே ஸர்டான் பின் ஹாஜி ஜுபீர் 33

தமிழ் நேசனுக்குப் பாராட்டு
லியாங் இயூ கோ 34

தமிழ்க் கல்வியின் எதிர்காலம்
டத்தோ ஸர் துரைசிங்கம் 35

சுதந்திரம் கேட்ட முதல் ஸ்தாபனம்
கே. எல். தேவாசர் 37

இதயத்தில் இந்தியராகவே இருங்கள்
ஆர். ரமணி 39

மூலதனம் உதவினோர்
அ. ம. நா. செ. வ. சங்கம் 40

உத்தமி
"நாகுமணாளன்" 43

சுதந்திர மலாயாவில் விளையாட்டுக்கள்
ஜோசப் ஜெகன் 55

மலாயாவில் தமிழ்க் கல்வி
டி. ஜே. டி. ராஜிலு 69

சிலாங்கூரின் நெற்களஞ்சியம்
எஸ். பழனிவேல் பிள்ளை 77

புது மலாயா
சுவாமி சத்தியானந்தா 83

கலாசாரக் கலப்பு
ஜெரால்டு ஹாக்கின்ஸ் 99

மலாயாவுக்கு இந்தியாவின் கலாசார உதவி
எஸ். துரைராஜசிங்கம் 101

மலாயாவில் கர்நாடக சங்கீதம்
ம. கந்தையா 107

மலாயாவில் புத்தமதம்
கே. தம்மானந்த தேரா 112

கூட்டணியின் வரலாறு
க. குருபாதம் 125

மலாயா வரலாற்றில் இந்தியர்கள்
கு. அழகிரிசாமி 132

LIST OF ADVERTISERS IN THIS SOUVENIR

Abdul Majid & Co., A. M. N. ...	50
Abdul Rahim & Co., K.	48
Abdul Rahim, M. M. ...	144
Abdul Razak & Co., V. M. S. ...	137
Abdul Wahab & Co., A. A. ...	84
Alagirisami T. ...	138
Amarjit Pictures ...	144
Ananda Bhawan Restaurant ...	2
Arunasalam Pillai P. ...	46
Asoka Pulicat Co. ...	72
Bajaj Brothers ...	136
Bali A. R. ...	82
Batcha & Muthiah ...	102
Bojana Korada ...	136
Chamber of Commerce (A. M. N. C.) ...	146
Chari & Co., ...	3
Chettiars Chamber of Commerce (S'pore)	145
Ceylon Restaurant ...	72
Chidambaram Pillai K. R. ...	140
Chop Soon Cheong ...	141
Chuan Joo Hui Tobacco ...	3rd Wrapper
Dhamotharan ...	141
Engine Beedi Stores ...	1
Federal Bakery ...	144
Ganapathi Achari ...	54
Ganga Stores ...	142
General Stores	148
Gian Singh ...	102
Gopal Pather V. ...	108
Hand-Looms ...	104
Indian Bank Ltd. ...	5
Indian Film Combine ...	147
Jayalakshimi Store ...	52
Jeganathan Vaithilingam & Co. ...	81
Kalaimagal Book Depot. ...	72
Kaliappan M. ...	58
Kalyanasundaram V. K. ...	58
Kangsar General Store ...	56
Komala Vilas Restaurant ...	56
Kondasamy Chettiar & Alagirisamy Chettiar	108
Lakshimi Textiles ...	2
Life Process Engraving Co., ...	139
Madras Cafe ...	136
Mangalambika Lunch Home ...	3
Manonmoney Vilas Book Depot ...	7
Meena Vilas Book Depot. ...	108
Mohd Ibrahim & Co., M. M. ...	52
Mohd Isahak & Co., S. A.	81
Mohd Kasim & Co., A. S. ...	48
Murugan Co.,	2nd Wrapper
Muthu & Co., ...	54
Nagaraja Chettiar K. T. ...	138
Natarajan S. ...	82
Natesa Pillai RM. N. ...	81
Oriental Agencies ...	70
Overseas General Agency ..	137
Palani K. ...	2
Pandian Stores ...	148
Paramaguru T. ...	84
Paramount Radio Service ...	58
Paris Flour Mill ...	50
Perak Book Store ...	58
Perak Muslim Restaurant ...	144
Premier Printing Press ...	4
Rahiman Sahib O. ...	48
Raja Store ...	70
Ramachandram Pillai SP. RM. ...	143
Ramasamy Chettiar D. ...	54
Ramdas Bros., ...	81
Rani Brand Cigar Co ...	84
Rasu Pathar V. ...	72
Rengasamy Chettiar & Sons K. ...	110
Sababathi Achari P. L. ...	46
Sankaralingam Achari S. L. S. ...	82
Sathakutty Chettiar & Co., T. R. ...	46
Seenivasagam Pillai R. V. ...	46
Setapak Driving School ...	108
Sinnamuthu Silk Store S. K. S. ...	70
Sri Ambal & Co	Last Wrapper
Star Press ...	137
Sun Pulicat Co., ...	82
Suppiah Pathar V. ...	56
Swamy & Co., ...	50
Tajmahal Film Distributors ...	6
Thevar & Co ...	3
Thiruvalluar Book Depot ...	70
Tong Hing Teck ...	141
Ubaidulla Co. ...	143
United Commercial Bank Ltd. ...	8
V. G. & Sons ...	138

ஜேவியர்
பெர்லிஸ்
கங்கார்
அலோர் ஸ்டார்
கெடா
பினங்கு
பேரா
ஈப்போ
கோத்தபாரு
கிளந்தான்
கோல
திரெங்கானு
திரெங்கானு
குவாந்தான்
பஹாங்
சிலாங்கூர்
கோலாலம்பூர்
நெகிரி
செம்பிலான்
சிரம்பான்
மலாக்கா
ஜோகூர்
ஜோகூர்பாரு
சிங்கப்பூர்

வாழ்க மலாயா

மெர்தேகா

இற்றைக்கு 171 ஆண்டுகளுக்கு முன்னுல் இதே ஆகஸ்டு மாதம் 11-ம் தேதியன்று பினங்கில் முதல் முதலாகப் பிரிட்டிஷ் கொடி ஏற்றப்பட்டது. ஆங்கில ஆட்சியின் சின்னமான அந்தக் கொடி இன்று மலாயாவெங்கும் இறக்கப்பட்டு, சுதந்திரக் கொடி ஏற்றப்படுகிறது. பட்டொளி வீசிப் பறக்கும் பெடரேஷன் கொடி, நம்முடைய ஆக்க முயற்சிகளுக்கெல்லாம் உத்வேகமும் வெற்றியும் அளிக்கும் ஜயக்கொடியாகப் பறக்கிறது.

மலாயா ஸ்வர்ணபூமி; செல்வங்கொழிக்கும் திருநாடு. இந் நாட்டின் எதிர்கால சுபிக்ஷமும், சுக வாழ்வும் மக்களின் ஒற்றுமையையும், உழைப்பையும் பொறுத்துள்ளன. சுதந்திரத்தைத் தேடித் தந்த சமூக ஒற்றுமையை, சௌஜன்யத்தை, தினம் தினமும் வளர்ப்போமாக! ஒற்றுமையின் பெருமையை இன்று போல், என்றென்றைக்கும் உலகுக்கு எடுத்துக் காட்டுவோமாக!

மலாயாவை வளம் பொருந்திய நாடாக்கியதில், நாகரிகத்தில் சிறந்த நாடாக்கியதில், இந்தியர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. எதிர்காலத்திலும் இந் நாட்டின் நலனுக்கு அந்தரங்க சுத்தியுடன் பாடுபட்டு, பிற சமூகங்களுடன் சகல இன்பதுன்பங்களிலும் பங்கு கொண்டு வாழ இந்தியர்கள் சித்தமாக இருக்கிருர்கள்.

மெர்தேகா நாளாகிய இப் பொன்னுளைக் கொண்டாட, இந்த விசேஷ மலரை மலாயாத் தமிழன்பர்களுக்கு மகிழ்ச்சியோடு அளிக்கிருேம். சுதந்திர மலாயாவில் "நேச"னின் நாட்டுப் பணி தொடர்ந்து சிறப்புற நடைபெறும் என்பதை முன்கூட்டி அறிவிக்கும் முறையில் இந்தமெர்தேகா மலர் வெளியிடப்படுகிறது. முழுக்க முழுக்க மலாயா அன்பர்களின் ஒத்துழைப்பைக் கொண்டே தயாரிக்கப்பட்ட இம் மலரை வெளியிடுவதில் ஓர் அலாதி மகிழ்ச்சி அடைகிருேம். மலருக்கு அழகும் சிறப்பும் அளிக்க ஒத்துழைத்த அனைவருக்கும் எமது நன்றி.

மெர்தேகா!

— *ஆசிரியர், 31-8-1957.*

இந்தியர்களை எண்ணிப் பெருமை அடைகிறேன்

துங்கு அப்துல்ரஹ்மான் புத்ரா

முதல் மந்திரி

மலாயாவின் நாகரிகம் இந்தியாவிலிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. கிட்டாவில் தோண்டியெடுத்த அநேக சிலைகள், சாஸனங்கள் ஆகிய சான்றுகளை ஏற்றுக்கொள்ளுவோமேயானால், அது உண்மையே. கிட்டாவைச் சேர்ந்த லங்காவித் தீவில் குவா செரிதா என்ற இடத்தில் ஒரு பாறையில் செதுக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் ஹிந்து எழுத்துக்களே. அவை காலப் போக்கில் மங்கி விட்டதால், இப்போது வாசித்துப் பொருள் காண்பது கஷ்டமாக இருக்கிறது.

என்னுடைய முன்னோருக்கு "மாரன் மஹா வங்ஸன்" என்ற சமஸ்கிருதப் பட்டம் உண்டு. கிட்டாவின் முதலாவது அரசர், மங்கோலிய இளவரசர் ஒருவரின் தளபதிகளில் ஒருவராவார். அவர் மங்கோலிய இளவரசி ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொள்ளச் சீனாவுக்குத் திரும்பிச் சென்றபோது, மலாக்கா ஜலசந்தியில் கடும்புயல் அடித்ததால், அவருடைய கப்பல் நீரில் மூழ்கி விட்டது. பத்துப்பேரைத் தவிர எல்லோரும் மூழ்கி இறந்தனர். உயிர் தப்பிய பத்துப் பேரும்

துங்குவின் மனைவியார்: துங்கு ஷாரிபா ரோஸியா

துங்குவின் செல்வப் புதல்வர்
இப்போது இந்திய ராணுவக் கல்லூரி மாணவர்

கிட்டாவில் கரையேறினர். மங்கோலியத்தளபதியின் புத்தி சாதுரியத்தையும், உயர்ந்த தகுதிகளையும் கண்டு, அவரையே கிட்டாவுக்கு மன்னராக்கிவிட்டார்கள். அவர் ''மாரன் மஹா வங்ஸன்'' என்ற பட்டத்தைத் தமக்கு வைத்துக் கொண்டார். இது தான் இந்தியாவுடன் நமக்கு ஏற்பட்ட முதல் தொடர்பு. அன்று முதல், இந்திய வர்த்தகர்கள் மலாயா மக்களுடன் வியாபாரம் செய்து வந்தார்கள். அவர்கள் தங்கள் நாகரிகத்தையும் இங்கு கொண்டு வந்தார்கள். அவர்களுடைய நாகரிகமே இங்கு வெகுகாலம் நீடித்து நிலவியது.

இந்த நூற்றாண்டுக்குச் சற்று முன்னதாக பிரிட்டிஷார் இந்தப் பிரதேசத்தைத் தங்கள் காலனியாக்கியபோது, சர்க்கார் உத்தியோகத்துக்கும், வைத்தியத் தொழிலுக்கும் ரோடு போடுவதற்கும், தோட்டங்களில் வேலை செய்வதற்கும் இந்தியர்களை அழைத்துக்கொண்டு வந்தார்கள். அப்படி வந்த இந்தியர்கள் அனைவரும் மலாயாவை விரும்பினார்கள்: இங்கேயே தங்கிவிடத் தீர்மானித்தார்கள். இந் நாட்டின் சுபிக்ஷத்துக்கு அவர்கள் செய்திருக்கும் உதவியைச் சமீபத்தில் நடந்த சட்டசபைக் கூட்டத்தில் நான் குறிப்பிட்டேன். அவர்கள் இந்த நாட்டுக்கு சுபிக்ஷத்தை மட்டுமின்றி சமாதானத்தையும், திருப்தியையும், சந்தோஷத்தையும் கொண்டு வந்தார்கள். அவர்கள் சட்டத்தை அனுசரித்து நடப்பவர்கள்; சமாதான விருப்பம் கொண்டவர்கள்; மற்றவர்களுடைய வாழ்க்கையில் தலையிட முயற்சி செய்யாமல் தங்கள் சொந்த வேலையைக் கவனிப்பவர்கள்.

நாளாவட்டத்தில் அவர்கள் மலாயாக் கண்ணோட்டத்தைப் பெற்றுள்ளனர்; அரசியல், விளையாட்டுக்கள், நாட்டின் சமூக நலனபிவிருத்தி ஆகியவற்றில் தீவிரப்பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களை அறிந்திருப்பதையும் அவர்கள் இந் நாட்டில் வசிப்பதையும் எண்ணி நான் பெருமைஅடைகிறேன். அவர்கள் மலாயா சுதந்திர இயக்கத்தில் சேர்ந்து பங்குகொண்டதை அறிந்து நான் இன்னும் அதிகமாகப் பெருமைப்படுகிறேன். அவர்கள் சிறந்த மலாயர்களாக விளங்குவார்கள் என்பதை நான் அறிவேன்.

மலாயாவிலிருந்து சென்ற இந்திய மாணவர்கள் இப்போது சென்னையிலும், உலகின் பிற பகுதிகளிலும் படித்து வந்த போதிலும், அங்கே மலாயா மாணவர்கள் சங்கம் அமைப்பதற்கு என்னுடைய வாழ்த்துக்களைக் கேட்டுக் கடிதம் எழுதினார்கள். நானும் அவர்களுக்கு வெற்றி வாழ்த்துக்கள் கூறி எழுதினேன். அவர்கள் தங்கள் நாடான மலாயாவிடம் கொண்டுள்ள நாட்டுப்பற்றையும் நான் பாராட்டி எழுதினேன். வெளிநாடுகளில் அவர்கள் மலாயாவுக்கு நற்பெயர் தேடித் தருவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

என்னுடைய மந்திரி சபையில் ஓர் இந்தியர்—ஸ்ரீ சம்பந்தன்—மந்திரியாக இருக்கிறார்.

(18-ம் பக்கம் பார்க்க)

இந்தியர்களின் பேருதவி

டத்தோ ஸர் செங் லாக் டான்

(மலாயா சீனர் சங்கத் தலைவர்)

மலாயாவுக்குச் சிறந்த எதிர்காலம் இருக்கிறது என்பது என் கருத்து. இந் நாட்டின் விஸ்தீரணம் 52,000 சதுர மைல்கள்; ஜனத்தொகை 80 லக்ஷம். மலாய்க்காரர்கள், சீனர்கள், இந்தியர்கள், ஐரோப்பியர்கள் ஆகியோர் இங்கு வாழ்கின்றனர். இந் நாட்டின் வரலாற்றுக்காலம் முழுவதிலும் இந்தப் பல்வேறு இனத்தினரும் பூரண ஒற்றுமையுடனும், நட்புறவுடனும், ஒத்துழைப்பு உணர்ச்சியுடனும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். அதன் பயனாக மலாயா சுபிக்ஷம் நிறைந்த நாடாகியிருக்கிறது.

4 முதல் 5 கோடி மக்கள் வரை இந் நாட்டில் வாழ முடியும். அவர்களுக்கு ஜீவிதம் அளித்துக் காப்பாற்றும் சக்தி மலாயாவுக்கு இருக்கிறது. மலாயா மக்கள் தேசபக்தி நிறைந்த ஒரு ஐக்கிய தேசிய இனமாக உருவாவதற்குப் பாடுபட வேண்டியது மலாயர்கள் அனைவருடைய கடமையுமாகும். அதன் மூலம், அவசியம் ஏற்பட்டாலும், அவசியம் ஏற்படும்போதும் அவர்கள் தங்கள் உயிரைக் கொடுத்து நாட்டைப் பாதுகாக்கத் தயாராக இருப்பார்கள்.

தென்கிழக்கு ஆசியாவின் நாகரிகத்துக்கு இந்தியர்கள் மிகுதியாக உதவியிருக்கிறார்கள். ஆகவே, மலாய்க்காரர்கள், சீனர்கள் முதலிய இனங்களைச் சேர்ந்தவர்களுடன் ஒத்துழைத்து, அவர்கள் இந் நாட்டு நாகரிகத்துக்குத் தொடர்ந்து தங்கள் உதவியைச் செய்து வருவார்கள் என்று நம்புகிறோம்.

மலாயாவின் நல்வாழ்வுக்கும் நாகரிகத்துக்கும் இந்தியர்கள் இதற்கு முன் பெரிதும் உதவியிருப்பது போல, இந் நாடு மகத்தான நிலையடையத் தொடர்ந்து உதவுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மலாயாவின் பிரதான உற்பத்திப் பொருள்களான ரப்பரினாலும், ஈயத்தினாலும் இந்

(18-ம் பக்கம் பார்க்க)

ஓவியரால் வரையப்பட்ட செங் லாக் டான் படம்



வகுப்புவாதம் கூடாது

வீ.தி. சம்பந்தன்

தொழிலாளர் மந்திரி

அரசியலில் நாம் மிகவும் வேகமாக முன்னேறியிருக்கிறோம். பெடரல் தேர்தல்கள் முடிந்து, அநேகமாக 2 வருஷங்களுக்குள்ளாகவே பூரண சுதந்திரத்தைப் பெற்றுவிட்டோம். நாடுகளின் வரலாற்றில் இது சாதாரணமாகக் காண முடியாத ஒரு புதுமையாகும். இப்போது நாம் கவனமாகவும், விருப்பு வெறுப்பில்லாமலும் எதிர்காலத்தை நோக்க வேண்டும்.

இந் நாட்டில் வாழும் எல்லா மக்களுக்கும் எதிர்காலம் பிரகாசமாக இருக்கிறது. நாட்டுக்கு ஸ்திரமான, நல்ல சர்க்காரை அளிக்கவும், அந்த சர்க்கார் ஜனநாயக சர்க்காராக விளங்குவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கவும் அரசியலமைப்புத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நல்லெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டுதான் ஜனநாயகம் வாழ்கிறது என்பது மற்ற நாடுகளைவிட, பற்பல இனத்தாரும் வாழும் மலாயாவைப் போன்ற ஒரு நாட்டைப் பொறுத்தமட்டிலும் மிக மிக உண்மையான வாசகமாகும். நாட்டில் நல்லெண்ணமில்லாவிட்டால், ஜனநாயகம் சரியாக வேலை செய்ய முடியாது. எல்லா நாடுகளுக்குமே இது பொருந்தும். ஆகையினால், நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கி அபிவிருத்தி செய்வதில் உள்ள மிக முக்கியமான அம்சம், மக்களிடையே நிலவும் நல்லெண்ணத்தையும் சௌஜன்யத்தையும், நம்பிக்கையையும் பயன்படுத்துவதே. இந் நாட்டிலிருக்கும் இந்தியர்கள், மற்றும் சிறு மைனரிடி சமூகங்களைச் சேர்ந்தவர்கள் ஆகியோரின் ஸ்தானம் பற்றியும், முக்கியத்துவம் பற்றியும் பேசுவதற்குச் சிலர் விரும்புகின்றனர். இது சரியான கண்ணோட்டமல்ல என்று நான் நினைக்கிறேன். உண்மை நிலை என்னவென்றால், இங்கே மெஜாரிடி இனமே கிடையாது; எல்லா இனங்களும் மைனரிடி இனங்களே. அதனால், இனங்களுக்கிடையே நட்புறவுகள் நிலவுவதுதான் பிரச்னையே ஒழிய, குறிப்பிட்ட மைனரிடிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதல்ல. நாடு, இன வேறுபாடுகளைக் கடந்து செல்ல வேண்டும்.

பற்பல இனத்தினரும் இந் நாட்டில் வசிப்பதால், வகுப்புவாத உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டுப் பதவிக்கு வர வகுப்புவாதிகள் விரும்பக் கூடும். இனத்திமிருக்கோ, இன அடிப்படையில் அவநம்பிக்கைக்கோ, அல்லது இனத் துவேஷத்துக்கோ மக்களின் எந்தக் குழுவினரும் ஆதரவளிக்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது ஒவ்வொருவருடையவும் கடமையாக இருக்க வேண்டும். இந் நாட்டின் பல வேறு மக்களுடைய கலாசாரங்களை வளர்க்கவும், அவற்றின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கவும் கூட்டணி சர்க்கார் விரும்புகிறது. எல்லா மக்களிடையிலும் உள்ள சிறந்த பாரம்பர்யச் சிறப்புக்கள் நாட்டு நலனுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். சுய நலக் கும்பல்களின் வகுப்புவாதக் கூச்சல்களைப் புறக்கணிப்பது ஒவ்வொருவருடைய கடமையுமாகும். இங்கு வாழும் மக்களிடையே நாம் வளர்க்கக் கூடிய நல்லெண்ணத்தையும், சகோதரத்துவத்தையும் பொறுத்தே நாட்டின் எதிர்காலம் இருக்கிறது.

சுதந்திரம் என்பது மேல் நிலைக்குக் கொண்டு செல்லும் ஒரு சக்தி. மக்களிடம் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக் கொணரும் சக்தியாகவும் அது விளங்குகிறது. அத்துடன் அது கலாசார மறுமலர்ச்சியிலும், வளர்ச்சியிலும் ஒரு புது சகாப்தத்தைத் தொடங்கக் கூடியதாகும். பல அரிய காரியங்கள் மக்களை எதிர்நோக்கியிருக்கின்றன. அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

அதனால், நீங்கள் வகுப்புவாதிகளின் கூச்சலுக்குச் செவி சாய்க்கக் கூடாதென்றும், நாட்டில் வாழும் மக்களிடையே கூட்டுறவு வாழ்க்கையும் சகோதரத்துவமும் நிலவ வேண்டிய அவசியத்தை உணரவேண்டுமென்றும், இந்த லட்சியத்துக்காகப் பாடுபட வேண்டுமென்றும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்த கௌரவமான பணியும், இதைச் செய்து முடிக்கும் கடமையும் இந்தியர்களுக்கு இருக்கிறது.

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரி சபையில் அவர் அங்கம் வகிப்பதை எண்ணி நான் பெருமைப் படுகிறேன்; அவரை அறிந்திருப்பதை ஒரு பெருமையாகக்கருதுகிறேன்; அவர் என்னிடமும், மந்திரி சபையில் உள்ள தம் சகபாடிகளிடமும் கொண்டுள்ள அந்தரங்க சுத்தியையும், விஸ்வாசத்தையும் உண்மையிலேயே பாராட்டுகிறேன்.

நாளாரம்பத்தில், எங்கள் மந்திரி சபையில் மலாயா இந்தியர் சமூகத்தைச் சேர்ந்த மேலும் சில மந்திரிகள் பதவி வகிப்பார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. இப்போது நாம் சுதந்திரத்தின் தலைவாசலில் பிரவேசிக்கிறோம். சமாதானத்துக்கும், சந்தோஷத்துக்கும், எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும் தங்களை மலாயர்களாகக் கருதும் மக்களின் ஒற்றுமைக்கும் ஒரு முன் மாதிரியாக இலங்கக் கூடியவாறு இந்த நாட்டை உருவாக்குவோம் என்ற நம்பிக்கையுடன் நாம் ஒன்றாக முன்னேறிச் செல்லுவோமாக.

மெர்தேகா!

★



முதலாவது சீனக் கோவில்

மலாயாவில் இப்போதுள்ள சீனக் கோவில்களில், முதலாவதாகக் கட்டப்பட்டது மலாக்காவிலிருக்கும் செங் ஹூன் டெங் என்ற கோவிலாகும். இது 1600-ம் வருஷத்துக்குச் சற்று முன்னதாகக் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று சரித்திர நிபுணர்கள் பல ஆதாரங்களைக் கொண்டு தீர்மானித்திருக்கிறார்கள்.

இக்கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் 2½ அடி உயர வெண்கலச் சிலையின் பெயர் குவான்-யீன்-ஷி. அந்தத் தேவதையின் சிலை தென் இந்தியச் சிற்ப வேலையாக இருக்க வேண்டுமென்று டத்தோ ஸர் செங் லாக் டான் கூறுகிறார்.

குவான்-யீன்-ஷி என்பதற்குக் கருணைத் தேவதை என்று அர்த்தம். மூலஸ்தான விக்கிரஹம் மட்டுமின்றி இக்கோவிலுள்ள 6 மரப் பொம்மைகளும் தென்னிந்தியர் வேலைப்பாடுதான். மலாயாவின் ஆதி சீனக் கோவில், அதுவும், பிரதானமான ஒரு கோவில், இந்தியச் சிற்பங்களுடன் இலங்குவது, இந்தியர்களுக்கெல்லாம் பெருமையளிப்பதாகும்.

(16-ம் பக்கம் தொடர்ச்சி)

நாடு சுபிக்ஷம் அடைந்திருக்கிறது. இந்தச் சரக்குகள் உலகின் ஒவ்வொரு பகுதியிலுமே உபயோகிக்கப்பட்டு வருகின்றன. அதனால், இந்த ஜீவாதாரமான சரக்குகளின் உற்பத்தி மூலம் மலாயாவின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந் நாட்டின் பிரஜைகளாக இருப்பதை எண்ணி நாம் பெருமைப்பட வேண்டும். மலாயா தொடர்ந்து சுபிக்ஷமாக இருக்கவும், உலக நாகரிகத்துக்குச் சிறந்த முறையில் உதவக் கூடிய பெருநாடாக வளர்ச்சி பெறவும் நம்மால் முடிந்த வரையிலும் பாடுபட வேண்டும்.

மலாயாவில் ரப்பர்த் தோட்டங்களை நடத்துவதற்கு இந்தியத் தொழிலாளர்கள் தங்கள் உழைப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இவ் வழியில் இந் நாட்டின் பொருளாதாரத்துக்கு இந்திய மக்கள் அத்தியாவசியமானவர்களாக ஆகியிருக்கிறார்கள். நமது மக்கள் கூட்டத்தில் அவர்கள் நிரந்தரப் பகுதியினராக இருந்து, இந் நாட்டின் நலன்களைப் பெரிதும் துய்க்கக் கூடிய நிலையை அடைவார்கள் என்று நம்புகிறேன். மலாயா நீடூழி வாழ்க! மெர்தேகா!

❊

மலாயாவின் பேரரசரும் அவர்தம் மனைவியாரும்

யாங் டி- பெர்த்துவான் அகோங்

ராஜா பெர்மைசூரி அகோங்

ஜோகூர் சுல்தான்

★

ஜோகூர் சுல்தான்: மேன்மை தங்கிய மேஜர் – ஜெனரல் ஸர் இப்ராஹிம் இப்னி அல்-மர்ஹூம் சுல்தான் அபு பக்கர், டி. கே., எஸ். பி. எம். ஜே., ஜி. சி. எம். ஜே., கே. பி. ஈ.(மில்), ஜி. பி. ஈ., ஜி. சி. ஓ. சி. (I), 1873 செப்டம்பர் 17-ல் சிங்கப்பூரிலுள்ள பிடாடரி இஸ்தானாவில் பிறந்தார். 1895 செப்டம்பர் 7-ல் சிம்மாசனமேறினார். நவம்பர் 2-ல் முடிசூட்டப் பெற்றார். ஜோகூர் பாருவில் கல்வி கற்றார். 1892 ல் பட்டத்து இளவரசராகப் பிரகடனம் செய்யப்பட்டார். 1940-ல் ருமேனியப் பெண்மணியான குமாரி மார்ஸல்லா மெண்டிலே மணந்தார். 1955 செப்டம்பரில் தமது ஆட்சியின் வைர விழாக் கொண்டாடினார். வாலிபத்தில் அவர் சிறந்த விளையாட்டு நிபுணராக விளங்கினார்.

பஹாங் சுல்தான்

★

பஹாங் சுல்தான்: மேன்மை தங்கிய சுல்தான் ஸர் அபு பக்கர் ரி' அயாத் உதீன் அல்முவாட்ஜாம் ஷா இப்னி அல்-மர்ஹூம் அல் மு' தாஸிம் பில்லா சுல்தான் அப்துல்லா, ஜி. சி. எம். ஜே., 1904. மே 29-ல் பிறந்தார். 1932, ஜூன் 23-ல் தம் தந்தையாருக்குப் பின் பட்டமேற்றார். பேராவின் காலஞ்சென்ற சுல்தான் இஸ்கந்தர் ஷாவின் மகள் ராஜா பாத்திமாவை மணந்தார். கோலக் கங்சார் மலாய்க் கல்லூரியில் கல்வி பயின்றார். இவர் சிறந்த விளையாட்டு நிபுணர். டென்னிஸ் கோல்ப், போலோ பில்லியர்ட்ஸ், செஸ் விளையாட்டுகளும் இவரது பொழுதுபோக்குகளாகும்.



நெகிரி செம்பிலான் சமஸ்தானாதிபதி

★

நெகிரி செம்பிலான் சமஸ்தானாதிபதி: யாங் டி - பெர்த்துவான் புஸார் மேன்மை தங்கிய துவாங்கு அப்துல் ரஹ்மான் இப்னி அல்-மர்ஹூம் துவாங்கு முகமட், கே. சி. எம். ஜி., 1895, ஆகஸ்டு 24-ல் பிறந்து, 1933 ஆகஸ்டு 3-ல் தம் தந்தையாருக்குப் பின் சிம்மாசனம் ஏறினார். கோல ஜம்போல் மலாய்ப் பள்ளியிலும், கோலக்கங்சார் மலாய்க் கல்லூரியிலும் கல்வி பயின்றார். 1928-ல் பாரிஸ்டர் ஆனார். 1930-ல் கோலாலம்பூர் இரண்டாவது மாஜிஸ்திரேட்டாக நியமிக்கப்பட்டார். 1931-ல் ஈப்போ சுப்ரீம் கோர்ட்டில் உதவி ரிஜிஸ்தாரராகவும், 1932-ல் கோல லங்காட் (சிலாங்கூர்) ஆக்டிங் ஜில்லா அதிகாரியாகவும், 1933-ல் பத்தாங் பாடாங் (பேரா) ஆக்டிங் ஜில்லா அதிகாரியாகவும் பணியாற்றி யிருக்கிறார்.

சிலாங்கூர் சுல்தான்

★

சிலாங்கூர் சுல்தான்: மேன்மை தங்கிய ஸர் ஹிஸா முதீன் ஆலம் ஷா அல்ஹாஜ் இப்னி அல்-மர்ஹூம் சுல்தான் அலா'தீன் சுலைமான் ஷா, கே. சி. எம். ஜி., 1898 மே, 13-ல் பிறந்தார். 1938 ஏப்ரல் 4-ல் சிம்மாசனம் ஏறினார். பண்டார் மலாய்ப் பள்ளியிலும், கோலக்கங்சார் மலாய்க் கல்லூரியிலும் கல்வி பயின்றார். சிலாங்கூர் துங்கு அம்புவான் ராஜா ஜெமா பிந்தி அல்மர்ஹூம் ராஜா அஹமத்தை மணந்தார். 1952 ஆகஸ்டில் மெக்காவுக்கு யாத்திரை செய்தார். இந்த யாத்திரை செய்த முதல் சுல்தான் இவரே. தோட்ட விவசாயம், கோழிப்பண்ணை, விவசாயம் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு உடையவர்.

கிட்டா சுல்தான்

★

கிட்டா சுல்தான்: மேன்மை தங்கிய துங்கு ஸர் பத்லிஷா இப்னி அல்-மர்ஹூம் சுல்தான் அப்துல் ஹமீத் ஹலிம் ஷா, கே. சி. எம். ஜி. கே. பி. ஈ. 1894 மார்ச்சு 17-ல் பிறந்து, 1943 மே 15-ல் சிம்மாசனம் ஏறினார். 1912-ல் காலம் சென்ற ஸயாம் மன்னர் ஆருவது ராமாவின் செலவில் இங்கிலாந்துக்குக் கல்வி கற்க அனுப்பப்பட்டார். 4 ஆண்டுகளுக்குப் பின் ஆக்ஸ்போர்டு, வாட்ஹாம் கல்லூரியில் சேர்ந்தார். கிட்டாவுக்குத் திரும்பி வந்ததும் சிவில் சர்வீஸில் சேர்ந்தார். 1926-ல் கிட்டாவின் சமஸ்தான பொக்கிஷ அதிகாரியானார். இவருடைய சகோதரர் துங்கு முகமட் காலமானதும் 1935 மார்ச்சில் ராஜ மூடா பட்டம் பெற்றார். டென்னிஸ் விளையாடுவார். தோட்ட வேலையில் பிரியம் உடையவர்.

கிளந்தான் சுல்தான்

★

கிளந்தான் சுல்தான்: மேன்மை தங்கிய ஸர் இப்ராஹிம் இப்னி அல்-மர்ஹூம் சுல்தான் முகமட் 4, டி. கே., எஸ். பி. எம். கே., எஸ். ஜே. எம். கே , கே. சி. எம்.ஜி., டி. கே. (ஜோகூர்) 1897, ஆகஸ்டு 9-ல் பிறந்து, 1944, ஜூன் 21-ல் தம் சகோதரருக்குப் பின் சிம்மாசனம்ஏறினார். அதே வருஷம் அக்டோபரில் முடிசூட்டப்பெற்றார். 1921-ல் இவர் பட்டத்து இளவரசரானார். 1911-ல் 4.வது சுல்தான் முகமதுக்கு ஏ. டி. சி. யாக இருந்தார். 1913-லிருந்து 1941 வரை கிளந்தான் சமஸ்தான சட்டசபை அங்கத்தினராக இருந்தார். 1919-ல் மஜ்லிஸ் உகாமா இஸ்லாம், இஸ்தியாதத் மிலாயுவின் (மத விவகாரங்கள், மலாய் ஆசார அனுஷ்டானங்கள் ஆகியவற்றின் சபை) தலைவரானார். 1921 லிருந்து 1929-வரை கிளந்தான் சமஸ்தான பொக்கிஷ அதிகாரியாகப் பதவி வகித்தார்.

பெர்லிஸ் ராஜா

★

பெர்லிஸ் ராஜா; மேன்மை தங்கிய ஸர் சையத் புத்ரா இப்னி அல் - மர்ஹூம் ஸையத் ஹாஸன் ஜமாலுல்லாயில், கே. சி. எம். ஜி., 1920 நவம்பர் 25-ல் பிறந்தார். 1945 டிசம்பர் 4-ல் சிம்மாசனம் ஏறினார். 1947 மார்ச் 12-ல் மகுடாபிஷேகம் நடைபெற்றது. பினாங்கு ப்ரீ ஸ்கூலில் கல்வி பயின்றார், சிம்மாசனம் ஏறுவதற்கு முன் 1938 ஏப்ரலில் பாகல் ராஜா (பட்டத்து இளவரசர்) ஆனார் 1940-ல் கங்கார் நீதி மன்றங்களிலும் பின்பு கோலாலம்பூர் லாண்ட் ஆபீசிலும் பணியாற்றினார். இங்கு மாஜிஸ்திரேட் கோர்ட்டிலும் ஓராண்டு சேவை செய்தார்.

திரெங்கானு சுல்தான்

★

திரெங்கானு சுல்தான்: மேன்மை தங்கிய ஸர் இஸ்மாயில் நாஸிர் உதீன் ஷா இப்னி அல் மர்ஹூம் சுல்தான் ஜைனல் அபிதீன், கே. சி. எம். ஜி., 1907 ஜனவரி 24-ல் பிறந்தார். 1945 டிசம்பர் 16-ல் சிம்மாசனம் ஏறினார். திரெங்கானு சிவில் சர்வீஸில் பல வருஷங்கள் பணியாற்றினார் அதில் 1929 ஏப்ரலில் ஒரு கேடட்டாக ஆனார். 1939-ல் சுப்ரீம் கோர்ட் ரிஜிஸ்தரார், 1941-ல் முதல் மாஜிஸ்திரேட், 1941-ல் உதவி சமஸ்தானக் காரியதரிசி ஆகிய பதவிகளை வகித்துள்ளார். 1935 ல் சுல்தான் சுலைமானுக்கு ஏ. டி. சி. யாக இருந்தார். போட்டோ எடுத்தல், மீன் பிடித்தல் ஆகிய துறைகளில் ஈடுபாடு உடையவர்

பேரா சுல்தான்

★

பேரா சுல்தான்: மேன்மை தங்கிய ராஜா ஸர் யூசுப் இப்னி அல் மர்ஹூம் சுல்தான் அப்துல் ஜலீல், கே. சி. எம். ஜி., 1890 ஜனவரி 15-ல் கோலக்கங்சாரைச் சேர்ந்த புக்கிட் சந்தனில் பிறந்தார். 1948 மார்ச் 31-ல் சிம்மாசனம் ஏறினர். 1912-ல் ராஜ தா' யா பிந்தி ராஜா அப்துல் ஹமீதை மணந்தார். கோலக்கங்சாரில் மலாய்ப்பள்ளியிலும், ஹோகன் பாடசாலையிலும், மலாய்க் கல்லூரியிலும் கல்வி பயின்ருர். சர்க்காரில் பற்பல பதவிகள் வகித்துள்ளார். 1935-ல் கிந்தா மாஜிஸ்திரேட்டாக இருந்தார். 1938-ல் பேரா ராஜமூடா ஆனர்.

ஸர் டொனல்டு மெக்கில்லிவ்ரே

★

1895, ஜூலை மாதத்தில் ஐக்கிய மலாயா உடன்படிக்கை செய்யப்பட்ட பின் கோலாலம்பூர், நாட்டின் தலைநகராக் கப்பட்டது. 1896-ல் லெப்டினன்ட் கர்னல் ஸர் சி. பி. எச். மிச்சல், முதல் ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டார். அன்று தொட்டு நேற்றுவரை – இடையில் ஜப்பானியர் ஆட்சி காலமும், 1948-ல் பெடரேஷன் ஒப்பந்தம் செய்யப்படும்வரை கழிந்த காலமும் தவிர – பிரிட்டிஷ் ஹைகமிஷனர்கள் நாட்டு நிர்வாகத்தில் தலைமைப் பதவியை வகித்து வந்தார்கள். மலாயா பெடரேஷனின் கடைசி ஹைகமிஷனர் ஸர் டொனல்டு மெக்கில்லிவ்ரே. இப்பதவிக்கு வருமுன் இவர் உதவி ஹைகமிஷனராகவும் இருந்தார். சிரித்த முகமும், இனிய பண்பும், நிர்வாகத் திறமையும் உடைய ஸர் டொனல்டு மலாயாவின் மெர்தேகா முயற்சிகள் அனைத்துக்கும் உற்ற துணையாக இருந்து உதவியவர்.

துங்கு அப்துல் ரஹ்மான்

(முதல் மந்திரி; அத்துடன் உள்நாட்டுப் பாதுகாப்பு–பந்தோபஸ்துக்கும், உள் நாட்டு விவகாரங்களுக்குமான மந்திரி)

★

துங்கு அப்துல் ரஹ்மான் இப்னி அல்மர்ஹூம் சுல்தான் அப்துல் ஹமீத் ஹாலிம் ஷா, 1902 பிப்ரவரி 8–ம் தேதியன்று அப்போது கிட்டா சுல்தானாக இருந்தவரின் ஏழாவது குமாரராக அலோர்ஸ்டாரில் பிறந்தார். அவருடைய தாயார் பர்மிய சயாமிய ரத்தக் கலப்புடையவர்; சயாமிய சமஸ்தானம் ஒன்றின் தலைவரான லுவாங் நாராவின் புதல்வி. அலோர்ஸ்டாரிலும், பினாங்கிலும், அப்புறம் கேம்பிரிட்ஜ் ஸெயின்ட் காதரின் கல்லூரியிலும் படித்து பி. ஏ. பட்டம் பெற்று, 1949-ல் பாரிஸ்டராகவும் ஆனார். மலாயாவுக்குத் திரும்பி வந்ததும் பெடரல் சட்ட இலாகாவில் உதவி பப்ளிக் பிராசிக்யூடர் ஆனார். 2 ஆண்டுகளுக்குப் பின் அப் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு அம்னோவின் தலைமைப் பதவியை ஏற்றார். 1955-ல் முதல் மந்திரியானார். லண்டனுக்குக் கோஷ்டியோடு சென்று மெர்தேகா பேச்சு வார்த்தைகளை வெற்றிகரமாக முடித்தார். அதன் பலனாகவே இன்று மலாயா சுதந்திர நாடாகிறது. மலாயாவின் கால்பந்து விளையாட்டுச் சங்கத்திற்கும் துங்கு தலைவராக இருக்கிறார்.

கர்னல் ஸர் எச். எஸ். லீ

(நிதி மந்திரி)

★

கர்னல் ஸர் ஹென்றி ஹா ஷிக் லீ, கே. பி. ஈ., சி. பி. ஈ., ஜே. பி, 1901, நவம்பர் 19-ல் பிறந்தார். ஹாங்காங் கல்லூரியிலும், லண்டன், கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைகளிலும் படித்து எம். ஏ. பட்டம் பெற்றார். 1924–முதல் ஈயச் சுரங்க அதிபராக இருந்து வருகிறார். அநேக சங்கங்களிலும், பாடசாலை கமிட்டி போன்றவற்றிலும் இவர் தலைவராகவோ, உபதலைவராகவோ, ஆலோசனையாளராகவோ இருந்து வருகிறார். 1948–லிருந்து இன்றுவரை பெடரல் சட்டசபையிலும், பெடரல் நிர்வாக சபையிலும் அங்கத்தினராக இருந்து வருகிறார், 1942, 45–ல் நேச நாட்டுப் படையில் கர்னலாக இருந்தார். 1957 ஜூன் 13–ல் ராணியார் பிறந்த தின பட்டமளிப்பில் ஸர் பட்டம் பெற்றார்.

டாக்டர் இஸ்மாயில்

(வர்த்தக, தொழில் மந்திரி)

★

டாக்டர் இஸ்மாயில் பின் டத்தோ அப்துல் ரஹ்மான் 1915, நவம்பர் 4–ல் ஜோகூர்பாருவில் பிறந்தார். அங்கும், மெல்போர்ன் சர்வகலாசாலையிலும் படித்து வைத்தியத் துறையில் பட்டம் பெற்ருர். ஜோகூர் சமஸ்தான, ஜோகூர்பாரு ஜில்லா க்ஷயரோகத் தடுப்பு சங்கங்களை ஸ்தாபித்தவர். ஜோகூர் சமஸ்தான சட்டசபையில் 1948-லிருந்து 54 வரையிலும் அங்கத்தினராக இருந்தார். 1955–லிருந்து பெடரல் சட்ட சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினராக இருந்து வருகிருர். 1951-ல் அம்னேவில் சேர்ந்து உபதலைவரானுர்.

டத்தோ ரஜாக்

(கல்வி மந்திரி)

★

டத்தோ அப்துல் ரஜாக் பின் ஹுஸைன் 1922, மார்ச் 11–ல் பஹாங்கில் பெக்கானைச் சேர்ந்த புலாவ் கிலாடியில் பிறந்தார். லங்கார் மலாய்ப் பள்ளியிலும், கோலக்கங்சார் மலாய்க்கல்லூரியிலும் கல்வி கற்ருர்; சிங்கப்பூர் ராபிள்ஸ் கல்லூரியிலும் பயிற்சி பெற்றுள்ளார். 1947 அக்டோபரிலிருந்து இங்கிலாந்தில் சட்டக் கல்வி பயின்று, 1949 ஏப்ரலில் இறுதிப் பரீக்ஷை தேறினுர். 1950 மே மாதத்தில் மலாயாவுக்குத் திரும்பி, எம். சி. எஸ். அதிகாரியானுர். 1955-ல் பஹாங்கின் ஆக்டிங் மந்திரி புஸாரானுர். 1951–லிருந்து அம்னேவின் உபதலைவராக இருந்து வருகிருர். 1955 ஆகஸ்டில் கல்வி மந்திரியாக நியமிக்கப்பட்டார்.



லியாங் யூ கோ

(சுகாதார, சமூகநல மந்திரி)

★

ஸ்ரீ லியாங் யூ கோ 1888-ல் பேராவிலுள்ள வடசாலாவில் பிறந்தார். சீனவில் கல்வி கற்று 13-ம் வயதில் மலாயாவுக்கு வந்து, ஈப்போ ஆங்கிலோ சைனீஸ் பாடசாலையிலும், பினங்கு செயின்ட் சேவியர்ஸ் பள்ளியிலும் சேர்ந்து படித்துத் தேறினர். பின்பு லண்டன் சர்வகலாசாலையில் சட்டம், அரசியல், பொருளாதாரம், சமூக சாஸ்திரம் ஆகியவை கற்று, பட்டம் பெற்ற பின் சீனவில் யூனன் மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தார். மலாயாவுக்கு வந்து ஈப்போவில் வழக்கறிஞர் வேலை பார்த்தார். 1932-ல் சீனவுக்குத் திரும்பி, ஒரு நிர்வாக அதிகாரியானர். இரண்டாவது உலக யுத்தத்தின்போது யூனன் மாகாணத்தில் பூ ஹாய் ஜில்லாவின் அதிகாரியாகவும் வேலை செய்தார், சீன ராணுவம் ஒன்றில் மேஜர் ஜெனரல் பதவி வகித்தார். 1948-ல் பெடரல் சட்டசபை ஏற்படுத்தப்பட்டது முதல் இவர் ஒரு அங்கத்தினராக இருந்து வருகிறார். ம. சீ. ச. வின் ஸ்தாபகர்களில் இவரும் ஒருவர்.

வீ. தி. சம்பந்தன்

(தொழிலாளர் மந்திரி)

★

ஸ்ரீ வீ. தி. சம்பந்தன் சுங்கைசிப்புட்டில் 1919, ஜூன் 16-ல் பிறந்தார். கோலக்கங்சார் கிளிபோர்டு பாடசாலையில் படித்து, பின்பு தென் இந்தியாவுக்குச் சென்று அண்ணமலை சர்வகலாசாலையில் படித்துத் தேறி, பி. ஏ. பட்டம் பெற்றார். கல்லூரிப் படிப்புக்குப் பின் தோட்ட நிர்வாகத்தில் ஈடுபட்டார். ம. இ. கா. வுக்கு மும்முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தலைவர். கல்வித் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் சுங்கைசிப்புட் மகாத்மா காந்தி பாடசாலையின் ஸ்தாபகர்களில் ஒருவர் பேரா. சமஸ்தான கல்வி போர்டின் அங்கத்தினர்.



இஞ்சே சுலைமான் பின் டத்தோ அப்துல் ரஹ்மான்

(இயற்கை வளங்களுக்கும், ஸ்தல ஸ்தாபனத்துக்கும் மந்திரி)

★

இஞ்சே சுலைமான் 1912, பிப்ரவரி 27-ல் ஜோகூர்பாருவில் பிறந்தார். அங்கு புக்கிட் ஜஹாரா ஆங்கிலப் பள்ளியிலும், சிங்கப்பூர் ஆங்கிலக் கல்லூரியிலும், ராபிள்ஸ் பாடசாலையிலும் கல்வி கற்றார். 1933-ல் கேம்பிரிட்ஜ் ராணியார் கல்லூரியில் சேர்ந்து பி. ஏ. ஹானர்ஸ் பட்டமும், 1936-ல் பார் அட்-லா பட்டமும் பெற்றார். 1939-ல் ஜோகூருக்குத் திரும்பி வந்து சட்ட இலாகாவில் சேர்ந்தார். ஜோகூர் பாரு சிகாமட், பத்து பஹாட் ஆகிய நகரங்களில் மாஜிஸ்திரேட்டாக இருந்தார். யுத்தத்துக்குப் பின் சுயேச்சையாக வழக்கறிஞர் வேலை செய்தார் அம்னோவில் துங்கு அப்துல் ரஹ்மான் தலைமையை ஏற்றபோது இவர் அதில் சேர்ந்தார் ஜோகூர் சமஸ்தான சட்டசபையில் அங்கத்தினராக இருந்துள்ளார் அநேக கமிட்டிகளிலும் அங்கம் வகித்துள்ளார்.

✻

இஞ்சே அப்துல் அஜீஸ் பின் ஈஷாக்

(விவசாய மந்திரி)

★

இஞ்சே அப்துல் அஜீஸ் பேராவில், லாருட் ஜில்லா பாடாங் காஜாவில் 1914-ல் பிறந்தார். கோலக்குரோ, தைப்பிங் ஆகிய இடங்களிலும், சிங்கப்பூர் விக்டோரியா பிரிட்ஜ் பாடசாலை, ராபிள்ஸ் பாடசாலை ஆகியவற்றிலும் கல்வி கற்றார். 1936-ல் சர்க்கார் உத்தியோகத்தில் சேர்ந்தார். சிலாங்கூர், பஹாங் மீன்பிடி இலாகா அதிகாரியாக இருந்தார் 1934–36-லும் 1942-க்குப் பிறகும் பத்திரிகையாளராக இருந்தார். 1948-ல் அம்னோவில் சேர்ந்தார் 1951-ல் மலாயா சுதந்திரக் கட்சி அங்கத்தினராகி 1952-ல் திரும்பவும் அம்னோவில் சேர்ந்துவிட்டார். கோலாலம்பூர் நகர சபையிலும் அநேக கமிட்டிகளிலும் அங்கத்தினராக இருந்துள்ளார். மலாயா பத்திரிகையாளர் சங்க ஸ்தாபகர்களில் ஒருவர். உத்தியோக முறையில் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்து, அதன் அபிவிருத்திகளை பார்வையிட்டுத் திரும்பியவர்.

✻

இஞ்சே சர்டான் பின் ஹாஜி ஜுபீர்

(பொது மராமத்து, தபால், தந்தி மந்திரி)

★

இஞ்சே சர்டான் 1917-ல் பத்து பஹாட்டில் பிறந்தார். மலாய்ப் பள்ளியிலும், சிங்கப்பூர் ராபிள்ஸ் பாடசாலையிலும் கல்வி கற்று, சட்டக் கல்வி பெற 1937-ல் இங்கிலாந்துக்குச் சென்றார். 1941-ல் திரும்பிவந்து, பிரிட்டிஷ் ராணுவ நிர்வாகத்துக்குப்பின் காலனியிலும் பெடரேஷனிலும் வழக்கறிஞராக வேலை செய்துவந்தார். 1947-ல் சிங்கப்பூர் நகரசபைக் கமிஷனரானார். 1948-ல் தேர்ந்தெடுக்கப்பட்டு சிங்கை சட்ட சபையில் 1951 வரை அங்கம் வகித்தார், 1951-ம் வருஷ மத்தியில் ஜோகூர் பாருக்கு வந்தபின் 1952-ல் ஜோகூர் சமஸ்தான சட்ட சபை அங்கத்தினராக நியமிக்கப் பெற்றார். 1954-ல் பெடரல் சட்ட சபை அங்கத்தினராகவும் நியமிக்கப் பட்டார். 1951-லிருந்து அம்னோ இளைஞர் பகுதியின் தலைவராகவும், அம்னோ உப தலைவர்களில் ஒருவராகவும் இருக்கிறார்.

ஓங் யோக் லின்

(போக்கு வரத்து மந்திரி)

★

ஸ்ரீ ஓங் யோக் லின் 1918-ல் கோலாலம்பூரில் பிறந்தார். இங்கு விக்டோரியா பாடசாலையில் கல்வி பயின்றார். வர்த்தகத் தொழிலில் இறங்கினார். கூட்டணி தேசீய நிர்வாகக் கமிட்டி, ம. சீ. ச. மத்திய காரியக் கமிட்டி ஆகியவற்றின் அங்கத்தினர். சிலாங்கூர் சமஸ்தான சட்ட சபையிலும் அங்கத்தினராக இருந்துள்ளார். அநேக சங்கங்களிலும், கமிட்டிகளிலும், ஸ்தாபனங்களிலும் அங்கத்தினராகவோ, ஆலோசகராகவோ பதவி வகிக்கிறார். ம. சீ. ச. சிலாங்கூர்க் கிளையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மேற்கண்ட 10 மந்திரிகளுடன் 4 உதவி மந்திரிகளும் உள்ளனர். இஞ்சே பஹமான் பின் சம்ஷுதீன் – உள்நாட்டு விவகாரங்களுக்கான பிரதம உதவி மந்திரி; இஞ்சே முகமட் கிர் பின் ஜொஹாரி–வர்த்தக, தொழில் உதவி மந்திரி; இஞ்சே அப்துல் ரஹ்மான் பின் ஹாஜி தாலிப் – இயற்கை வள, ஸ்தலஸ்தாபன உதவி மந்திரி; ஸ்ரீ டு ஜூன் ஹிங்– உதவி கல்வி மந்திரி,



பிரேஸர் மலையில் ஒரு பங்களா

(கோலாலம்பூரிலிருந்து 65 மைல் தூரத்தில், பஹாங் எல்லைக்குள் இருக்கும் சுகவாசஸ்தலமான பிரேஸர் மலை 4280 அடி உயரமுள்ளது. இது மலாயாவின் அழகுமிக்க மலைவாசஸ்தலங்களில் ஒன்ருகத் திகழ்கிறது.)

இயற்கை எழிலின் நடுவே, அழகியதோர் வீதி — பிரேசர் மலையில்

ஒற்றுமையே முதல் தேவை

இஞ்சே ஸர்டான் பின் ஹாஜி ஜுபீர்
மராமத்து, தபால் தந்தி மந்திரி

நாம் அன்புடன் நேசிக்கும் நமது நாட்டுக்கு 1957-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதியன்று சுதந்திரமும் அரசுரிமையும் கிடைக்கச் செய்த சர்வ வல்லமையுள்ள அல்லாவின் அன்புக்கும் ஆசிக்கும் நாம் வணக்கம் செலுத்துவோமாக. புதிதாகப் பிறக்கும் நமது சுதந்திர நாட்டை நாம் நிச்சயமாக வரவேற்போம். நாம் பெருமகிழ்ச்சியுடன் கொண்டாடும் சரித்திர முக்கியத்துவம் நிறைந்த இந்தப் புனித நாளில், புதிதாக உதயமாகும் சுதந்திர நாட்டின் உண்மையான பிரஜைகள் என்ற முறையில், பெருமைக்குரிய இந்த மாபெரும் சாதனையைக் கண்டு நாம் பெருமிதமடையவேண்டும்.

வெவ்வேறு பழக்கங்கள், மதம், மொழி ஆகியவைகளைக் கொண்ட மலாய்க்காரர், சீனர், இந்தியர், மற்றும் சிறுபான்மை சமூகத்தினர் ஆகிய பல்வேறு இனத்தவர் வாழும் நாடாகிய இந் நாட்டில் மாறுபட்ட அம்சங்கள் நிலவியும் கூட எவ்வித தடங்கலுமின்றி மலாயா சமஷ்டி சுதந்திரம் அடைந்திருப்பது உண்மையிலேயே ஒரு அதிர்ஷ்டம் தான்.

வர்த்தகத்திலோ, நிர்வாகத்திலோ முக்கிய பங்காற்றும் வெவ்வேறு இனத்தவர்களிடையே நிலவும் மாறாத விசுவாசம், ஒற்றுமை, சகிப்புத் தன்மை, பரஸ்பர மரியாதை ஆகியவை காரணமாகத்தான் நாம் சுதந்திரம் அடைந்திருக்கிறோம் என்பது மறுக்க முடியாத உண்மை. இப்போது காட்டப்படும் மகத்தான ஒற்றுமை இந்த சகாப்தத்தின் அரசியல் சரித்திரத்திலேயே புதுமையானதும் ஒப்பு உவமையற்றதுமாகும். ஒற்றுமை சரியான முறையில் உருவாகுமானால் அதன் பலன் என்ன என்பதைத் துலக்கமாகக் காட்டக் கூடியச் சிறந்த உதாரணம் இது.

சுதந்திரம் அடைவதானது நாம் எதிர்காலத்தில் தொடர்ந்து அடையவிருக்கின்ற அனுபவங்களையும் தன்னுள் கொண்டதாகும். நமது பங்கையும் சேர்த்துக் கடுமையாக உழைத்து, வெற்றிகரமாக ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு செல்லுவதன் தொடக்கமே இது. நமது நாட்டின் சரித்திரத்தில் புதியதொரு அத்தியாயம் தொடங்குகிறது. எங்ஙனம் வழி நடத்திச் செல்லப்படுகிறதென்பதைப் பொறுத்தே அதன் பெருவெற்றியும் இருக்க முடியும். உலகின் பார்வை அனைத்தும் மலாயா மீது திருப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் மலாயாவின் எதிர்காலம் முழுக்கமுழுக்க நம்மைப் பொறுத்தேயுள்ளது. புதிதாக உதயமாகும் தேசத்தின் பொறுப்புக்கள் பிரும்மாண்டமானவை. உடனடியாக இல்லாவிட்டாலும் படிப்படியாகவாவது, காலனித்துவ அதிகாரம் குறைந்து உள்நாட்டுத் தலைவர்களும், உள்நாட்டு அறிவுத்திறனும்பெருக வழி வகுக்கும் அதிகார மாற்றக் காலத்திலே, அத்தகைய பொறுப்புக்கள் மக்களையே சாரும். இத்தகைய மாறுதல்களின் வேகம் பிரமாதமாக அதிகரிக்கும் என்று தோன்றுகிறது. அப்படி அதிகரிக்கும்போது, பெரும் பொறுப்புக்களை மக்கள் சுமக்க நேரும். இந்த வேகத்துடன் ஒத்துச் செல்ல, புதிதாக உருவாகும் மலாயா போன்ற நாடுகளில் உண்மையான, திறமை வாய்ந்த தலைவர்கள் பெரிதும் தேவைப்படுவார்கள். உலக சுதந்திர நாடுகளின் மத்தியில் மலாயா உரிய இடம் பெறுவதற்கு வழி வகுப்பவர்கள் தலைவர்களே. இதைச் செய்து முடிக்க முதலில் தேவைப்படு

வது ஒற்றுமையே. எந்த நிறத்தவர், எந்த மதத்தவர், எந்த இனத்தவராயிருப்பினும் மலாயர்கள் அனைவரும் இதை மனத்தில் கொள்ள வேண்டும்.

மலாயர்கள் எல்லோரும் கூட்டணி அரசாங்கத்திற்கு முழு ஆதரவு தரவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அதன் மூலம், குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் பொதுவான அளவில் எல்லா மக்களுக்கும் நன்மை விளைவிக்கக் கூடிய தனது ஐந்து ஆண்டுத் திட்டத்தைக் கூட்டணி அரசாங்கம் செயல்படுத்தும் சக்தி பெறும். எனது இலாகாக்களின் சிப்பந்திகளுடைய ஒத்துழைப்புடன் திட்டத்தின்படி வேலை நடக்க, மராமத்து, தபால் தந்தி மந்திரி என்ற முறையில் என்னால் முடிந்ததைச் செய்வேன். என்னுடைய ஆலோசனையின் பேரில், 1957-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31ம் தேதியை சுதந்திரம் பெறும் தேதியாக நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை 1956-ம் வருடம் டிசம்பர் மாதம் துணிவுடன் நிறைவேற்றியஅம்னோ இளைஞர் பகுதி அங்கத்தினர்களை அதன் தலைவர் என்ற முறையில் நான் வாழ்த்துகிறேன்.

மலாயா சமஷ்டியில் வாழ்கின்ற சகல இளைஞர்களும் அவர்கள் எந்த நிற, வர்க்க, சமூகத்தைச் சேர்ந்தவராயிருப்பினும் ஒரே ஐக்கிய தேசிய இனமாகி, பிற சமூக இளைஞர்களுடன் நெருக்கமாக உறவு கொண்டு சேவை புரிந்து கூட்டணி அரசாங்கத்துக்கு ஆதரவு தரும்படி நான் வேண்டுகிறேன். புதிய சுதந்திர, அரசுரிமை பெற்ற ராஜ்யமாகிய 'பெர்செக்குதுவான் தானு மலாயா'வில் மலாயர் ஒவ்வொருவரும் நன்கு வாழ நான் வாழ்த்துகிறேன். மெர்தேகா!

தமிழ் நேசனைப் பாராட்டுகிறேன்

லியாங் இயூ கோ

(சுகாதார, நலனபிவிருத்தி மந்திரி; நாளையிலிருந்து மலாக்காவின் கவர்னர்)

கூட்டணியால் வழி நடத்தப்பட்டு அதனுடைய தலைமையின் கீழ் மக்களுடைய ஒற்றுமையாலும் ஒத்துழைப்பாலும் சுதந்திரமடையும் தினத்தைக் கொண்டாட, மெர்தேகா மலர் பிரசுரிக்க உரிய காலத்தில் பாராட்டத்தக்க முயற்சியை மேற்கொண்டிருக்கும் "தமிழ் நேசனைப் பாராட்டுவதில் நான் மிகமிக மகிழ்ச்சியடைவதுடன் பெருமிதமும் கொள்கிறேன். இந்நாட்டில் உள்ள பிரதானமான இந்தியப் பத்திரிகை என்ற முறையில் இப்போதும் வருங்காலத்திலும், இந்நாட்டு ஜனத்தொகையில் முக்கிய விகிதாசாரத்தினராகிய இந்திய மக்களுக்கு மெர்தேகாவின் தன்மையையும் பலாபலன்களையும் விளக்கும் முக்கியமான பணி "தமிழ் நேச"னுக்கு உண்டு.

கலாசாரத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் இந்நாட்டுக்கு இந்திய மக்கள் பெரும் உதவி புரிந்துள்ளார்கள். இன. நிற, வர்க்க பேதங்கள் மறைந்து பழங்கதையாக மாறவிருக்கும் நவ மலாயாவின் அபிவிருத்திக்கும். முன்னேற்றத்திற்கும் இந்தியர்கள் தொடர்ந்து தங்கள் பணியைச் செய்து வருவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

சுதந்திரத்தின் பரிபூரணமான பலனை அடைவதற்கு, சுதந்திரம் பெறுவதில் காட்டப்பட்ட உற்சாகம், சக்தி, உறுதி ஆகியவற்றை ஆக்க வழிகளில் திருப்பிவிட்டு நம்மிடையே உள்ள சமூக, பொருளாதாரக் குறைபாடுகளை அகற்றி மலாயாவைத் தேனும் பாலும் வழிந்தோடும் நாடாகச் செய்வது அவசியமாகும் இந்த லட்சியத்தை அடைய கூட்டணி அரசாங்கம் பிரதிக்ஞை செய்து கொண்டிருக்கிறது. அது நிறைவேறுவதற்குப் பாடுபட வேண்டிய பொறுப்பு நம்மைச் சார்ந்தது.

தமிழ்க்கல்வியின் எதிர்காலம்

டத்தோ ஸர் கிளவ் துரைசிங்கம்

~பெடரல் சட்டசபை அங்கத்தினர்~

மலாயாவில் தமிழ்க்கல்வியின் எதிர்காலம் பற்றித் தீர்க்க தரிசனம் கூறக் கூடியவன் தமிழனாக இருந்தாலும், அல்லது வேறு யாராக இருந்தாலும் அவன் மிகவும் தைரியசாலியாகவே இருக்க வேண்டும். இப்போது அரசியல், சமூக, கல்வித் துறைகளில் அநேக பிரச்னைகள் பரஸ்பரம் ஒன்றையொன்று பின்னிக் கொண்டு கிடக்கின்றன. அடுத்து வரும் வருஷங்களில் இப் பிரச்னைகள் இன்னும் அதிகமாகக் கடுமையாகும். இந்தப் பிரச்னைகள்தான் எதிர்காலக் கல்வியின் போக்கை நிர்ணயிக்கும்.

தமிழ்க் கல்வியின் எதிர்காலம் கீழ்க்காணும் மூன்று அம்சங்களைப் பொறுத்திருக்கிறது:

1. சர்க்காரின் கல்விக் கொள்கைகள்;

2. மலாயாவில் நிரந்தரமாக வசிக்கப் போகிறவர்களும், பெடரல் பிரஜைகளாக இருப்பவர்களுமான தமிழர்களின் எண்ணிக்கை;

3. தங்கள் மொழி சம்பந்தமாகத் தமிழர்களுக்குள்ள மனப்போக்கு.

முதல் அம்சமாகிய சர்க்கார் கொள்கையைப் பற்றிப் பார்ப்போம்: சென்ற வருஷங்களில் தமிழ்க் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டிருப்பதை மலாயாவில் வாழும் எல்லாத் தமிழர்களும் கவனிக்க வேண்டுமென்றும், ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன். யுத்தத்துக்கு முன், ரப்பர்த் தோட்ட முதலாளிகளும், சுரங்க முதலாளிகளும் தங்கள் தோட்டங்களிலும் சுரங்கங்களிலும் பள்ளிக்கூடங்கள் திறக்க வேண்டுமென்று தொழிலாளர் சட்டத்தின் மூலம் உத்தரவிடப்பட்டது. இந்தத் தோட்டப் பாடசாலைகளும், சுரங்கப் பாடசாலைகளும் பெயரளவுக்குத்தான் பாடசாலைகளாக இருந்தன; இவற்றில் கற்பிக்கப்பட்ட தமிழ்க் கல்வியின் தரம் பரிதாபத்துக்குரியதாக இருந்தது. இந்தியர்களும், இலங்கையர்களுமாக ஒரு சில தமிழர்கள் நகரப் பகுதிகளில் பிரைவேட் தமிழ்ப் பாடசாலைகளை நடத்தி, குறைந்த பட்சம் தமிழ்மொழியின் ஆரம்ப ஞானத்தையாவது குழந்தைகளிடம் நிலைநிறுத்த முயன்றார்கள். மலாயா ஜப்பானியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றபின், தமிழ்ப் பாடசாலைகள் சம்பந்தமாகச் சர்க்காரின் கொள்கை மாறியது. அநேகமாக மலாயாவில் உள்ள ஒவ்வொரு தமிழ்ப் பாடசாலைக்குமே தாராளமான உதவிநிதி கொடுக்கப்பட்டது. இந்த உதவிநிதியின் மொத்தத் தொகை யுத்தத்துக்கு முன் ஒரு சில [illegible] ஆயிரம் வெள்ளியாகவே இருந்தது. அது 1946-ல் 2,70 000 வெள்ளியாகவும், 1953-ல் 33,65,625 வெள்ளியாகவும் அதிகரித்தது; தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது.

மலாயாவின் மொழிகளில் ஒன்று என்ற முறையில் தமிழின் முக்கியத்துவத்துக்கு 1952-ம் வருஷக் கல்விச் சட்டமும், 1956-ல் இயற்றப்பட்ட சட்டமும் பூரணமாக அழுத்தம் கொடுத்துள்ளன. வருஷந்தோறும் பட்ஜெட்டுகளில் தமிழ்க் கல்விக்கும், தமிழ்ப் பாடசாலைகளுக்கும் தாராளமான உதவி நிதி ஒதுக்கப்படுகிறது. மலாயா சர்வகலாசாலையில் தமிழ்ப் பகுதி ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று அலெக்ஸாண்டர்—கார் ஸாண்டர்ஸ் சிபாரிசுகள் செய்தார்; அத்துடன் ஆரம்ப, உயர்நிலைத் தமிழ்க் கல்வி சம்பந்தமாகச் சர்க்கார் திட்டவட்டமான கொள்கையோடு இருந்திருக்கிறது. ஆகவே, தமிழர்களின் கலாசார அபிலாஷைகளுக்கு நியாயமான அளவில் பெடரேஷன் சர்க்கார் உதவியிருக்கிறது என்றே நான் கூறுவேன்.

அடுத்தபடியாக பெடரல் பிரஜைகளாக உள்ள தமிழர்களின் எண்ணிக்கை பற்றிய இரண்டாவது அம்சத்தைக்

கவனிப்போம்: இந் நாட்டில் நிரந்தரமாக வாழும் தமிழர்களின் எண்ணிக்கை அற்பசொற்பமான மைனாரிடியாகக் குறைந்து விட்டால், தமிழ்க் கல்வி சம்பந்தமான பொறுப்பை எந்த அரசாங்கமும் தொடர்ந்து மேற்கொள்ளாது என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை. அதனால் இந்நாட்டின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து, குடும்பங்களோடும் சொத்து சுகங்களோடும் இங்கே வசிப்பதா இல்லையா என்பதைத் தமிழர்கள் இறுதியாகத் தீர்மானிக்கவேண்டியது அவசியம்.

மூன்றாவது அம்சம் தமிழர்களின் மன விருப்பத்தைப் பொறுத்த விஷயமாகும். ஜப்பானியர் ஆதிக்கத்துக்கு முன் தமிழறிவும், தமிழ்க் கலாசார அறிவும் தேவையற்றவையென்றும், சற்று "நாகரிகமில்லாதவை" என்றும் கருதப்பட்டன. ஆனால், இப்போது தமிழினத்தின் மாபெரும் புராதனக் கலாசாரத்தினிடம் உண்மையான ஈடுபாடும், பற்றும் ஏற்பட்டிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. இந்தியக் கல்விமான்களும், இந்தியக் கலைஞர்களும், இந்தியத் திரைப் படங்களும் தமிழர்களுக்கு அவர்களுடைய மூதாதையரின் மகத்தான பிதுரார்ஜிதத்தை நினைப்பூட்டியிருக்கின்றனர். மலாயாத்தீபகற்பம் முழுவதிலும் தோன்றியுள்ள சங்கீத, நாடக, நடனப் பாடசாலைகள், இப்போது தமிழ்ப் பற்று தமிழர்களின் உள்ளத்தில் உறுதியாக வேரூன்றியிருப்பதை எடுத்துக்காட்டுகின்றன. இந்தக் கலாசார விழிப்புணர்ச்சியைத் தமிழ்த் தலைவர்கள் நிரந்தரமாகப் பேணி வந்தால், எதிர்கால மலாயாவில் தமிழ் மொழி என்றென்றும் நிலைபெற்று விளங்கும்.

(129-ம் பக்கம் பார்க்க)

"மலாயாவின் ஷேக்ஸ்பியர்" முன்ஷி அப்துல்லா

மலாயாவின் ஷேக்ஸ்பியர் என்று மலாய்க்காரர்களால் போற்றப்படுகிற முன்ஷி அப்துல்லா, மலாய்க்காரர்களை விட தமிழர்களுக்குத்தான் நெருங்கிய உறவுடையவர்! அவருடைய முன்னோர் தமிழ் ரத்தக் கலப்புடையவர்கள். அரேபியாவில் ஈமன் நாட்டைச் சேர்ந்த ஷேக் அப்துல் காதர் என்பவர் நாகூருக்கு வந்து அங்கே ஒரு தமிழ்ப்பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு 4 புதல்வர்களைப்பெற்றெடுத்த பின் அங்கேயே காலமானார். மூத்த புதல்வர் முகம்மது இப்ராஹிம் மலாக்காவுக்கு வந்து, பெரியாச்சி என்ற தமிழ்ப் பெண்ணை மணந்தார். இவர்களுடைய புதல்வரான அப்துல் காதர் தான் முன்ஷி அப்துல்லாவின் தந்தை. அப்துல் காதர் தமிழிலும் மலாயிலும் வல்லவர். சுங்கை பாருவில் ஒருபெண்ணை மணந்து 2 குழந்தைகளைப் பெற்ற பின் அம் மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு மலாக்காவுக்கு வந்தார் அப்துல் காதர். அங்கு 1785-ல் ஸெலாமா என்னும் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டார். ஸெலாமாவின் தந்தை கிட்டாவிலிருந்து மலாக்காவுக்குக் குடியேறிய ஒரு இந்தியர். அப்துல் காதருக்கும்ஸெலாமாவுக்கும்ஐந்தாவது குழந்தையாக 1796 ஆகஸ்டு 12-ல் பிறந்தார், "மலாயாவின் ஷேக்ஸ்பியர்" அப்துல்லா. அவருடைய தாய் இந்தியப் பெண்; அவருடைய தகப்பனாரைப் பெற்ற பாட்டி தமிழ்ப் பெண்; அவருடைய தாத்தாவைப் பெற்றவளும் தமிழ் மாது.

அப்துல்லா மலாய்மொழியும் தமிழும் படித்தார். மலாக்காவில் முகாம் போட்டிருந்த இந்திய ராணுவத்தினரிடம் ஹிந்துஸ்தானியும் கற்றுத் தேர்ந்தார். ஆங்கிலத்தையும் கற்றுக்கொண்டார். நவீன சிங்கப்பூரின் ஸ்தாபகரான ஸ்டாம்போர்டு ராபிள்ஸுக்கும், மற்றும் பல ஆங்கில முக்கியஸ்தர்களுக்கும் மலாய் மொழி கற்றுக்கொடுத்தார். இவ்வாறு ஆசிரியராக இருந்தமையால் 'முன்ஷி' (ஆசிரியர்) என்று அவரை அழைத்தார்கள். மலாக்காவிலும் சிங்கப்பூரிலுமாகத் தம் வாழ் நாட்களைக் கழித்தார். மிக உயர்ந்த சுபாவமும், நல்லொழுக்கங்களும் உடைய உத்தமர் முன்ஷி அப்துல்லா. அவருக்கு 3 புதல்வர்களும், முதலாவதாக ஒரு புதல்வியும் பிறந்தனர். அப்துல்லா எழுதிய சுயசரிதையை மலாயாவில் வாழும் அனைவரும் பன்முறை படிக்க வேண்டும். 1843 மே மாதத்தில் அதை அவர் எழுதி முடித்தார்.

1835-ல் பஞ்ச தந்திரத்தைத் தமிழிலிருந்து மொழி பெயர்த்தார். மகள் இறந்ததற்கு மனச்சாந்தியாக "இதயப் புண்ணுக்கு மருந்து" என்ற ஒரு நாலும் இயற்றினார். கிழக்குக் கடற்கரையில் 1837-ல் சுற்றுப்பிரயாணம் செய்தபின், "அப்துல்லாவின் கடற் பிரயாணக் கதை" என்ற புத்தகமும் எழுதினார். கவிதைகள் புனைவதிலும் அவர் வல்லவர். மலாய் மொழியில் நூல்கள் எழுதி, மலாய்க்காரர் என்று தம்மைக் கருதியபோதிலும், அவர் தமிழராகவே வாழ்ந்தார். அவர் காலத்தில் வாழ்ந்த ஓர் ஆங்கிலேயர் அப்துல்லாவைப் பற்றி எழுதும்போது, தோற்றத்தில் அவர் தமிழராக இருந்ததாகவும், மலாக்காத் தமிழர்களைப் போலவே உடை உடுத்தியிருந்ததாகவும், மொழியிலும், தேச உணர்ச்சியிலும் அவர் மலாய்க்காரராக இருந்ததாகவும் எழுதியிருக்கிறார். அவர் தாடியும் வைத்திருந்தாராம்.

முன்ஷி அப்துல்லா 1854 அக்டோபரில்காலமானார். அப்போது அவருக்கு வயது 58.

சுதந்திரம் கேட்ட முதல் ஸ்தாபனம்

கே. எல். தேவாசர்

இப்பொழுது சுதந்திரம் கிடைத்துவிட்டது. அது கூட்டணி அரசாங்கத்தின் மகத்தான சாதனை. மலாயாவின் மூன்று முக்கிய சமூகத்தார்களாகிய மலாய்க்காரர், சீனர், இந்தியர் ஆகியோர் கூட்டணியில் இணைந்து, இந் நாட்டிற்குச் சுதந்திரம்பெறவிரும்பி உறுதியாய் நின்ற காரணத்தால்தான் மெர்தேகா இவ்வளவு விரைவில் கிடைத்திருக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது.

மலாயாவில் முதன் முதலாகத் தோன்றிய அரசியல் ஸ்தாபனம் மலாயா இந்தியர் காங்கிரஸ்தான். அத்துடன், மலாயாவுக்குச் சுதந்திரம் வேண்டுமெனக் கேட்டு முதலில் வலியுறுத்திய ஸ்தாபனமும் அதுதான். ஐக்கிய மலாய்க்காரர் தேசிய ஸ்தாபனம், மலாயா சீனர் சங்கம் ஆகிய ஸ்தாபனங்கள் தோன்று முன்னரே 1946-ல் முதல் அரசியல் ஸ்தாபனமாக மலாயா இந்தியர் காங்கிரஸ் தோன்றியது.

1946-ல் ஆரம்பிக்கப்பட்ட மலாயா இந்தியர் காங்கிரஸின் முதல் தலைவர் ஸ்ரீ ஜான் ஏ. திவி. காங்கிரஸின் தொடக்க விழாக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் "ஜனநாயக, சுதந்திர மலாயா நிர்மாணம்" கோரிய தீர்மானம் முக்கியமானது. 1948-ல் அவசர காலம் பிரகடனம் செய்யப்பட்டபோது ஸ்ரீ பூத் சிங் தலைமையில் மலாயா இந்தியர் காங்கிரஸ் தனது அரசியல் நடவடிக்கைகளைத் தானாகவே கட்டுப்படுத்திக் கொண்டாலும்கூட காலனித்துவ ஆட்சிக்கு முடிவு தேடும் கொள்கையைக் கைவிட்டு விடவில்லை. நியமன அங்கத்தினர்களால் நிரப்பப்படும் சட்ட சபை முறையைக் காங்கிரஸ் கண்டனம் செய்ததுடன், மக்களின் கருத்துக்களை எடுத்துக்கூற அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்ட சபைகளே இருக்க வேண்டுமென்றும் காங்கிரஸ் வலியுறுத்தியது. அத்துடன் மட்டுமல்லாமல் காங்கிரஸ் மேலும் ஒருபடி முன்னேறிச் சென்றது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நியமனத்தை ஏற்ற அங்கத்தினர்களைக் கட்சியிலிருந்து காங்கிரஸ் வெளியேற்றியது.

1950-ல் காலனி மந்திரி ஸ்ரீ கிரிபித் ஜோன்ஸ், 1951-ல் அவரை அடுத்துப் பதவிக்கு வந்த ஸ்ரீ லிட்டில்டன் ஆகியோரைப் பேட்டி கண்டபோது அரசியல் அபிவிருத்திக்கு வழி செய்வது அவசர காலத்துக்கெதிரான ஆயுதங்களில் ஒன்றாகும் என அரசாங்கத்துக்கு நாம் ஆலோசனை கூறினோம். அரசாங்கம் அதிகாரங்களைக் கைமாற்றிக் கொடுக்க வேண்டும் என்றும், இந் நாட்டு மக்களிடம் இந் நாட்டு விவகாரங்களை ஒப்படைக்க வேண்டும் என்றும் அதன் மூலம் அவசர கால நிலையைக் குறைந்த பட்சம் பாதியாவது குறைத்துவிடலாம் என்றும் நாம் வலியுறுத்தினோம். "நல்ல பிள்ளைகள்" என்று அரசாங்கம் கருதும் ஒரு சில "கைப்பாவை"களை நியமனம் செய்வதன் மூலம் மக்கள் மனதைக் கவர முடியாது. ஆகவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே முழுமையும் அங்கம் வகிக்கும் சபைகளை ஏற்படுத்த வேண்டும் என்ற நம் கொள்கையைத் திரும்பத் திரும்ப வற்புறுத்தினோம்.

காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்ட காலம் முதலாக இந் நாட்டில் வாழும் இந்தியர்கள் இந் நாட்டைச் சொந்த நாடாகக் கொள்ள வேண்டுமென்று இந்திய மக்களிடம் அது வலியுறுத்திக் கூறி வந்துள்ளது. குறிப்பாக, மலாயா சமஷ்டி ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர், ம. இ. கா. சகல கூட்டங்களிலும், பிற மேடைகளிலும், இந்தியர்கள் இந் நாட்டில் பிரஜா உரிமை பெற்று இந் நாட்டு ஜனத்தொகையுடன் சேர்ந்து மலாயாவுக்கு மாறாத விசுவாசம் காட்டிவர வேண்டுமென்று வற்புறுத்தி வந்துள்ளது.

1954-ம் ஆண்டு இறுதியில் பெடரல் சட்டசபைத் தேர்தல் நடத்த வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம், 1953, மே மாதத்தில் ஈப்போவில் நடைபெற்ற காங்கிரஸ் ஆண்டு மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இம் மாதிரி தீர்மானம் நிறைவேற்றிய முதல் ஸ்தாபனம் மலாயா இந்தியர் காங்கிரஸ்தான். தேர்ந்தெடுக்

(128-ம் பக்கம் பார்க்க)

இதயத்தில் இந்தியராகவே இருங்கள்

வழக்கறிஞர் ஆர். ரமணி

மலாயா இப்போது பிரிட்டிஷ் காமன்வெல்த்துக்குள் அடங்கிய சுதந்திரநாடு என்ற அந்தஸ்தை அடைந்துவிட்டது. ஆகவே, புதிய ராஜ்யத்தில் இந்தியர்களின் கடமை பற்றிய—அதாவது பிரஜைகளாகப் போகிறவர்கள், பிரஜைகளாக முடியாதவர்கள் ஆகிய இரு சாராரின் கடமை பற்றிய—பிரஸ்தாபம் எழுகிறது.

பார்லிமெண்டரி ஜனநாயகம் என்ற முறையில் மலாயாவின் சுதந்திர ராஜ்யம் அரசியல் முற்போக்குப் பாதையில் ஏற்கனவே உறுதியாக நிறுவப்பட்டுள்ளது. இதே நிலை தொடர்ந்து நீடிக்கும் என்று நம்பலாம். இப்படிப்பட்ட அரசாங்க அமைப்பு முறையில் பிரதான அம்சம் என்னவென்றால், மெஜாரிடியினரே ஆட்சி நடத்துவோராக இருப்பார்கள்; இந்த மெஜாரிடியானது குறிப்பிட்ட நோக்கங்களுடன் உருவாகியிருக்கும் ஒரு அரசியல் கட்சியைப் பின்பற்றியிருக்கும். இப்படிப்பட்ட ஆட்சி கட்சியால் நடத்தப்படும் ஆட்சியாக இநக்க வேண்டுமே ஒழிய, கட்சிக்காகவே நடத்தப்படும் ஆட்சியாக இருக்கக் கூடாது. அவரவர் அபிப்பிராயங்களைத் தெரிவிக்க சுதந்திரம் அனுமதிக்கப்பட்டுள்ள நாடுகளில் ஏகமனதான முடிவு காண்பது சாத்தியமில்லாத காரியம். அதனால்தான் நாட்டு ராஜாங்கப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளச் சிறந்த தகுதி மெஜாரிடிக்கே இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. ஆனாலும் மெஜாரிடிகளின் போக்கும், சாதனையும், ஜனநாயக சரித்திரத்தில் அவை மைனாரிடிகளை எப்படி நடத்த முயலுகின்றன என்பதைப் பொறுத்தே இருக்கின்றன.

இந்நாட்டில் இந்தியர்களே மிகப் பெரிய மைனாரிடி சமூகத்தார். மொத்த ஜனத்தொகையில் இவர்கள் சுமார் 10 சதவிகிதமாக இருக்கிறார்கள். இவர்களில் மிகப் பெரும்பாலோர் ரப்பர்த் தோட்டங்களில் வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்கள். இந்தத் தீபகற்பம் முழுவதிலும் அவர்கள் இங்கும் அங்குமாகப் பல இடங்களிலும் சிதறுண்ட நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். பாகிஸ்தான் முஸ்லிம்களைப்போலவோ, இலங்கைத் தமிழர்களைப்போலவோ இந்தியர்கள் பூகோள ரீதியில் மைனாரிடியினராக—அதாவது குறிப்பிட்ட பிரதேசத்தில் ஏகோபித்துக் கூடி வாழும் மைனாரிடியினராக — இல்லை; இனிமேல் அப்படி ஆகக்கூடிய சந்தர்ப்பமும் அவர்களுக்கில்லை. இந்த நிலையில் 100 தேர்தல் தொகுதிகளாக நாடு பிரிக்கப்படவிருக்கிறது. ஒவ்வொரு தொகுதியும் ஒற்றை அங்கத்தினர் தொகுதியாகும். அதனால் எந்தத் தொகுதியிலுமே தேர்தல் முடிவை மாற்றக் கூடிய அளவுக்கு இந்தியர்களின் ஜனத்தொகை பலம் பெற்றிருக்குமெனத் தோன்றவில்லை. மைனாரிடியினர் தங்கள் சொந்த பிரதிநிதிகள் மூலமாகவே சட்ட சபையில் இடம் பெறுவதற்கு ஜனநாயக முறையில் பிரசித்தமான பல உபாயங்கள் உள்ளன. ஆனால், இப்படிப்பட்ட எந்த உபாயத்துக்கும் அரசியலமைப்பில் இடம் அளிக்கப்படவில்லை; எந்த உபாயமாவது கருதப்பட்டதென்றும் சொல்வதற்கில்லை. உண்மையில் ஒரே ஒரு சந்தர்ப்பத்தில்தான் மைனாரிடி சமூகங்கள்பற்றி புது அரசியல் அமைப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது; அதுவும் மைனாரிடியினர் பிரதிநிதிகளை மேல் சபைக்கு நியமனம் செய்வதற்காகத்தான். மைனாரிடியினரின் குரல் அவர்களுடைய பிரதிநிதிகளின் மூலம் கீழ் சபையில் ஒலிப்ப

தற்கு வழியேயில்லை. கீழ்சபை தான் அரசியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்றிருப்பதாகும்.

மேலே நான் விவரித்ததெல்லாம், வயது வந்த எல்லா இந்தியர்களும் வோட்டுரிமை பெறுவார்கள் என்ற அடிப்படையில்தான். ஆனால், அரசியலமைப்போ அந்த உரிமையைப் பெடரல் பிரஜைகளுக்கு மட்டும்தான் அளிக்கிறது. மலாய்க்காரரல்லாத மற்றவர்களைப்போல, இந்தியர்களும் பிரஜா உரிமை கோருவதற்கும், பெறுவதற்கும் சில விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்நாட்டிலுள்ள இந்தியர்கள் அநேகமாக இந்தியாவில் பிறந்து இங்கே குடியேறி வசிப்பவர்களாகவோ, அல்லது இந்தியாவில் பிறந்த பெற்றோர்களுக்கு இங்கே பிறந்தவர்களாகவோ இருக்கிறார்கள். இவ்வரிசையில் மூன்ருவது தலைமுறையினர் பற்றிக் கவலையில்லை. அவர்கள் தங்கள் கோரிக்கையில்லாமலே சட்டப்படி பிரஜைகளாகி விடுகிறார்கள்.

முதலில் சொல்லப்பட்டவர்கள்—அதாவது இந்தியாவில் பிறந்து குடியேறி வசிப்பவர்களாகவும், அவர்களின் குழந்தைகளாகவும் உள்ள இந்தியர்கள்—பிரிட்டிஷ் காலனி பிரஜைகள் (Citizens of the United Kingdom & Colonies) என்ற அந்தஸ்து உள்ளவர்கள். அவர்கள் அம்மாதிரி பிரஜைகள் என்ற முறையில், மனுச்செய்து தங்களைப் பெடரல் பிரஜைகளாகப் பதிவு செய்துகொள்ள பெடரேஷன் ஒப்பந்தப்படி உரிமை பெற்றிருந்தார்கள். அம்மாதிரி செய்வதில் அவர்கள் மலாய் மொழிச் சோதனையில் தேற வேண்டியதில்லை என்றும் வாசகாலத்தை நிரூபிக்க வேண்டியதில்லை என்றும் இருந்தது. இந்த உரிமையைப் பயன்படுத்திக்கொள்வதற்குக் காலவரையறையும் விதிக்கப்படவில்லை. மலாய்க்காரர்கள் அல்லாதவர்களில் இந்தியர்களுக்கு மட்டுமே இந்தச் சலுகை பயன்படக் கூடியதாய் இருந்தது.

இந்த உரிமையை ரீட் கமிஷன் புறக்கணிக்காமல் வருங்காலத்துக்கும் அதை ஊர்ஜிதம் செய்தது. அவர்களுடைய நகல் அரசியலமைப்பு, கூட்டணி மகஜரில் கண்ட சிபாரிசுகளில் அநேகமாக எல்லாவற்றையுமே ஏற்றுக்கொண்டதென்பது நாடறிந்த செய்தி. பிரிட்டிஷ் காலனி பிரஜைகளுக்கு இருந்த அந்த உரிமையை அகற்றிவிட வேண்டுமென்றோ, அதற்கு ஒரு காலவரை விதிக்கவேண்டுமென்றோ கூட்டணி மகஜரிலும் யோசனை கூறப்படவில்லை; நேரடியாக மகஜர் பற்றி விளக்கம் கொடுத்தபோதும் அவ்வித யோசனை கூட்டணித் தலைவர்களால் கூறப்பட்டதாகத் தெரியவில்லை. மகஜர் கொடுத்த குழுவில் மலாயா இந்தியர் காங்கிரஸும் அங்கம் வகித்தது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

ரீட் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர், அரசியலமைப்பு யோசனைகளை ஒரு செயற்குழு ஆராய்ந்தது. இவர்கள் ஆராய்ந்து விவாதித்து, அதன்பின் செய்த முடிவுகள் பிரிட்டிஷ் காலனி மந்திரியுடன் விவாதிப்பதற்கு லண்டனுக்கு கொண்டு செல்லப்பட்டன. அதன் இறுதி முடிவாகப் புதிய அரசியலமைப்பு தயாராயிற்று. அதற்கு ஏற்கனவே சட்டசபையின் ஆசீர்வாதம் கிடைத்துவிட்டது. இந்தக் கட்டுரை அச்சில் வெளிவருவதற்குள் அது சட்டமாக நிறைவேறியே தீரும். ரீட் அறிக்கை வெளிவந்த பிறகு நடைபெற்ற விவாதங்களின் எந்தக் கட்டத்திலாவது ம. இ. கா. தனது தொடர்ச்சியைத் தளரவிட்டதாகவோ, விட்டுவிட்டதாகவோ தெரியவில்லை. அப்படியிருந்தும், பெடரேஷன் ஒப்பந்தத்தில் வழங்கப்பட்டு, ரீட் கமிஷனால் ஊர்ஜிதம் செய்து பாதுகாக்கப்பட்ட இந்த மதிப்பு வாய்ந்த உரிமை, அரசியலமைப்பில் தற்காலிக ஷரத்துக்களைப் பற்றி விவரிக்கப்படும் இடத்தில் பெயர்த்து வைக்கப்பட்டுள்ளதன் காரணத்தை அறிய முடியவில்லை. இப்போது அந்த உரிமையை சுதந்திரத்திற்குப் பின் ஒரு வருஷ காலம் வரையிலுமே பயன்படுத்திக் கொள்ள முடியும். ரீட் அறிக்கை வெளிவந்த பின் அது பற்றிய விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்ட ம. இ. கா. தலைமை, இப்படிப் பின் வாங்குவதற்கு எப்படிச் சம்மதித்தது? இதற்கு அந்தரங்கமாகவோ, பகிரங்கமாகவோ யாதொரு விளக்கமும் கொடுக்கப்படவில்லை; யாதொரு விளக்கமும் இருப்பதாகவும் தெரியவில்லை.

ஆகவே, இந்தப் பிரஜா உரிமைப் பிரச்னையை எதிர்நோக்கியுள்ள இந்தியர்களின் கடமை என்ன?—பிரஜைகளாவதா? ஆகாமலிருப்பதா? இது அவரவர் சொந்தப் பிரச்னை என்பதும், அவரவர் தங்கள் எதிர்காலத்தை எவ்வாறு அமைக்க உத்தேசித்திருக்கின்றனரோ, அவ்வாறு அவர்களே தீர்த்துக்கொள்ள வேண்டிய விஷயம் என்பதும் என் துணிபு. 'யார் யார் பிரஜைகளாக முடியுமோ அவர்களெல்லாம் பிரஜைகளாகிவிட வேண்டும்' என்று மற்றவர்களுக்கு உபதேசிப்பது சுலபம். எல்லா இந்தியர்களுமே பிரஜைகளாகிவிட்டாலும், அவர்களுடைய எண்ணிக்கையையும் இங்கும் அங்குமாகச் சிதறுண்டு வாழும் நிலையையும் கவனிக்கும்போது, அவர்களது அரசியல் செல்வாக்கு ஜனநாயகத்துக்கு உதவக்கூடிய அளவுக்குப் பலம் பெற்றுவிடப்

(128-ம் பக்கம் பார்க்க)

மூலதனம் உதவினோர்

"நடுவணதெய்த இருதலையுமெய்தும்" என்பது முதுமொழி. அதாவது அறம், பொருள், இன்பம் என்கிற மக்களால் பெறப்படுகின்ற மூன்று வகைப் பேறுகளுள் நடுநாயகமாக விளங்குகின்ற பொருளை அடைந்தால், முன்னதாகவுள்ள இன்பத்தையும் இனிதே அனுபவிக்கலாம் என்பது ஆன்றோர் துணிபு. எனவே, பொருள் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. வியாபார முன்னேற்றத்திற்கும், கல்வி கலை முதலியவற்றின் வளர்ச்சிக்கும், தொழில்களின் ஆக்கத்திற்கும் பெரிதும் ஊக்கம் தருவது பொருளேயாகும்.

இத்தகைய பொருள் வாணிபத்தைச் செய்கின்றவர்கள் தனவணிகர் என்கின்ற செட்டியார்கள். 'தன' வியாபாரம் செய்வதால், தனவணிகர் என்றும், செட்டாக அதாவது சிக்கனமாக வாழ்க்கை நடத்துவதால், செட்டியார்களென்றும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

சுமார் 150 வருடங்களுக்கு முன்பிருந்தே, இவர்கள் இம் மலாய் நாட்டுடன் தொடர்பு கொண்டுள்ளனர். தொடக்கத்தில் இவர்கள் மலாக்காவில் வந்து வியாபாரம் செய்ய ஆரம்பித்திருக்கின்றனர். பின்னர் படிப்படியாக மலாயாவில் பல பாகங்களுக்கும் சென்று தங்கள் தொழிலை விருத்தி செய்துள்ளனர். முதலில் இவர்கள் ஏற்றுமதி–இறக்குமதி வியாபாரத்தில் அக்கால முறைக்கு ஏற்ப ஈடுபட்டு இருந்ததாகத் தெரிகிறது. பிற்காலத்தில் 'தன' வியாபாரத்தில் ஈடுபட்டனர். நவீன பாங்கிகள் செய்து வருகின்ற தொழில்கள் அனைத்தையும் இவர்கள் மேற்கொண்டிருந்தனர்.

தனித்தோ பலருடன் சேர்ந்தோ கொடுக்கல் வாங்கல் செய்வது இவர்களின் முக்கிய தொழில். (1) தங்களுடைய தொழில் முறைகளுக்கு வேண்டிய மூலதனத்தை தாய்நாட்டிலிருந்தே இவர்கள் கொண்டு வந்தனர். (2) ரப்பர் விலையானது பீக்கல் ஒன்றிற்கு 4 அல்லது 5 வெள்ளியாக இருந்த காலத்திலும் மனம் தளராது தங்களது தொழிலை இவர்கள் நடத்தி வந்ததுடன், மற்ற வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் பெரும் பண உதவி புரிந்திருக்கிறார்கள். தவணை (Fixed deposit), நடப்பு (Current)க் கணக்குகளில் பிறருடைய பணத்தை வாங்கிப் பாதுகாப்பதுடன் திருப்பிக் கொடுப்பது, வெளியூர்களுக்கோ வெளிநாடுகளுக்கோ உண்டியல்கள் மூலம் பணமனுப்ப உதவி செய்வது, வெளிநாடுகளுக்கு வியாபாரிகள் அனுப்புகின்ற சரக்குகளுக்குப் பணம் வசூல் செய்து கொடுப்பது (Bills Collection), தொழில்களுக்கும் வியாபாரத்திற்கும் பண உதவி செய்வது முதலியவற்றை இவர்கள் செய்து வந்தனர். நவீன பாங்கிகள் ஏற்பட்டிருக்கின்ற இக் காலத்திலும் பாங்கி வசதி பெற முடியாத சிற்றூர்களிலே இவர்கள் மேற்கண்ட வழிகளில் தொழில் நடத்தி மக்களுக்கு உதவி வருகின்றனர்,

இம் மலைநாட்டில் சிறப்புத் தருகின்ற ரப்பர்த் தோட்டங்கள் உண்டான ஆரம்ப காலத்தில் சீனர்கள் மலாய்க்காரர்கள் முதலிய யாவருக்கும் பொருள் உதவி, பெரும் அளவில் ரப்பர்த் தோட்டங்களை உண்டுபண்ண ஆதி காரணமாக இருந்திருக்கிறார்கள். மலாக்காவைச் சேர்ந்த தவக்கே தன் சேயான் என்பவர் சுமார் 60 வருடங்களுக்கு முன்பு ரப்பர்க் கொட்டைகளை மேல் நாட்டிலிருந்து வரவழைத்துப் புக்கேலிந்தான் என்ற இடத்தில் முதன் முதலாகப் பயிர் செய்தார். இதற்கு மூலதனம் கொடுத்து உதவியவர்கள் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களே. ரப்பர் பயிர் செய்தவரை அக் காலத்தில் பலர் ஏளனம் செய்தனர். தன்சேயான் பயிர் செய்த ரப்பர் பலன் தரும் என்பதைப் பின்னர்தான் பலரும் உணரலாயினர். அதைத் தொடர்ந்தே ஐரோப்பியர்கள் ரப்பர் பயிர் செய்ய ஆரம்பித்தனர். ஆகவே, மலாயாவின் முதலாவது ரப்பர் எஸ்

(126-ம் பக்கம் பார்க்க)



சிவ - பார்வதி நடனம்

படம் – யோங் ஸ்டுடிபே

(கோலாலம்பூர் கோபால் ஷெட்டியும், மாலதி ராமச்சந்திரனும்)

உத்தமி

("நாகுமணாளன்", பத்து தீகா)

கிள்ளானுக்கு ஏழெட்டு மைல் தூரத்திலுள்ளது, 'சுங்கை புசார்' தோட்டம். தோட்டத்தின் வடக்கெல்லையாக ஓடும் ஆறுதான் அந்தப் பெயருக்குக் காரணம். அந்தத் தோட்டத்தில் பால் வெட்டுபவன் நாச்சியப்பன். வழக்கமாகப் பாலை ஒரு மணிக்கெல்லாம் 'ஸ்டோ'ரில் சேர்த்துவிட்டு வீட்டிற்கு வந்துவிடுவான். ஆனால், அன்று வீட்டிற்கு வரக் கிட்டத்தட்ட மூன்று மணியாகிவிட்டது. மழைத் திட்டிக்காக அரை வெட்டைச் சேர்த்து வெட்டிவிட்டுப் பசி வயிற்றைக்கிள்ள வீட்டையடைந்தான். வெறும் வாளிகளைக் காண்டாவில் மாட்டித் தோளில் வைத்திருந்த நாச்சியப்பன், "உஸ் அப்பாடா" என்று பெருமூச்சு விட்டவண்ணம் இறக்கி வைத்து விட்டுக் கதவைப் பார்த்தான். உயிரே போய் விட்டதுபோன்ற அதிர்ச்சி. காலையில், நீராகாரத்தைக் கொஞ்சம் 'ஆதா பாதி'யாய்க் குடித்துவிட்டு ஓடிய அவனுக்குப் பசி வயிற்றைப் பிசைந்தது. ஆவலாய் 'ஒருவாய்' சாப்பிட ஓடிவந்தவன், அசந்து நின்றுவிட்டான். பூட்டிய கதவைப் பார்த்துக் கொண்டிருந்தவன், வாசலைத் திரும்பிப்பார்த்தான். வீட்டுக்கு எதிரிலிருந்த பேரி மரத்தருகில், குழந்தைகளிரண்டும் கல்லா—மண்ணா விளையாட்டில் மூழ்கிக் கிடப்பதைப் பார்த்த நாச்சியப்பனுக்குத் தலை கால் தெரியாத ஆத்திரம் உண்டாகிவிட்டது.

"ஏ...பசங்களா! எங்கே உங்கம்மா?"—அப்பாவின் குரலைக் கேட்டதும் விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகள், திரும்பிப் பார்த்துச் சிரித்துவிட்டு, மேலும் சுவாரஸ்யமாய் விளையாடத்தொடங்கிவிட்டார்கள்.

"டேய் எங்கடா அம்மான்னா?"—நாச்சியப்பன் குரலில் அனல் தெறித்தது. மூத்த பையன் சொன்னான்: "அம்மா தோட்டத்துக்குப் போச்சி..."

விளையாட்டு நீடித்தது.

"ஏம் போச்சாம்?"

"ஆங்...அதுவா"—தகப்பன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல், "ஏய் தோத்திட்டியா?" என்று ஆட்டத்தில் வெகு மும்முரமாய் ஈடுபட்டிருந்த பிள்ளைகளின் முதுகில், தப்பு திப்பென்று போட்டான். அடிவாங்கவும் பிள்ளைகள் 'குய்யோ, முறையோ' வென்று அழத் தொடங்கிவிட்டார்கள். மடியைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு ஓட்டமும், நடையுமாக வீட்டுக்கு வந்துகொண்டிருந்த மருதாய், தன் கணவன், பிள்ளைகளை அடிப்பதைக் கண்டதும் மனசு பொறுக்காமல், "தா...என்னாத்துக்குப் புள்ளைங்களே அடிக்கிறே?..." என்று கேட்டாள்.

"அடிக்கிறேனா? வெட்டிப் புதைக்காம! மனுசன் பசியோட இருக்கான்; விளையாட்டு என்னா விளையாட்டு?"

"பசியா யிருந்தா புள்ளைங்க மேலயா எரிஞ்சு விளுவர்து?" மனைவியின் பேச்சு, எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போலிருக்கவும், எரித்து விடுபவன்போல் பார்த்தான் நாச்சியப்பன்.

மடியிலிருந்த பொன்னாங்கண்ணிக் கீரையை முறத்தில் கொட்டிவிட்டுக், கதவைத் திறந்துகொண்டே சொன்னாள்: "சரி; சாப்புட வாங்கோ."

"சோறும் வாணாம்; ஒண்ணும் வாணாம். நீயே சாப்பிடு; மனுசன் பசியோட வந்திருக்கான்னு பறக்கிருபாரு றெக்கே கட்டிக்கினு" என்று சொல்லிவிட்டுக் கீழே வைத்திருந்த வாளியை எட்டி உதைத்தான். தட தட வென்று உருண்டு ஓடி அல்லூரில் விழுந்தது வாளி. பால் வெட்டு உடுப்பைக்கூட அவிழ்த்துப் போடாமல், வீதியிலிறங்கி 'விர்'ரென்று நடந்தான்.

"தா..! சாப்புடாம எங்க அவசரம்?" என்று பின்னாலிருந்து தன் மனைவி அழைப்பதைக் காதில் வாங்காமல் வெகு வேகமாக நடந்தான். மருதாய், தூணைப் பிடித்துக் கொண்டு வெகுநேரம் பார்த்துக்கொண்டிருந்தாள்; பசியோடு செல்லும் நாச்சியப்பன் திரும்பிப் பார்க்கவேயில்லை. அவள் பெருமூச்சு விடுவதற்கும், அழுதுகொண்டிருந்த பிள்ளைகள் காலைக்கட்டிப் பிடிப்பதற்கும் சரியாக இருந்தது. பெரும் பிரயாசையுடன்

அழுதுகொண்டிருந்த குழந்தைகளைச் சமாதானப்படுத்தி முத்தம்கொடுத்தாள். அழுகை ஓய்ந்தது. பழைய விளையாட்டைத் தொடர்ந்து விளையாட பிள்ளைகள் மரத்தடிக்கு ஓடிவிட்டார்கள்.

அவர்கள் விளையாடுவதைக் காணக் காண மருதாயின் உள்ளம் பூரித்தது. அந்த இன்பம் கவலையைக்கூடப் போக்கடித்து விட்டது. கணவன் சாப்பிடாமல் சென்றுவிட்டதை மட்டும் அவள் முகக்குறி காட்டிக்கொண்டிருந்தது.

தோட்டத்துப் பெரிய கங்காணி வீட்டிலிருந்த கடிகாரம் நான்கு முறை அடிக்கவும் மருதாய் பரபரப்புடன் வீட்டினுள் சென்றாள். 'ராத்திரிக் காச்சும் அது சாப்புடுதா என்னா; வாய்க்கி ருசியா சமைக்கணும்' என்று மெதுவாக வாய்விட்டுச் சொல்லிக்கொண்டே சமையல் செய்யத் தொடங்கினாள். சோறு ஆக்கி, கீரையைக் கடைந்து வைத்துவிட்டு, வெந்நீரை வளாவி, குழந்தைகளைக் குளிப்பாட்டி ஆடை மாற்றிவிட்டுத் தானும் குளித்துவிட்டுக் கணவனுக்குப் பிடித்தமான பச்சைநிற நூல் சேலையைக் கட்டிக்கொண்டாள்.

நாச்சியப்பனுக்குத் தண்ணீர் காயப் போட்டாள். தலைசீவித் தோட்டத்தில் பூத்திருந்த மலாய் மல்லிப் பூக்கள் இரண்டைக் கொண்டையில் செருகிக்கொள்ளவே 'வாசம்' மூக்கைத் துளைத்துக்கொண்டிருந்தது. பத்துக்காசு அகலத்திற்குக் குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டாள். அது அந்தப் படர்ந்த முகத்திற்கு எடுப்பாயிருந்தது. கண்ணாடியில் ஒருதடவை முகத்தைப் பார்த்துவிட்டு, வெளியில் வந்து எட்டிப் பார்த்தாள். தொலை தூரத்திற்குக் காக்காய், குருவி கூடக் காணவில்லை.

"உம் அதெக் காணோமே..."

மருதாயின் கண்களிலே கலக்கம். தொண்டையில் ஏதோ ஒன்று அடைத்துக்கொண்டதைப்போன்ற செருமல் உருவாகி அழுத்தத் தொடங்கியது. முகத்தில் பீதி தாண்டவமாடியது. விளக்கை கொளுத்திவிட்டு வாசலுக்கு வந்தாள். தோட்டத்து ஆயம்மாக் கிழவி, இரும்பு உரலும், உலக்கையுமாக மருதாயிடம் வந்தாள்.

"ஏம் மருதாயி ஒருமாதிரியா கீறே? அந்தப் பெய்யன் அடிச்சுப்புட்டானா? வர வர சுத்த மோசமாயிக்கினே வரானே" என்று கவலையை விசாரிப்பதுபோல் வைதுதீர்த்தாள் ஆயம்மாக் கிழவி.

"நீ ஒன்னு; சும்மா யிரு ஆயா. மத்தியானங்கூட சோறு சாப்புடாம கோவமாய்ப் போயிடுச்சி; காதுலே கேட்டுச்சினா..." மருதாயின் பேச்சு காதில் விழுந்ததோ என்னவோ, ஆயாவின் 'வெற்றிலை இடியல்' மட்டும் 'டங் டங்' கென்று கேட்டுக்கொண்டிருந்தது. இடிக்கும் சப்தம் ஓய்ந்தது. "மருதாயி! கேட்டா கேளு, புருசங்கிட்ட ரொமப மதுவாரியா, கரிசனையா, தப்புத் தண்டா செய்யாம நடந்துக்கினா, புருசனுக்குக் கோவம் வருமா? நீயே நினைச்சுப் பாரு" என்றாள் கிழவி.

அதைக் கேட்கவும் மருதாயிக்குப் பொல்லாத கோபம் வந்தது. கோபத்தை அடக்கிக்கொண்டே சொன்னாள்: "என்னதான் தவறுதலா பொம்மனாட்டி நடந்துகினாலும், அதே பெருசா நெனைச்சிக்கினு, இது இந்தமாதிரி, வெளக்கு வெச்சப் பின்னாடிகூட ஊட்டுக்கு வராமே யிருந்தா நல்லாருக்கா ஆயா? புள்ளைங்ககூட அப்பா அப்பான்னு அளுதுக்கிட்டே தூங்கிடிச்சுவ. கண்ணாலங் கட்டினப்போ என்ன ஆசெயா இருந்திச்சு! இப்பத் தாங் கொறைஞ்சிடுச்சா? எனக்குத்தான் ஆசெ இல்லாமேப் போச்சா? ஆயா, புருசம் பொண்டாட்டின்னா நல்லது கெட்டது இல்லாமே யிருக்குமா?" என்று கிழவியுடன் பேசிக்கொண்டே வெளியில் எட்டிப்பார்த்தாள் மருதாய். ஒரே இருட்டு. "ஊஹூம் சந்தடியே காணோமே ஆயா; எல்லாம் படுத்திட்டாங்க" என்றாள்.

கிழவியும் வெற்றிலையைக் குதப்பி, 'இசுக்' கென்று துப்பிவிட்டு நடையைக் கட்டினாள். மருதாய்க்குப் பசி வாட்டிக்கொண்டிருந்தது. கணவன் சாப்பிடாமல் கோபமாய்ப் போனது அவளைக் கசக்கிப் பிழிந்தது. சாப்பிட மனம் ஒப்பவில்லை. கதவைத் தாளிட்டுவிட்டு, 'குறு குறு' வென்று வீட்டினுள் உட்கார்ந்துகொண்டிருந்தாள். நேரம் ஆகிக்கொண்டேயிருந்தது. வெகு நேரத்திற்குப் பின், "ஏய் மருதாய்! கதவேத் தொறடீ; தொறக்கிறியா ஒதே வேணுமா?" என்று கதவைத் தடதடவென்று தட்டினான் நாச்சியப்பன். வெளிச்சத்திற்காக சிமினியை இடது கையில் பிடித்தவண்ணம் கதவைத் திறந்தாள் மருதாய்.

"ஆ...அய்யோ!" என்று மருதாய் கீச்சிட்டுக் கத்தினாள். நாச்சியப்பன் நெற்றியிலிருந்து ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. "தா என்னா இது? நெத்தியிலே ரெத்தம்?" என்று கேட்டுக்கொண்டே உரிமையுடன் கணவன் நெற்றியில் வடியும் ரத்தத்தை அவள் தன் முந்தானையால் துடைத்தாள். "டியாம் மருதாய், யார் மொவத்திலே ரத்தம்? இப்பப் பாரு, வு...புஞ்ஞா...மொகரையிலே..." என்று குடிவெறியில் உளறிய நாச்சியப்பன், மருதாயின் முகத்தில் குத்தினான்.

"ஐயோ அம்மா!" என்று அலறிக்கொண்டே மருதாய் சுருண்டு விழுந்தாள். சிமினி உருண்டு ஓடி 'குபுக் குபுக்'

கென்று சப்தமிட்டுக்கொண்டு அணைந்துவிட்டது.

"செத்தியா சாவு" என்று வெறியோடு சொல்லிக்கொண்டு, வாசலிலேயே அவன் படுத்துவிட்டான். மருதாய் தேம்பித், தேம்பி அழுதவண்ணம் முடங்கிக் கிடந்தாள்.

சுங்கை புசார் தோட்டத்திற்குப் பக்கத்திலுள்ள 'சின்னமலைத்' தோட்டத்தில், காலைச் சங்கு ஊதப்பட்டது. தொடர்ந்து சுங்கை புசார் தோட்டத்துக் கங்காணிகளின் 'பொழுது விடிஞ்சி போச்சி' சப்தமும், ஊதல் சப்தமும் காதைத் துளைத்தன. வேலைக்குப் போக எல்லோரும் ஆயத்தமாகிக்கொண்டிருந்தார்கள்.

கிழக்கு வெளுத்துவிட்டது. பனி 'பொல பொல' வென்று கொட்டிக்கொண்டிருந்தது. மலைக்குப் போகிறவர்கள், வாளி, உளி, குட்டிசாக்குடனும், மண்வெட்டியுடனும் போய்க்கொண்டிருந்தார்கள்.

நாச்சியப்பன் எழுந்தான். இரவு நடந்த சம்பவம் கனவு கண்டதைப்போலத் தெளிவற்றுத் தோன்றியதோ, என்னவோ? குட்டிச் சாக்கைத் தேடி வாளியில் போட்டான். வாளிகளைக் காண்டாவில் மாட்டித் தூக்கிக்கொண்டு மலைக் காட்டை நோக்கி நடந்தான். முகங்கூடக் கழுவவில்லை.

பொழுது பல பல வென்று நன்றாய் விடிந்துவிட்டது. பிள்ளைகள் எழுந்தார்கள். படுக்கையில் காணாததால் அழுதுகொண்டே எழுந்து வந்தார்கள். குழந்தைகள் அழுவதைக் கேட்ட மருதாய், மெதுவாக எழுந்தாள், உடம்பெல்லாம் ஒரே வலி. 'ஐயோ அம்மா' என்று முனகினாள்.

பாவம்! குழந்தைகள் பசியால் துடிப்பதைக் கண்டாள். மெதுவாக எழுந்துபோய், அடுப்பைப் பற்றவைத்து தண்ணீரைக் கொதிக்கவைத்துக் காப்பி கலக்கிப் பிள்ளை

முதலாவது ஹிந்துக் கோவில்

பொய்யாத விநாயகர்

கிறிஸ்தவ சகாப்தத்தின் ஆரம்பத்திலிருந்து சுமார் 1400 வருஷ காலம் மலாயாவை ஆண்டவர்கள் ஹிந்து மனனர்களும், பௌத்த மன்னர்களுமாவர். அதற்கு முன்னதாகவே, கிட்டாவில் ஹிந்துக்கள் குடியேறியிருந்தார்கள். ஆகவே, ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்பே மலாயாவில் ஹிந்துக் கோவில்கள் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது நிச்சயம். கிட்டாவில் சிதைந்து போன ஹிந்துக் கோவில்களின் சின்னங்கள் இப்போதும் காணப்படுகின்றன. இவை தவிர மலாயாவில் பல இடங்களிலும் விநாயகர் சிலைகள் அகப்பட்டுள்ளன. ஆனால், இன்றுள்ள ஹிந்துக் கோவில்களில் மிகப் பழைமையானது, மலாக்காவிலிருக்கும் பொய்யாத விநாயகர் கோவில் தான். 1781-ம் ஆண்டில் இதை மலாக்காச் செட்டியார்கள் கட்டினார்கள். கோவில்கட்டுவதற்கு நிலம் கொடுத்து உதவியவர்கள், அப்போது ஆட்சியாளர்களாக இருந்த டச்சுக்காரர்கள். இந்தக் கோவிலின் நிர்வாகப் பொறுப்பைச் சுமார் 60 வருஷங்களுக்கு முன் நாட்டுக்கோட்டை செட்டியார்களிடம் மலாக்காச் செட்டியார்கள் ஒப்படைத்தார்கள். பொய்யாத விநாயகர் கோவிலில் இன்றும் திருநாள் முதலியன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இக் கோவிலில் விநாயகர், சுப்பிரமணியர், ராமர், மாரியம்மன், சுந்தரேஸ்வரர் என்ற பெயருடன் சிவலிங்கம் மீனாட்சி ஆகிய தெய்வங்களின் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன மலாக்காச் செட்டியார்கள் பற்றிய விபரத்தை இதே மலரில் வேறோரிடத்தில் காண்க.

பொய்யாத விநாயகர் கோவில் முன் தோற்றம்

பொ. அருணாசலம்பிள்ளை

(பங்குதாரர்,
யூனியன்-இங்கல் எஸ்டேட்டுகள்)

51, ஆன்சன் ரோடு,
தெலுக்கான்சன்,
பேராக், மலாயா.
போன்: 205.

—:o:—

★ மளிகைச் சாமான்கள்
★ கண்கவரும் துணி வகைகள்
★ அனைத்தும் கிடைக்கும்.

ஒரு முறை விஜயம்
உங்களுக்கு திருப்திதரும்.

த. ரா.
சாத்தகுட்டி செட்டியார் & கோ.

ஜெனரல் மெர்ச்சண்ட்,
அண் கமிஷன் ஏஜெண்ட்.

47, ஆன்சன் ரோடு,
தெலுக்கான்சன்.
போன்: 204.

—:o:—

எங்களிடம் இந்திய ஜவுளி தினுசுகளும், ஸ்கூல் புத்தகங்களும், பல சரக்கு சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விலை சகாயமாய்க் கிடைக்கும்.

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

பழ. சபாபதி ஆச்சாரி

விஜயலெட்சுமி சொர்ண
ஆபரணத் தொழிற்சாலை
185, மெயின் ரோடு,
தைப்பிங்.
போன்: 802.

எல்லா நகைகளும் அழகிய
வேலைப்பாட்டுடனும்,
உத்தரவாதத்துடனும்
குறித்தகாலத்தில் செய்துதரப்படும்

ரெ. வை.
சீனிவாசகம் பிள்ளை & சன்ஸ்.

181, மெயின் ரோடு, தைப்பிங்,
பேராக், மலாயா.
போன்: 217, த. பெ. எண்: 63.

★

எங்களிடம் பலசரக்கு, ஜவுளி தினுசுகள், ஸ்டேஷனரி சாமான்கள், வெங்கலப் பாத்திரங்கள், தமிழ்ப் புத்தகங்கள் யாவும் கிடைக்கும்.

தரத்தில் உயர்ந்தது.
விலை சகாயமானது.

களுக்குக் கொடுத்தாள். குடித்துவிட்டுப் பிள்ளைகள் விளையாடத் தெருவுக்கு ஓடிவிட்டார்கள். வீதியில் சிறுபிள்ளைகளெல்லாம் குதூகலமாய் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அதைப்பார்த்து மகிழும் நிலையிலில்லை அந்தப் புண்பட்ட பேதையுள்ளம். இரவு நடந்த சம்பவத்தால் அவளுடைய மனம் புகைக்கூண்டாகியிருந்தது. கண்ணீர் அருவியாகக்கொட்டிக்கொண்டிருந்தது. அவள் நெஞ்சுஅடிக்கடி உயர்ந்து, தாழ்ந்து மனப்போராட்டத்தைப் புலப்படுத்திக்கொண்டிருந்தது. கதவருகில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டாள். மருதாயின் கண்களிலிருந்து வழியும் நீர்த்திவலைகள் பொட்டுப் பொட்டாக விழுந்து, சேலையில் ஊறிக்கொண்டிருந்தன. இரும்பு உலக்கையைப் பிடித்தவண்ணம் வந்த ஆயம்மாக் கிழவி, "என்னாடி மருதாயி; அங்கினியே குந்திக்கினு அளுதுகினுகிறே? காத்தாலே வேலை வெட்டியேப் பாக்காமே?—அவந்தாங் கெட்டுப் பூட்டானேடி" என்று பேசிக்கொண்டே வந்து மருதாயின் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

மருதாயின் உள்ளம் தனித்திருக்கவே விரும்பியது. கிழவியின் பேச்சு அவளுக்குப் பிடிக்கவே யில்லை. அவள் சொன்னாள்: "ஆயா, அதே ஒண்ணுஞ் சொல்லாதே ஆயா; அதெக் கெடுத்து குட்டிச்சொவரா ஆக்கிடுச்சி அந்தக் குடி. எம் மேலே எம்மாம் உசிரு! குடிச்சுப்புட்டு வந்தா அதுக்கு மனசு மாறிப் போவுது."

மருதாயின் பேச்சு எடுத்தெறிந்தது போலிருக்கவே, கிழவி வேலையிருக்கிறதென்று எழுந்து போய்விட்டாள்.

"ஆ..." மருதாயின் வேதனைக் குரல் அடித்தளத்திலிருந்து எழுந்து மூச்சோடு மூச்சாக ஒலித்து மறைந்தது. சிந்தனைப் புயல் அவளைத் தாக்கும்போதெல்லாம், அன்பு உள்ளம் துடியாய்த் துடித்தது. பார்வையில் பரிதாபமும், பாசமும், ஆத்திரமும் கலந்திருந்தன. விசித்து, விசித்து மனத்திற்குள் அழுதுகொண்டாள். உதடுகள் மெதுவாகத் துடித்துக்கொண்டன. வழியும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். வாசலைப் பார்த்தாள். கவலையாயிருந்த அந்த நேரத்திலுங்கூடச் சிரித்தாள். அதற்குக்காரணம் நான்கைந்து சிறுவரும், சிறுமியரும் அப்பா, அம்மா விளையாட்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்பா, வேலைக்குப் போயிருக்கிறாராம். அம்மா, பிள்ளைகளுக்கு தலைவாரிப் பின்னி, சடைபோட்டுப் புத்தகம் கொடுத்துப் பள்ளிக்கனுப்பிவிட்டு, வேலைக்குப் போயிருக்கும் கணவனுக்குச் சோறு கொண்டு போகிறாளாம்... பிள்ளைகளின் விளையாட்டு, மருதாயின் உள்ளத்தில் அன்பு ஊற்றைப் பெருக்கியது பழைய கோபமும், தாபமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன.

அவசர அவசரமாக எழுந்து குசினிக்குப் போனாள். பழைய சோறு இறுகியிருந்தது; தண்ணீரை ஊற்றினாள். அடுப்பை பற்றவைத்துக் கறியைச் சுட வைத்தாள். பச்சை மிளகாய் நான்கை எண்ணெயிலிட்டு வதக்கினாள். பானையைக்கழுவி சோற்றைப்போட்டுக் கறியை 'ஏன'த்தில் ஊற்றிக் கொண்டாள். வதக்கிய மிளகாயைப் பானைக்குள் போட்டாள். பானையைத் தலையில் வைத்த வண்ணம் வெளியில் வந்தாள்.

"இங்கேயே வெளையாடிக்கினு இருங்க. அப்பாவுக்கு சோறு கொடுத்துட்டு ஓடியாந்துடுறேன்" என்று விளையாடிக்கொண்டிருந்த தன் பிள்ளைகளிடம் சொல்லிவிட்டு 'விர்'ரென்று மலைக்காட்டை நோக்கி நடந்தாள். ஆனை மலைக்காடுதான் அன்றைய வெட்டென்று அவளுக்குத் தெரியும். வேகமாகநடந்தாள். மரம் வெட்டி முடிப்பதற்கு முன்பே கணவன் நிரைக்குப் போய்விட வேண்டுமென்ற துடிப்பு. குருவிகள் கீச்சிடும் சப்தமும், பக்கத்தில் ஓடும் பாசாவின் சலசலப்பும், உதிர்ந்த சருகுகள் காற்றினால் கலகலப்பதும் அவளுக்கு உற்சாகமூட்டின. கணவன் மேலுள்ள பாசம் மனதை அழுத்தியது. பசியோடிருக்கும் கணவன் முகம் நினைவிற்கு வந்து வாட்டியது. தான் சாப்பிடாமல் பட்டினியாய் இருப்பதைக்கூட மறந்துவிட்டாள். பெண்ணுள்ளத்திற்கே இயல்பான இரக்கமும், பரிவும் அந்த அன்பு மனத்தில் எழுந்தன.

'கணவன் கெடவில்லை; குடிதான் கெடுத்துவிட்டது' என்று மருதாயின் அன்பு மனம் எண்ணியது போலும்! உணர்ச்சிவசப்பட்டுவிடும் நாச்சியப்பனை எண்ணி ஏங்கியவண்ணம் நடந்துகொண்டிருந்தாள்.

இரவுச் சம்பவம் அவள் நினைவிற்கு வரும்போதெல்லாம் முகம் வெதும்பி, வெம்பிக்கொண்டிருந்தது. "அதுக்கு ஏந்தான் இம்மாங் கோவம்? குடிச்சிட்டு வந்தா இப்படியா நடந்துக்கிறது? அது குடிக்காமே இருந்தப்போ எப்பிடி யிருந்துச்சு! மாரியாத்தா, நீதான் அதுக்கு நல்ல புத்தியேக் கொடுக்கணும்" என்று வேண்டிக்கொண்டே நடந்தாள்.

மரக்கிளையிலிருந்த மணிப்புறா கூவிக்கொண்டிருந்தது. எங்கிருந்தோ பதிலுக்குக் கூவிய மற்றொரு புறா பறந்து வந்து அருகில் உட்கார்ந்து கூவியது. கூவும் சப்தம் குறைந்தது. புறாக்கள் உட்கார்ந்திருந்த மரத்தின் பக்கமாக வந்த மருதாய் மேலே பார்த்தாள். ஒரு புறா மற்றொரு புறாவின் முகத்தில் தன் அலகால் இதமாகக் கொத்துவதைக் கண்டாள். அவள் மனம் நெகிழ்ந்தது. அன்பின்

நீண்ட நாட்களாக மிக அனுபவம்
வாய்ந்த வியாபாரி

டெலிபோன் நெ. 185 த. பெ. நெ. 33

K. அப்துல் ரஹிம் & கோ.

62-E & 73, பாவல் ஸ்திரீட்,

சிரம்பான்.

*

எங்களிடம் பலவிதமான ஷாப்பு சாமான்களும், பேட்டன்ட் மருந்து சாமான்களும், அரிசி முதலிய சாப்பாட்டு சாமான்களும் நயமான விலையில் கிடைக்கும்.

உ. ரஹிமான் சாஹிப்

14, ஜாலான் செஜ்ஜட்,

ஜோகூர்பாரு.

போன்: 2290 த. பெ. எண்: 24

தந்தி: "ரஹிமான் சாஹிப்"

ஜெனரல் மெர்ச்சண்ட், கமிஷன் ஏஜெண்ட்

ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகள்.

சிறந்த அரிசி, பலசரக்கு கிடைக்குமிடம்.

★

O. Rahiman Sahib,

14, Jalan Segget,
Johore Bharu.

Head Office:
No. 22, Rochore Road,
SINGAPORE.

MERDEKA - MERDEKA - MERDEKA

TONIC CHOP GAJAH

இரத்த சுத்தி செய்து இரத்த விருத்தி அளித்து மலாயா மக்களின் அன்றாட உபயோகத்திலிருந்து வரும் இம் மருந்தை ஒரு முறை நீங்களும் பரிக்ஷித்து இதன் உண்மை குணாதிசயங்களை தெரிந்துகொள்ளுங்கள்.

★

Sole Distributors:

A. S. Mohamed Kassim & Co.

79, HILL STREET,

Singapore.

சிகரத்திற்குக் கொண்டுபோய் விட்டது அந்தக் காட்சி.

ஏணிபோட்டுப் பால் வெட்டிக்கொண்டிருக்கும் கணவனைத் தூரத்தில் வரும்போதே பார்த்துவிட்டாள். முன்பு எத்தனையோ தடவை நாச்சியப்பன் மரம் வெட்டுவதைப் பார்த்திருக்கிறுள். ஏணியைத் தோளில் தூக்கிக் கொண்டு, மரத்திற்கு மரம் ஓடி ஓடிச் சீவித் தள்ளும் தன் கணவனின் பழைய நிலையும், ஒட்டிய வயிறுடன் தள்ளாடித் தள்ளாடி நடந்துசென்று பால்வெட்டும் இப்போதைய தோற்றமும், மருதாயின் உள்ளத்தில் மாறி மாறிக் காட்சியளித்தன. அந்தப் பரிதாபத்தை அவளால் பொறுக்க முடியவில்லை. "தா, சோறு தின்ன வா" என்று கூப்பிட்டாள்.

ஏணியைத் தோளில் தூக்கிக்கொண்டு பக்கத்து மரத்திற்குப்போன நாச்சியப்பன் திடுக்கிட்டுத் திரும்பினுன். மருதாயைக் கண்டதும் ஏணியைத் தரையில் தொப்பென்று போட்டான்; அவனுடைய முகம் களையிழந்து சூம்பிக் கிடந்தது. அசட்டுச் சிரிப்பு சிரித்தவண்ணம் மனைவியிடம் வந்தான். மருதாயும் சிரித்துக் கொண்டே பானையை இறக்கி வைத்தாள்.

மருதாயின் முகத்தை இரு கைகளுக்குமிடையில் பிடித்துக்கொண்டே கண்ணீர் சிந்தினுன். அவளது முகம் வீங்கிக்கிடந்ததுபோல், அவனுடைய மனமும் அந்தச் சம்பவத்தை எண்ணி எண்ணி வீங்கியிருக்கிறது என்பதை அறிந்துகொண்ட மருதாய் சொன்னுள்: "தா, என்னு இது? பசிக்கல்லே? வாய் கொப்பளிச்சிக்கினு ரெண்டு பருக்கே தின்ன வான்னு..."

"மருதி! மூஞ்சி ரொம்ப வலிக்கிதா? நானு தெரியாமே நடந்துட்டேன்; இனிமே குடிக்கவே மாட்டேன். நிசம்மா சொல்றேன், ஆமாங்.. காத்தாலேயே புத்தி வந்திடுச்சு."

அவன் குழைந்து பேசும்போது, அவள் மனம் துடித்தது. கணவன் தன்னெதிரில் அழுவதை அவளால் பொறுக்கவில்லை. வழியும் கண்ணீரைத் துடைத்துவிட்டுச் சொன்னுள்:

"ரெண்டு நாளா சோறு தின்னுமே...இப்ப என்னு அதுக்கு; வலிகூட இல்லே" என்று அவள் கூறியதும் அவனுடைய முகம் மலர்ந்தது. புழுங்கிய மனத்தில் தென்றல் வீசியது.

"இதோ வந்துட்டேன் மருதி" என்ருன். அவனுடைய குரல் தெளிவுபெற்றிருந்தது. மலைச் சரிவிலிறங்கினுன். விரலால் பற்களின்மேல்நாலிழுப்பு இழுத்துவிட்டு, இரண்டு விரல்களால் நாக்கு வழித்துத் துப்பினுன். பாசாத்தண்ணீரில் வாய் கொப்பளித்து, முகம் கழுவி, சட்டையின் ஒரு மூலையால் முகத்தைத் துடைத்துக் கொண்டே மனைவியின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

சோறுபோட்டுச் சாப்பிடச் சொன்னுள். சாப்பிட்டுக் கொண்டிருந்தான். மருதாயின் ஓரக் கண்கள், நாச்சியப்பனைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தன. நாச்சியப்பனின் அமைதி தவழும் முகம் அவளைக் கவர்ந்தது. பழைய கோபம் மறைந்துகொண்டே வந்தது.

பெடரல் சட்டசபையில் முதலாவது இந்தியர்

1909-ல் முதல் முதலாக மலாயாவில் பெடரல் சட்ட சபை நிறுவப்பட்டது. 1927-ல் அதில் உத்தியோகப் பற்றில்லாத பல அங்கத்தினர்களும் நியமனம் செய்யப்பட்டார்கள். இச் சட்ட சபையில் இந்தியர்களுக்குப் பிரதிநிதியாக முதல் முதலாக நியமிக்கப்பட்டவர் வழக்கறிஞர் எஸ். என். வீராசாமி. இவர் ஒருவர்தான் அப்போது சட்டசபையில் இந்தியர்களின் பிரதிநிதியாக இருந்தவர். இவர் பினுங்கில் பிறந்து, அங்கு பிரீ ஸ்கூவிலும், செயின்ட் எக்வியர்ஸ் பள்ளிக்கூடத்திலும் கல்வி பயின்று, பிறகு இங்கிலாந்துக்குச் சென்று சட்டப் பரீக்ஷையில் தேர்ச்சியடைந்தார். கோலாலம்பூரில் வழக்கறிஞர் தொழில் நடத்தத் தொடங்கி, நாளாரம்பத்தில் மிகப் பிரபலமான வழக்கறிஞராகத் திகழ்ந்தார். சட்ட நிபுணராகவும், பேச்சுவன்மை மிக்கவராகவும், உயர்ந்த குணமும், மன உறுதியும் கொண்டவராகவும் திகழ்ந்த இவர், சிலாங்கூர் சமஸ்தான சபையின் அங்கத்தினராகவும், பெடரல் சட்டசபை அங்கத்தினராகவும் நியமிக்கப்பட்டார். ஐக்கிய மலாய் நாட்டின் சுப்ரீம் கோர்ட் ஆக்டிங் ரிஜிஸ்தராராகவும் பதவி வகித்தார். இந்தியர்களுக்காகப் பாடுபட்டு உழைத்து, இந்திய சமூகத்துக்குப் பெயரும் புகழும் தேடித் தந்தவர்களில் ஒருவராக விளங்கும் எஸ். என். வீராசாமி இப்போது முதிர்ந்த வயதில் ஈப்போவில் வசித்து வருகிருர்.

சுவாமி அண் கோ

ஜெனரல் மெர்ச்சண்ட்ஸ், நியூஸ் ஏஜெண்ட்ஸ், பாடப் புத்தக விற்பனையாளர்கள், எஸ்டேட், கவர்ன்மெண்ட் வினியோகஸ்தர்கள்.

10, ஜாலன் டத்தோ,

கோலக்கங்சார்.

SWAMI & Co.,

Dealers in Tinned Provisions, patent Medicines & Toilet Goods Etc.,

10, Jalan Datoh,

KUALA KANGSAR.

Phone: 81. Business Regd. No. 11800

A. N. A.

அப்துல் மஜீத் அண் கோ

4, ஜாலான் பசார்,

ஜோகூர்பாரு.

போன்: 2578. GRAM: 'ANNAMCO'

மொத்தமாகவும், சில்லறையாகவும் அரிசி விற்கப்படும்.

A. N. A. ABDUL MAJID & Co,

Agents for Chung Hwa Sauce Factory Ltd., Singapore.

No. 4, Jalan Pasar,

JOHORE BHARU

Managing Partner:

A. Haji Abdul Majid

தோல் வியாதிக்கு எத்தனையோ மருந்துகள் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவைகளைவிட விஷக்கிருமிகளைக் கொன்று சருமத்தைப் பாதுகாத்து சுகத்திற்குக் கொண்டுவருவதில்

சோனல் மருந்து

நிகரற்ற நிவாரணி

SONAL OINTMENT

Brings Relief in seconds

முகப்பரு, வேனல் கட்டி, சேத்துப்புண், பித்த வெடிப்பு, தீப்புண், சாமான்கூட்டுப் பற்று, வெட்டுக்காயம்—இன்னும் பல வியாதிகளை சோனல் மருந்து குணப்படுத்தும்.

தயாரிப்பாளர்கள்:

தி பாரத் டிரக் ஹவுஸ்
36, வடக்கு சித்திரை வீதி
மதுரை (தென்னிந்தியா)

மலாயா விற்பனையாளர்:

S. நீலமேகம்
பாரிஸ் பிளவர் மில்
77, சுங்கை பாரி ரோடு,
ஈப்போ (போன்: 4869)

நாலே வாயில் சோற்றை அள்ளி அடைத்துவிட்டுக் கை கழுவப் பாசாவில் இறங்கினான். பாத்திரங்களை எடுத்து வைத்துவிட்டுக் கணவனை ஏறிட்டுப் பார்த்துக்கொண்டிருந்தாள் மருதாய். கை கழுவிவிட்டு வந்துகொண்டிருந்த நாச்சியப்பன் துள்ளுநடை போட்டான். மனம் திருந்திய கணவனுக்குப் புன்னகை ஒன்றைப் பரிசாக அளித்தாள் மருதாய். பரிசு பெற்ற மகிழ்ச்சியில் மிதந்த நாச்சியப்பன் சொன்னான்:

"தா, மருதி! ஊட்டுக்குப் போ; புள்ளைங்க பாக்கும். என்னமோ தெரியாத்தனமா நடந்திடுச்சு. இனிமே குடிக்கிறதில்லே. சத்தியமாச் சொல்றேன்" என்று சொல்லிவிட்டுச் சிரித்தவன், முந்தானையைச் சட்டென இழுத்து லாகவமாகக் கிள்ளி ஒரு சொடுக்குச் சொடுக்கி மனைவியின் கன்னத்தில் தட்டினான்.

"இக்கூம்! பாரு; ராத்திரி அடிச்சுட்டு. என்ன இருந்தாலும் பச்சப்புள்ளே தான். இப்போ ஆசையா நடந்துக்கிற மாதிரி.."– இப்படி கணவனுக்குக் கேட்கும்படியாக அவள் சொல்லவில்லை. வாய்க்குள்ளேயே சொல்லிக்கொண்டாள். அப்போது இமைகள் படபடவென அடித்துக் கொண்டன:

"மருதி! இந்தா பானெயப் புடி; மானங் கருக்கலாயிடுச்சி. காத்தாலேயே மளெ வராப் புடியிருக்கு" என்றான் நாச்சியப்பன். பானையை வாங்கிக்கொண்ட மருதாய், மேலாக்கை இழுத்துச் சொருகிக்கொண்டு புது நடைபோட்டாள்.

அவன் முகத்தில் வெற்றிக் களிப்பு தாண்டவமாடியது. ஏணியைத்தோளில் தூக்கிக்கொண்டு பக்கத்து மரத்திற்குப் போய், ஏணியைச் சாத்தி வைத்துவிட்டு, பால் மங்கைத் துடைத்துப் பீலிப் பாலை எடுத்து சரக், சரக்கெனப் புது வேகத்தில் சீவித் தள்ளிவிட்டு நிமிர்ந்து நின்று மனைவி போவதைப் பார்த்தான். அவளும் திரும்பிக் கணவனைப் பார்த்தாள். அவன் சிரித்தான்; அவளும் சிரித்துவிட்டு நடந்தாள்.

மணி இரண்டுக்கு மேலாகிவிட்டது. பாலை ஸ்டோரில் சேர்த்துவிட்டு, வீட்டுக்குவந்த நாச்சியப்பன் நன்றாக குளித்துவிட்டு மாற்றுடை அணிந்துகொண்டான். மருதாய், கணவனுக்கும், குழந்தைகளுக்கும் சோறு பரிமாறினாள்; சாப்பாடு முடிந்தது.

புகை பிடித்துக் காவியேறிய மூட்டையொன்று மூலையில் தொங்கிக்கொண்டிருந்தது. ஏறி அவிழ்த்தான், இராமாயணம், தேசிங்குராஜன் கதை, இன்னும் பல பழுப்பு நிறமேறிய காகிதக் கட்டுகள் மூட்டையினுள் இருந்தன. இராமாயணத்தை எடுத்து வெளியில் வைத்தான். மற்றப் புத்தகங்களை முன் போலவே கட்டித் தொங்கவிட்டான். வெளியில் வந்து, பிராஞ்ஜாவில் உட்கார்ந்துகொண்டு கூட்டிக் கூட்டி இராகம் போட்டு இராமாயணத்தைப் படித்துக்கொண்டிருந்தான். மருதாய் கீழே உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தாள். பிள்ளைகள் சிலேட்டில் குறுக்கும் நெடுக்குமாக கோடுகளை இழுத்து 'அனா', 'ஆவன்னா' என்று படித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு பக்கம் கணவனின் இராயாயணம், மறுபக்கம் பிள்ளைகளின் மழலைப் பேச்சு. மருதாய் நடுவில் உட்கார்ந்து இன்பத்தில் லயித்தாள். இது வழக்கமாக ஒவ்வொருநாளும் நடைபெறும் நிகழ்ச்சியாகிவிட்டது. ஒழிந்த நேரத்தில் நாச்சியப்பன் தோட்டம் போடுவான்; பத்திரிகை படிப்பான்; கதை வாசிப்பான்.

நாட்கள் பல கடந்தன. குடிப்பதை நிறுத்தியபின் குடும்பத்தைக் கட்டுச் செட்டாக நடத்திவந்தான். தான் திருந்தியதுமல்லாமல் நான்கைந்து வாலிபர்களையும் திருத்தினான். இரவுப் பள்ளிக்கூடம் வைத்துத் தனக்குத் தெரிந்தவரையிலும் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்தான். தோட்டத்து மக்கள் அவனைப் புகழ்ந்தார்கள். "வாங்க வாத்தியாரே" என்று அன்புடன் கூப்பிட்டார்கள்.

நாச்சியப்பன் நல்லவனாகியதோடு, சூழ்ந்திருந்தோரில் சிலரையும் நல்லவர்களாக்கினான். ஒருநாள் வேலைக்குப் போய்வந்த நாச்சியப்பன், "மருதி என்னமோ நெஞ்சை அடைக்கிருப்லே இருக்கு. கொஞ்சந் தண்ணி கொண்டா" என்று சொல்லிவிட்டு வெளியில் கிடந்த வாங்கில் உட்கார்ந்தான். மருதாய் தண்ணீர் கொடுத்தாள். குடித்துவிட்டு, "தா, மருதி ரொம்ப அடைக்கிது. புள்ளைங்களே காவந்துபண்ணிக் கண்ணைத் தொறந்துடு" என்று சொல்லிவிட்டுப் படுத்தவன் மீண்டும் எழுந்து நடமாடவேயில்லை; மாரடைப்பால் இறந்துவிட்டான்.

ஊரே அழுதது. "நல்லசாவு, இதுமாதிரி ஒருத்தருக்குங் கெடைக்காது" என்றும் பேசிக்கொண்டார்கள். மருதாய் முட்டி, மோதிக் கண்ணீர் வடித்தாள். அந்த உத்தமி, கணவன் பிரிவால் தற்கொலை செய்துகொள்ளவும் துணிந்தாள்; ஆனால் குழந்தைகளின் அன்புமுகங்கள் அவளைத் தடுத்தன. குழந்தைகளுக்காகவே உயிர்வாழத் தீர்மானித்தாள்.

நாச்சியப்பன் இறந்து பத்து வருஷங்களுக்கு மேலாகிவிட்டன. கணவன் உயிரோடிருக்கும்போது வெளிவேலை செய்தறியாத அந்த உத்தமி, கணவனின் ஆணைக்காக உடலை வருத்தி வெளிக்காட்டு வேலை செய்து தன் குழந்தைகளைப் படிக்கவைத்துக் கொண்டிருக்கிறாள்.

★

நம்பிக்கைக்குரிய நகை வியாபாரிகள்!

ம. மு. முகமது இபுருஹீம் & கம்பெனி

M. M. Mohamed Ebrahim & Co.,

Manufacturing Jewellers & Diamonds, Cloth Merchants & Money Changers

64, & 77, PAUL STREET
SEREMBAN
Telegram "Jewellers"
Telephone No. 48
Post Box No. 30



27, BATU ROAD,
KUALA LUMPUR
Telegram "Jewellers"
Telephone No. 4655
Post Box No. 384

மனதைக் கவரும் உத்திரவாதமுள்ள
அழகிய ஆபரணங்களுக்குச் சிறந்த இடம்

எங்களது மெர்தேகா வாழ்த்துக்கள்!

கலியாணமா?

காதுகுத்தா?

மாதம் மும்முறை புதிய ஜவுளிகள் எல்லாவித விசேஷங்களுக்கும். ஒருமுறை விஜய மளியுங்கள்.

புதிய உற்பத்திகள்!

ஜெயலக்ஷ்மி ஸ்டோர்

134, சிராங்கூன்ரோடு
சிங்கப்பூர்-8
போன்: 20540.

35388

சுதந்திர மலாயாவும் விளையாட்டுக்களும்

— ஜோசப் ஜெகன் —

மெர்தேகா விழா மலாயா நாடெங்கும் இன்று கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. அன்னியர் ஆட்சியிலிருந்து விடுதலை பெறும் இந்த நன்னாளில் எங்கும் மகிழ்ச்சி தாண்டவமாடுகிறது. சுதந்திர தின விழா நிகழ்ச்சிகளில் விளையாட்டுக்களுக்கு முக்கிய பங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

சுதந்திர நாட்டுக்கு விளையாட்டுக்களும் அவசியம் என்பதைஅறிவுறுத்தும் வகையில், பல லட்ச வெள்ளி செலவில் இரவும் பகலும் நூற்றுக் கணக்கானவர்கள் உழைத்துக் கட்டிய மெர்தேகா விளையாட்டு ஸ்டேடியமும் சுதந்திர தின ஜனனத்தையொட்டித் திறக்கப்படுகிறது. சுதந்திரப் பிரகடனமும், விளையாட்டுக்கென விசேஷமாகக் கட்டப்பட்ட புதிய ஸ்டேடியத்தில்தான் நடைபெறும்.

மெர்தேகா தின விழாவையொட்டி விளையாட்டுக்கள் கடந்த 25-ம் தேதியே ஆரம்பமாகி விட்டன. இன்னும் செப்டம்பர் 8-ம்தேதி வரை இவ் விளையாட்டுக்கள் தொடர்ந்து நடைபெறும். பற்பல நாடுகளிலிருந்து நூற்றுக்கணக்கான விளையாட்டாளர்கள் சுதந்திர தின விளையாட்டுக்களைச் சிறப்பிக்க வந்திருக்கின்றனர். மெர்தேகா விளையாட்டுக்களில் கால் பந்தாட்டமும் பாட்மின்டனும் முக்கிய இடம் பெறும்.

வொங் பெங் சூன்

இந் நாட்டுக்கு விளையாட்டுத் துறையில் புகழ் தேடித் தந்த பல துறை ஆட்டக்காரர்களை இந்தச் சுதந்திரப் பெருநாளில் நாம் நினைவு கொள்ள வேண்டும். அவர்களுக்கு அஞ்சலி செய்யவேண்டும். அவர்கள் தேடித் தந்த புகழை சுதந்திர நாட்டில் பாதுகாத்து வர வேண்டும். எல்லா விளையாட்டுத் துறைகளிலும் தற்போதுள்ள இளைஞர்களும், வருங்கால யுவர்களும் நன்கு தேர்ச்சி பெற்றுச் சர்வதேசப்புகழ்பெற எல்லோரும் பாடுபட வேண்டும்; ஊக்கமளிக்க வேண்டும்; உதவ வேண்டும்; ஆதரவு காட்ட வேண்டும்.

புகழ் தேடித் தந்தவர்

இந் நாட்டுக்கு இது வரை பெரும்சர்வதேசப்புகழ்தேடித் தந்த விளையாட்டு பாட்மின்டன் ஒன்றுதான். பாட்மின்டன் என்றால் மலாயாவிலும் இன்னும் உலகெங்கிலும் எல்லோருக்கும் வொங் பெங் சூனின் பெயர்தான் முதலில் ஞாபகத்துக்கு வரும். மலாயாவுக்கு சர்வதேச பாட்மின்டனில் உச்ச ஸ்தானத்தைத் தேடித் தந்தவர் இவர்தான். "பாட்மின்டன் தந்தை", "பாட்மின்டன் மாந்திரீகர்"

பத்மலோசனி சொர்ண ஆபரணத் தொழிற்சாலை

பழ. கணபதி ஆச்சாரி

174, மெயின் ரோடு,

தைப்பிங்

வைரம். பவுன் கல், வெள்ளி நகைகள், எனுமல் கலர் நகைகள் **கியாரண்டி** யுடனும், பவுன் சுத்தமாகவும், அழகான வேலைப்பாட்டுடன், குறித்த தேதியில் செய்து கொடுக்கப்படும்.

முத்து அண் கோ.,

(வைர நகை வியாபாரிகள்)

ஜாலான் கங்சார்

கோலக்கங்சார்

வைரம், பவுன் கல், வெள்ளி நகைகள்

ஆர்டர்படி உத்தர வாதத்துடன்

குறித்த காலத்தில் செய்துகொடுக்கப்படும்

ஒரு முறை விஜயம்செய்தால் உண்மை விளங்கும்.

எங்களிடம் புதிதாக இந்தியாவில் இருந்து ஜவுளிகள் ஏராளமாக தருவித்திருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

பெங்களூர், பெனுரஸ், மைசூர் சில்க் & ஜார்ஜட் சேலைகளும், கோயம்புத்தூர் பேன்ஸி சேலைகளும், ஷிபோன் சேலைகள், புத்தம் புதிய ரகங்களும்,சோலி டிஸைன்களும் அமெரிக்கன் பேன்ஸி னைலான், பூ டிஸைன்களும்தருவித்திருக்கிறோம்.மேலும் எங்களிடம் 1-ரி. மான் சாப்புக் குடைகளும். 2-ரி. மான் சாப்புக் குடைகளும், முடிசாப்பு டிரெங்குப் பெட்டிகளும், எல்லாவித ரகங்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

து. ராமசாமி செட்டியார்,

16, அம்பாங் ஸ்திரீட்,

கோலாலம்பூர்.

போன் நெ. 5335

என்றெல்லாம் புகழ்பெற்ற இந்த மாஜி உலகச் சாம்பியன் தற்போது சம்பளம் பெறும் ஆட்டக்காரராகவும், மலாயா பாட்மின்டன் சங்கத்தின் அதிகார பூர்வமான பயிற்சியாளருமாக இருந்து வருகிறார். இவரது சேவை, இப்பொழுது மேல் நோக்கி வந்துகொண்டிருக்கும் யுவர்களுக்கும், பள்ளி மாணவ–மாணவிகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. இவருடைய விளையாட்டுச் சேவைகளைப் பாராட்டி, கடந்த வருடத்தில் ராணியார் இவருக்கு ஓ. பி. ஈ. பட்டம் வழங்கினார்கள்.

வொங் பெங் சூன் 1950–ல் முதல் முதலாக அகில இங்கிலாந்து சர்வதேச சிங்கிள்ஸ் சாம்பியன் பட்டம் பெறுவதில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தொடர்ந்து 1951–52–ம் வருடத்திலும் இந்தப் பட்டத்தைப்பெற்றார். 1954-ல் போட்டியில் கலந்துகொள்ளாமல் இருந்துவிட்டு 1955–ல் மீண்டும் வெற்றி பெற்றார். இவர் 1949, 1952, 1955–ல் நடைபெற்ற மூன்று தாமஸ் கப் போட்டிகளிலும் தொடர்ந்து ஆடியிருக்கிறார்.

தாமஸ் கப்

மலாயா, 1949–ல் முதன் முதலாக சர்வதேச பாட்மின்டன் போட்டியான "தாமஸ் கப்" போட்டியில் பிரவேசித்தது. அப்பொழுதெல்லாம் டென்மார்க்தான் சாம்பியன் நாடாக விளங்கியது. மலாயாவின் பெயர் அப்பொழுது தெரியாமல் இருந்து வந்தது. கிளாஸ்கோவில் நடைபெற்ற போட்டிகளில் முதலில் அமெரிக்காவைத் தோற்கடித்து, பின்பு பிரஸ்டனில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் டென்மார்க்கை 8–1–ல் தோற்கடித்து கிண்ணத்தை மலாயாவுக்குக் கொண்டு வந்தது மலாயா பாட்மின்டன் கோஷ்டி. அது முதல் தாமஸ் கப் மலாயாவில் பத்திரமாக இருந்து வருகிறது. இந்தியா, டென்மார்க், அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகள் 1952-லும் 1955-லும் மலாயா வந்து போட்டியிட்டுத் தோல்வியுற்றுச் சென்றன.

1949-ம் வருட முதல் தாமஸ் கப் போட்டியில் மலாயாவுக்கு ஆடியவர்கள் வொங் பெங் சூன், ஊய் டெய்க் ஹாக், லா டெய்க் ஹாக், ஓங் போ லிம், சன் கொன் லியாங் ஆகியோர்.

1949 முதல் மலாயா தாமஸ் கப்பைப் பெற்றதிலிருந்து எல்லா நாடுகளும் மலாயாவின் பாட்மின்டன் தரத்தைக்

எட்டி சூங்

கண்டு நடுங்கி வந்திருக்கின்றன. அன்று முதல் இன்று வரை யாரும் மலாயாவை எந்தப் போட்டியிலும் தோற்கடித்ததில்லை; கிண்ணத்தையும் கொண்டு சென்றதில்லை. வருங்காலத்திலும் அது அவ்வளவு எளிதாக நடந்துவிடாது.

மலாயாவுக்குப் பாட்மின்டன் உலகில் உயர்ந்த ஸ்தானத்தைத் தேடித் தந்தவர்களும், அந்த ஸ்தானத்தை இதுவரை வெற்றிகரமாகப் பாதுகாத்து வந்தவர்களுமான பலர் இப்பொழுது போட்டி ஆட்டங்களிலிருந்து விலகிவிட்டனர்; விலகியும் வருகின்றனர். வயது அவர்களைத் தடுத்து நிறுத்தி வருகிறது. இவர்கள் வரிசையில் உள்ளவர்கள் ஓங் போ லிம், ஊய் டெய்க் ஹாக், லிம் கீ பொங், டன் ஜிங் இயோங் ஆகியோர். இப்பொழுது முன்னணியில் இருந்து வரும் தாமஸ் கப் ஆட்டக்காரர்கள், எட்டி சூங், அப்துல்லா பிரூஸ் ஆகிய இருவர் மட்டும்தான். சூர்ஜிட் ராஜ் என்ற இந்தியர், சன் சியோங் கொக், லாய் பூக் ஹிங், லிம் கேய் லொன், எம். சடாலி, சூன் டெய்க் ஹியா, முதலிய இளம் ஆட்டக்காரர்கள் இப்பொழுது தலைதூக்கியிருக்கின்றனர். வருங்கால சுதந்திர மலாயாவில் தாமஸ் கப்பைப் பாதுகாக்கும் பொறுப்பு இவர்களைச் சாரும்

ஹாக்கி

பாட்மின்டனுக்கு அடுத்து மலாயா புகழைத் தேடியிருக்கும் விளையாட்டு ஹாக்கி. முதல் தடவையாக மலாயா கடந்த வருடத்தில் மெல்போர்ன் ஒலிம்பிக்கில் கலந்து கொண்டது. அத்துடன் நல்ல புகழையும் சம்பாதித்துக் கொண்டது. சாம்பியன் நாடான இந்தியாவுக்கு அடுத்தபடியாக இருந்த பிரிட்டனுடன் ஒலிம்பிக்கில் மலாயா ஆடி முதல் ஆரம்ப ஆட்டத்தில் டிராவாகியது. தொடர்ந்து பல எதிர்பாராத பெரும் வெற்றிகளையும் அடைந்தது. எல்லா நாடுகளும், உலகில் இதுவரை ஹாக்கி தெரியாதிருந்து வந்த மலாயாவை, மதிக்கக் கூடிய ஒரு பலமான ஹாக்கி நாடு என ஏற்றுக் கொண்டன.

மலாயாவில் ஆயிரக்கணக்கான பேர்களை ஒரே தடவையில் இழுக்கும் விளையாட்டு கால் பந்தாட்டம் ஒன்றுதான். இது மலாயாவின் இரண்டாவது தேசிய விளையாட்டு என்று கூறலாம். சர்வதேசக் கால் பந்தாட்டத்தில் மலாயா

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று"—பாரதியார்.

கங்சார் ஜெனரல் ஸ்டோர்ஸ்
38, ஜாலன் டத்தோ

போன்: 78. கோலக்கங்சார். த. பெ. எண்: 20.

நீங்கள் விரும்பும் புதிய வெளியீடுகளான தமிழ், ஹிந்துஸ்தானி, மலாய், இங்கிலீஸ் ரிக்கார்டுகள் எங்களிடம் கிடைக்கும்.

YOUR FAVOURITE LATEST FILM RECORDS AVAILABLE AT:

KANGSAR GENERAL STORES

38, JALAN DATOH, KUALA KANGSAR

எமது வாடிக்கைக்காரர்களுக்கு மெர்தேகா தின வாழ்த்துக்கள் ★

அசல் பவுன், வைர நகைகள், நாகரீகமான புதிய டிசைன்களில் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.

வை. சுப்பையா பத்தர்,

(பவுன், வைர நகை வியாபாரம்)

21, ரம்போ ஸ்திரீட், கிள்ளான்.

(நெருப்பணைப்பு நிலையத்துக்கு எதிரில்)

V. SUPPIAH PATHER,

(Opposite Fire Station)

21, Rembau Street, KLANG. ★

சிறந்த சைவ உணவுக்கும், உயர்ந்த ரக சிற்றுண்டிக்கும் உகந்த இடம்
சிங்கையில்

கோமள விலாஸ் ரெஸ்டாரெண்ட்

ஒன்றேதான்

திருமணம், தேநீர் விருந்து முதலிய விசேஷ நிகழ்ச்சிகளுக்குரிய ஆர்டர்களை உடனுக்குடன் திருப்திகரமான முறையில் தயாரித்துக் கொடுக்கப்படும்.
குறிப்பிட்ட பார்ட்டிகளுக்கு பிரத்தியேக இடமுண்டு.
ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

கோமள விலாஸ் ரெஸ்டாரெண்ட்

76-78, சிராங்கூன் ரோடு, சிங்கப்பூர்-8. Tel. 20961.

எந்தவிதமான புகழையும் அடையாவிட்டாலும் ஆசிய நாடுகளில் மலாயா ஒரு நல்ல கால் பந்தாட்ட நாடாகக் கருதப்படுகிறது. மலாயா கடந்த வருடத்தில் முதல் தடவையாக ஆசிய கால்பந்துப் போட்டியில் கலந்து கொண்டது. இந்த ஆட்டம் இப்பொழுது சிறிது சிறிதாக முன்னேற்றமடைந்து வருகிறது. ஆனால் சர்வதேச தரத்தையடைய இன்னும் நீண்ட காலம் பிடிக்கும். சுதந்திர மலாயாவில் கால்பந்தாட்டத்துக்கு நல்ல வருங்காலமுண்டு.

ஓட்டப் பந்தயங்களில் மலாயா கடந்த சில வருடங்களில் நல்ல முன்னேற்றமடைந்து வந்திருக்கிறது. கடந்த வருடத்தில் முதல் தடவையாக ஒலிம்பிக்கிலும் கலந்து கொண்டது. அங்கு மலாயா ஓட்டக்காரர்கள் எந்தவித வெற்றியும் அடையாவிட்டாலும் நல்ல அனுபவம் பெற்று வந்தார்கள்.

இதர விளையாட்டுக்களான டென்னிஸ், பாஸ்கெட் பால் (கூடைப்பந்து), கிரிக்கெட், ரக்பி, மேஜை டென்னிஸ் முதலியவைகளில் மலாயா ஆட்டக்காரர்கள் கடந்த சில வருடங்களில் கணிசமான அளவு தேர்ச்சி பெற்று வந்திருக்கின்றனர்.

புகழடைய வேண்டுமானால்...

சுதந்திர மலாயாவில் விளையாட்டுக்கள் உயர்ந்த தரத்தையும் புகழையும் அடைய வேண்டுமானால் அவ் விளையாட்டுக்களை நிர்வகிக்கும் பல்வேறு ஸ்தாபனங்களின் நிர்வாகிகளும் சர்க்காரும் கீழ்க்கண்ட விஷயங்களை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்:—

(1) பள்ளி மாணவ—மாணவிகள் பள்ளிகளைத் தவிர மற்ற எந்த ஸ்தாபனத்திற்கும்போட்டி விளையாட்டுக்களிலோ அல்லது எந்த விளையாட்டுக்களிலும் கலந்துகொள்ளக் கூடாதென்று சர்க்கார் இப்பொழுது விதித்திருக்கும் தடையை, உடனடியாக அகற்ற வேண்டும். இத்தடை, விளையாட்டுக்களின் வளர்ச்சியைப் பெருமளவில் தடை செய்து வந்திருக்கிறது. பள்ளி மாணவர்கள் பள்ளியில் இருக்கும்போதே பல ஸ்தாபனங்களுக்கும், பள்ளிகளுக்கும் விடாமல் ஆடி நல்ல தேர்ச்சி பெற்றிருப்பார்களேயானால், பள்ளியைவிட்டுச் சென்று பொது ஸ்தாபனங்களுக்கோ அல்லது தங்கள் சமூக ஸ்தாபனங்களுக்கோ விளையாடும்போது விளையாட்டுக்களில் உச்ச நிலையை அடைந்திருப்பார்கள். இளம் பிராயத்தில் பள்ளியில் இருக்கும்போதே நல்ல பயிற்சி பெற்றிராவிட்டால் பின்பு பொது விளையாட்டுக்களில் கலந்துகொள்ளும் போது குறைந்த அளவு பயிற்சியே பெற்றிருப்பார்கள். இவர்கள் இதற்குப் பின் பயிற்சி பெற்று உச்ச நிலையை அடைவதற்குள் வயது அவர்களைத் தடுத்துநிறுத்தி விடும்.

(2) இந் நாட்டில் நடைபெறும் சகலவிதமான விளையாட்டுப் போட்டிகளுக்கும், அவற்றை நடத்தும் சங்கங்கள் வெளிநாடுகளிலிருந்து பிரபலமாக விளங்கும் நன்கு தேர்ச்சி பெற்ற விளையாட்டாளர் கோஷ்டிகளைக் கலந்து கொள்ளும்படி அழைக்க வேண்டும். அதேபோல் வெளிநாடுகளில் நடைபெறும் முக்கிய போட்டிகளில் இங்குள்ள விளையாட்டு ஸ்தாபனங்கள், விளையாட்டாளர்கள் கோஷ்டிகளைப் பங்கு பெற அனுப்பி வைக்க வேண்டும். இதனால் மலாயா விளையாட்டாளர்கள் நல்ல அனுபவமும் தேர்ச்சியும் அடைய இடமுண்டு. இதற்குச் சர்க்கார் அவ்வப்போது நிதியுதவியளிக்க வேண்டும்.

(3) இந்தியாவில் ராஜகுமாரி பயிற்சித் திட்டம் இருப்பது போல், அரசாங்கம் விளையாட்டுப் பயிற்சித் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். பல இடங்களில் பல்வேறு விளையாட்டுக்களுக்கான பயிற்சி நிலையங்கள் அமைக்க வேண்டும். விளையாட்டுக்களில் பிரகாசமாகக் காணப்படும் இளைஞர்களை இப் பயிற்சி நிலையங்களுக்கு அனுப்பிப் பயிற்சி பெறச் செய்ய வேண்டும். நாடெங்கும் விளையாட்டுத் திடல் வசதிகளைச் செய்துதர வேண்டும்.

(4) வெளிநாடுகளிலிருந்து பல்வேறு விளையாட்டுக்களுக்குப் பயிற்சியாளர்களைத் தருவிக்க வேண்டும்.

சுதந்திர மலாயாவில் விளையாட்டுக்களுக்கு நல்ல பிரகாசமான வருங்காலமுண்டு. இதற்கு நமது பிரதம மந்திரியும், மலாயா கால்பந்தாட்டச் சங்க பன்முறைத் தலைவருமான துங்கு அப்துல் ரஹ்மானின் முழு ஆதரவையும் நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

மலாயாவுக்கு வந்த முதல் ஆங்கிலேயர்

ரால்ப் பிட்ச் என்பவர் சிரியா, பாரசிகம், இந்தியா ஆகிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு பர்மா, ஸயாம், மலாக்கா முதலிய இடங்களுக்கு வந்தார். அப்புறம் அவர் 1591-ல் லண்டனுக்குத் திரும்பினார். மலாக்காவில் அவர் 7 வாரங்கள் தங்கியிருந்தார். மலாயாவுக்கு முதல் முதலாக வந்த ஆங்கிலேயர் அவர்தான் என்று தெரிய வருகிறது. அவரும், அவர் காலத்தில் வாழ்ந்த வான் வின்ஷோட்டன் என்பவரும் கொடுத்த தகவல்களின் பேரில் லண்டன் வர்த்தகர்கள் கீழ் நாட்டில் வியாபாரம் செய்யப் புது முயற்சிகள் செய்யத் தொடங்கினார்கள்.

பாரமவுண்ட்
ரேடியோ சர்வீஸ்
178, புரூஸ்டர் ரோடு
ஈப்போ

போன்: — 4370

ரேடியோ, குளிர் சாதனப் பெட்டி
இதர மின்சார சாதனங்கள்
விற்பனையாளர்கள்

பதிவு செய்யப்பட்ட வயரிங்
கண்ட்ராக்டர்கள்

மகத்தான சேவைக்கு
பாரமவுண்ட்

V. K.
கல்யாண சுந்தரம்
நிர். 3, ஸ்டேஷன் ரோடு,
சிலிம் ரிவர்

போன் — 250

உயர்ந்த துணி வகைகள்
மளிகைச் சாமான்கள்
அனைத்தும் கிடைக்கும்

கிளை: 45, அன்சன் ரோடு,
தெலுக்கான்சன்

சுதந்திர இந்தியாவில் தயாரிக்கப்
பட்ட கைத்தறி ஜவுளிகளை
ஆதரியுங்கள்!

கல்யாணத்திற்குரிய நவீன நாகரிக முறையில் - பல கலர்களில் தயார் செய்த காசி புட்டாச் சேலைகள், பெங்களூர் பட்டுச் சேலைகள், நூல் சேலை ரகங்கள், வேஷ்டிகள், சால்வை, கைலி தினுசுகளும், ஸ்டீல் டிரங்க் பெட்டிகளும் விலை சகாயமாய்க் கிடைக்கும்.

மு. காளியப்பன்
ஜவுளி வியாபாரம்

நிர். 55, பெல்பீல்டு ஸ்ட்ரீட்,
போன் 3906 ஈப்போ த. பெ. 117

பேரா புக் ஸ்டோர்
60, மெயின் ரோடு.
தைப்பிங்
(மலாயா)

த. பெ. எண் 82, — போன்: 688
பதிவு எண் 25101

எல்லாப் பத்திரிகைகளும், ஸ்டேஷனரி சாமான்களும், பிறவும் எங்களிடம் கிடைக்கும்.

கிளை: 93, பெல்பீல்டு ஸ்ட்ரீட்,
த. பெ. எண் 277 ... போன்: 5013
ஈப்போ



கோலாலம்பூர் நகரில் சர்க்கார் கட்டடங்கள்



கோலாலம்பூர் ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவில், (செந்தூலில் நாட்டுக்கோட்டை செட்டியார்கள் கட்டியது)

மலாயா பெடரேஷனின் தலைநகரான கோலாலம்பூரிலுள்ள மற்ற
மதத்தினரின் கோவில்கள் சிலவற்றை அடுத்த பக்கங்களிற் காண்க



கிறிஸ்தவத் தேவாலயம்
(புக்கிட் நானஸ்)



சீக்கியர் குருத்வாரம்
(பேர்க்கின்ஸ் ரோடு)

சிங்களவர்கள் கட்டிய புத்தர் கோவில் – *(பிரிக்பீல்ட்ஸ்)*



மலாய்க்காரர்களின் மசூதி – (மவுண்ட்பேட்டன் ரோடு)

சீனர்களின் பௌத்தக் கோவில் – (பர்ச் ரோடு)

மலாயாவில் கிடைத்த பழங்கால

சில சிலைகள் சிதைந்து போயிருக்கின்றன. ஒவ்வொரு சின்னத்தின் கீழும், அது 15-ம் நூற்ருண்டுக்கு முற்பட்டவை. இந்த 18 படங்களையும்

அவலோகிதேஸ்வரர்
வெண்கலச்சிலை
(சுங்கை சிப்புட்)

அவலோகிதேஸ்வரர்
வெண்கலச்சிலை
(சுங்கை சிப்புட்)

சுமார் 8-வது நூற்ருண்டை
சேர்ந்த போதிசத்துவர்
வெண்கலச்சிலை (பிடோர்)

சிவனுடைய வெண்கலத்
திரிசூலமும், ஆசனத்தின்
பகுதிகளும் (கிட்டா)

மஜாபஹித் ஹிந்து மன்னர்கள்
காலத்திய கல்வெட்டு
(சங்கப்பூ')



ஹிந்து மன்னர்கள்
அணிந்திருந்த (?) 'பெல்ட்'டின்
பகுதிகள் (கிட்டா)



விநாயகர்
(கிட்டா)

மகரம்
(மலாக்கா)

துர்க்கை
(கிட்டா)

ஹிந்து, பௌத்த சின்னங்கள்

அகப்பட்ட இடத்தின் பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சின்னங்கள் யாவுமே கொடுத்து உதவியவர் குவாந்தான் அறிஞர் எஸ். துரைராஜ சிங்கம்.

புத்த மதத்தைச் சேர்ந்த ஒரு
ராஜாதி ராஜர் 15 ம் நூற்றாண்டு
(பத்தாங் பாடாங்)

துர்க்கை
(கிட்டா)

5 ம் நூற்றாண்டைச் சேர்ந்த
பௌத்த வெண்கலச் சிலை
(பெங்காலன், ஈப்போ)

நந்தியின் தலை
(கிட்டா)

யாளியும் மகரமும்
(மலாக்கா)

விநாயகர்
(கிட்டா)

மஜாபஹித் ஹிந்து மன்னர்கள்
காலத்திய தங்க நகைகள்
(சிங்கப்பூர்)



சமஸ்கிருதத்தில் புத்தமதக்
கோட்பாடு எழுதப்பட்ட
பலகை (கிட்டா)



பௌத்த ஏடுகள்



துணிகளுக்கு சித்திரங்கள் போடும் அலோர் ஸ்டார் மலாய்ப் பெண்மணிகள்

கிளந்தான் வெள்ளிக் கழுத்தணியைக் கணவர் சூட்ட மனைவி மகிழ்கிறாள்

கிளந்தானில் மலாய்த் தொழிலாளியின் நுட்பமான வெள்ளி வேலை

காமரான் மலைத் தேயிலையைப் பொட்டலம் போடும் சீனப் பெண்மணிகள்

பஹாங்கில் வாழும் பூர்வ குடிகளின் குடும்பம்

மரக்கட்டையில் மூங்கில் குழாய்களால் தட்டி நாதம் எழுப்பிக் கொண்டு நாட்டிய கீதம் பாடும் பூர்வகுடிப் பெண்கள்

மலாயாவில் தமிழ்க்கல்வி

டி. ஜே. டி. ராஜிலு

சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன், இந்தியாவிலிருந்த நான் மலாயாவில் தமிழாசிரியருக்கு நல்ல கிராக்கி என்று கேள்விப் பட்டு, நான் அங்கு செய்து வந்த ஆசிரியத் தொழிலை விட்டுவிட்டு, நாகையில் கப்பல் ஏறி, கோலக் கிள்ளான் வந்திறங்கினேன். வீதி வழியே வரும்போது தபாலாபீஸுக்குப் பக்கத்தில் ஒரு தமிழ்ப் பாடசாலையைக் கண்டேன். மலாயாவில் தமிழ்ப்பாடசாலையைக் கண்டமாத்திரத்தில் உற்சாகமேலீட்டால் உள்ளே சென்று தலைமை ஆசிரியருக்கு வணக்கம் செலுத்தினேன். அவரோடு பேசிக்கொண்டிருந்துவிட்டு, பின்பு ஒரு வாடகை மோட்டாரில் ஏறி, சுமார் ஐம்பது மைல் தூரத்தில் எனது சிறிய தகப்பனார் வேலை பார்த்த ஒரு தோட்டத்தை வந்தடைந்தேன்.

அடுத்த நாள் காலை நல்ல மழை பெய்து குளிர்வாடை வீசிக்கொண்டிருந்தது. சுமார் ஆறரை மணிக்கு, சுற்றுக் குடுமியும், பெரிய மீசையும், க்ஷவரம் செய்யப்படாமல் வளர்ந்திருந்த சிறிய தாடியும், ஒரு காக்கி அரைக்கை சட்டையும், அதன் மேல் ஒரு அழுக்குப் படிந்த துண்டும், முழங் காலுக்குக் கீழ் இறங்கிய குண்டஞ்சி வேட்டியும், வெற்றுக் காலுமாக சுமார் 45 வயதுடைய ஒருவர், ஐந்து முதல் எட்டு வயது மதிப்பிடத்தக்க சில ஆண், பெண் குழந்தைகளை விரட்டிக் கொண்டு, 'ஓடு, ஓடு தொரை ஆபீஸுக்கு வந்திடுவாரு, ஓடுங்கடா' என்று சப்தமிட்டதைக் கேட்டு ஒன்றும் புரியாதவனாய் எங்கள் வீட்டு வேலைக்காரனிடம், 'இவன் யார்? இந்தப் பிள்ளைகளை ஏன் இப்படி விரட்டுகிறான்?' என்று கேட்டேன். அதற்கு அவன், 'அவுரு வாத்தியாருங்க, பள்ளிக்கொடத்துக்குப் புள்ளைகளை ஓட்டிக்கிட்டுப் போறாருங்க' என்றான். 'அடப்பாவி! இந்த மழையிலே இவ்வளவு காலையில் சின்னப் பிள்ளைகள் போய் என்ன படிக்கும்? எப்போ திரும்பும்?' என்று கேட்டேன். 'இவுங்க ஒம்பது மணிக்கெல்லாம் வந்திடுவாங்க, அப்பற மேலே வேலெக்காட்டுப் பொடியங்க இரண்டு மணிக்குப் போயி அஞ்சி மணிக்கு வருவாங்க' என்றான். 'இந்த வாத்தியாருக்கு என்ன சம்பளம்?' என்று கேட்க, 'ஏழு வெள்ளிங்க' என்றான். கணக்குப் பார்த்தேன்; ஏழு வெள்ளியென்பது பத்தரை ரூபாய் தானே ஆகிறது, ஊரில் முப்பத்தி நாலு ரூபாய் சம்பளம் வாங்கிய நான், இங்கு அதிகம் சம்பாதிக்கலாம் என்று எண்ணிக் கப்பல் ஏறினேனே, இந்த ஏழு வெள்ளிதான் நமக்கும் கிடைக்குமோ என்று ஏங்க ஆரம்பித்தேன்.

அன்று மாலை சுமார் இரண்டு மணி இருக்கும். அதே ஆசாமி, உத்தேசம் 10, 12 வயதுள்ள சில பிள்ளைகளை, 'ஓடுங்கடா தொரெ கிராணி வந்திடுவாரு, இன்னு மீதிப் பயலுவொ எங்கடா?

சுதந்திர மலாயா தன்னில்
சுமுகமாய் வாழ்வோம் நாமே!

எஸ். கே. எஸ். சின்னமுத்து
சில்க் ஸ்டோர்,
31, பிஷப் ஸ்திரீட்,
பினங்கு.

தனிச்சிறப்புற்ற
தமிழ்நாட்டு நாகரீகத்திற்கேற்ற
ஜவுளி தினுசுகள்
சகாய விலைக்குக் கிடைக்கும்.

தபால் பெட்டி: 322. போன்: 2604.

மூன்று நட்சத்திரம்

1 எனுமல் போட்டோ ஸ்டோன்:
மோதிரம், லாக்கெட், புருஸ் முதலிய வைகளில் வைத்துக் கட்டக்கூடிய உங்களின் சொந்த எனுமல் போட்டோக் கற்கள்

2 ஆண்டவர் ஜவ்வாது பவுடர்:
அணிந்து கொண்டால் எந்த நேரமும் சுகந்த மணம் வீசும்.

3 கல்சர் ஸாரீஸ்:
நாகரீகப் பெண்களுக்கேற்ற ஜரிகை பின்னல் வேலை செய்த ஜார்ஜெட் & கிரேப் நினன் புடவைகள்

தேவைக்கு எழுதுங்கள்
வியாபாரிகளுக்கு தனி விகிதம் உண்டு.

Oriental Agencies
138, Datokramat Road,
PENANG.

மலாயா மக்களுக்கு
எங்கள் சுதந்திரதின வாழ்த்து

★

எங்களிடம் மாத, வார ஏடுகளும், ஆரம்ப தமிழ்ப் பள்ளிக்குரிய பாடப் புத்தகங்களும், திருமண வாழ்த்து மடலும் மற்றும் தமிழ் அறிஞர்களின் நூல்கள் அனைத்தும் கிடைக்குமிடம்:

★

திருவள்ளுவர் நூல் நிலையம்
113, சிராங்கூன் சாலை
சிங்கப்பூர்-8

ஸ்தாபிதம்: 1954
வியாபாரப் பதிவு எண்: 27386

ராஜா ஸ்டோர்
41, புருஸ்டர் ரோடு
பாகன்டத்தோ

எங்களிடம் பலவிதமான பலசரக்கு சாமான்களும், ஜவுளி தினுசுகளும், பிராந்தி வகைகளும், சில்லறையாகவும் மொத்தமாகவும் மலிவான விலையில் கிடைக்கும்.

RAJA STORE
General Merchant, Wholesales & Retailer
for Textiles, Liquor and Estate Supplier.
4, Brewster Road,
Bagan Datoh, (Perak)

இனுஸாப்பிட்டரு, கினுஸாப்பிட்டரு வந்திட்டா பெரிய வம்புடா, இப்பத்தாண்டா பள்ளிக்கொடம் பதியிறுத்துக்கு தொரெ எழுதிப் போட்டிருக்கான்' என்று சொல்லிக் கொண்டே விரட்டிக் கொண்டு போனார்.

பாடசாலை ஆசிரியனாக வேலை செய்ய ஆசைப்பட்டுக் கப்பலேறிய எனக்கு அப் பள்ளிக்கூடத்தைப் போய் பார்க்க வேண்டும் என்னும் ஆவல் ஏற்பட்டது. மலாயாவில் உத்தியோகஸ்தர்கள் முழுக்கால் சட்டை, ஷர்ட், கோட், சப்பாத்து முதலியவை அணிய வேண்டும் என்று கேள்விப்பட்டு, இந்தியாவில் தயாரித்து வந்த ஒரு ஜோடி உடுப்பை (சூட்) அணிந்து கொண்டு, 'பள்ளிக்கூடத்துக்கு எப்படிப் போகிறது?' என்று எங்கள் வேலைக்காரனைக் கேட்க, 'இந்த இஸ்டோருக்குப் பின்னாலே ஒரு அள்ளூரு இருக்குங்க, அதுலே ஒரு ஒத்த மரப்பாலங்க, அதுக்கு அந்தாண்ட பள்ளிக் கொடங்க' என்றான்.

சேற்றிலும், சகதியிலும், மெல்லச் சமாளித்துக் கொண்டு வேலைக்காரன் காட்டிய வழியே சென்றேன். இந்தியாவிலிருந்த கிராமப் பாடசாலையைவிட மோசமான ஒரு தகரக் கொட்டகை. அதில் பன்னிரண்டடி நீளமான சில வாங்குகளும், சாய்வு மேஜைகளும், உபாத்தியாயருக்கு ஒரு ஓட்டை மேஜையும், உட்கார ஒரு பால் பெட்டியும் இருந்தன. பின் பக்கத்தில் தொழிலாளர் தோட்டங்களும், மாட்டுக்கொட்டகைகளும் இருந்ததனால் துர்நாற்றம் வீசிற்று. சுமார் மூன்றரை மணிக்குப் போன என்னைக் கண்ட மாத்திரத்தில் குதித்தெழுந்த அவரது உடல் ஆட ஆரம்பித்துவிட்டது. "ஐயா சலாங்க, இன்னைக்குப் புதுக்காட்டுலெ நெருப்புப் புடுச்சிக்கிச்சுங்க, பொடியங் காட்டுப் புள்ளெங்க இன்னம் வல்லிங்க, தொரெ, கிராணி எல்லாம் அங்கெதானுங்க. சின்னக் கிராணி நாலு மணிக்கு வந்து பேரு போடு வாருங்க'' என்று சொன்னார். இவை ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. ஏனென்றால் நான் இந்த நாட்டிற்குப் புதியவன். ஆனால் சில நிமிஷங்களுக்குள் சில பிள்ளைகள் அழுக்குத் துண்டுகளை இடையில் கட்டிக் கொண்டு, வெற்றுடம்புடன், தலையில் எண்ணெய்ப் பசைகூட இல்லாமல் பறட்டைத் தலையோடு ஒரு சிலேட்டும் புத்தகமும் எடுத்து வந்தனர். வந்தவுடன் 'படிங்கடா' என்று ஒரு சத்தம் போட, பிள்ளைகள் ராகத்துடன் படிக்க ஆரம்பித்தனர்

மேற்படி உபாத்தியாயர் என்னைச் சற்று நிதானித்துப் பார்த்து, 'ஐயா, நீங்க இன்ஸ்பெட்டருங்களா?' என்றதும்தான் எனக்கு விஷயம் விளங்கிற்று. 'இல்லை, நான் ஊரிலிருந்து வந்திருக்கும் ஒரு உபாத்தியாயர்' என்றேன். பிறகு அவர் உடலும், மனமும் ஒருவாறு நிதானத்துக்கு வந்தன. மேற்படியாரை, 'உமக்கு என்ன சம்பளம்?' என்று கேட்டதற்கு,

முதலாவதாகத் தமிழ் கற்பிக்கப்பட்ட பாடசாலை

சரித்திரங்களை ஆராயுமிடத்து, தென்கிழக்கு ஆசியாவில் ஆங்கில மொழி கற்பிக்க 1816-ம் வருஷம் அக்டோபர் மாதம் 21-ம் தேதி, முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட பினாங்கு இலவசப் பாடசாலை (Penang Free School) யில், பினாங்கு ஆங்கிலக் கிறிஸ்தவர்களின் விசேஷ குருவாகப் பணியாற்றிய மறைத் திரு. ஆர். எஸ். ஹட்சிங்ஸ் (Rev: R. S. Hutchings) அவர்களின் பெருமுயற்சியால் 1850-ம் வருடம் முதல் தமிழ் வகுப்புகள் நடத்தப்பட்டதாகவும், பின்னர் பினாங்கிலும், மலாக்காவிலும் ஆங்கில–தமிழ்(Anglo–Tamil Schools) பாடசாலைகள் நடத்தப்பட்டதுடன், பினாங்கில் ஒரு நகரத் தமிழ்ப் பாடசாலை (Town Tamil School) சர்க்கார் மானியம் பெற்று நடத்தப்பட்டதாகவும், சுமார் பத்து வருடங்களில் அவை மங்கிவிட்டதாகவும் தெரிகிறது.

முற்காலங்களில் இந் நாட்டிற்கு சஞ்சி முறையில் கொண்டு வரப்பட்டு, காப்பி, கரும்பு, தென்னை, ரப்பர் முதலிய தோட்டங்களில் தொழில் செய்தவர்களில் ஏதோ சொற்பத் தமிழறிவு படைத்தவர்களே இந் நாட்டின் தமிழாசிரியர்களாவர். இவர்கள் தாமாக முன் வந்து திண்ணைப் பள்ளிக்கூட முறையில் பாடங்கற்பித்தனர். இம் முறை பிராவின்ஸ் வெல்லஸ்லி, மலாக்கா, வட ஜோகூர் முதலிய மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்டு நாளடைவில் இதர மாகாணங்களிலும் பரவிற்று என்னலாம். பின்னர் சில நல்ல பாடசாலைகள் உருவாகி சர்க்கார் மானியம் பெறும் பாடசாலைகளாக வளர்ந்திருந்தன என்பதற்கு 1895 ம் வருடம் பேரா மாகாணத்தில் சர்க்கார் உதவி பெறும் இரு பாடசாலைகளிருந்திருக்கின்றனவென்று குறிப்புக்கள் இருக்கின்றன.

இப்பொழுது மலாயா சமஷ்டியில் சுமார் 900 பதிவு செய்யப்பட்ட இந்தியப் பாடசாலைகளும் (தெலுங்கு, மலையாளம், ஹிந்தி உட்பட) 45,000 மாணவ–மாணவிகளும் 1650 ஆசிரியர், ஆசிரியைகளும் இருக்கின்றனர் என்று புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வருகிறது.

—டி. ஜே. டி. ராஜிலு

எமது வாடிக்கைக்காரர்களுக்கு

மெர்தேகா தின வாழ்த்துக்கள்!



அசல் பவுன் வைர நகைகள்
நாகரீகமான புதிய டிசைன்
களில் குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

வை. ராசு பத்தர்
91. ரம்பாவ் ஸ்திரீட், கிள்ளான்
மலாயா.

மெர்தேகா வாழ்த்துக்கள்!

சிலோன் ரெஸ்டாரெண்ட்
(ஸ்தாபிதம் 1916)

12, மலாய் ஸ்திரீட், கோலாலம்பூர்

போன்: 4811

இந்தியச் சிற்றுண்டிகள்
எந்த நேரத்திலும், சூடாகவும்
சுவையாகவும், சுத்தமாகவும்
கிடைக்கும்

THE CEYLON RESTAURANT

12, Malay Street, Kuala Lumpur

Phone: 4811

வாழ்க தமிழ்!

தமிழன்பர்களுக்குத் தேவையான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, ஆராய்ச்சிகள், வரலாறுகள், கட்டுரைகள், அகர வரிசை (அகராதி)கள், நீதி நூல்கள், சொற்பொழிவு நூல்கள், நாவல்கள், மருத்துவ நூல்கள், சோதிட நூல்கள், துப்பறியும் நாவல்கள், தமிழ்ப் பள்ளிக்குரிய தமிழ்ப்பாடப்புத்தகங்களனைத்தும் ஒருங்கே கிடைக்கப்பெறும்.

விவரங்கட்கு,

கலைமகள் புத்தக நிலையம்

113. சிராங்கூன் சாலை
சிங்கப்பூர் - 8

மெர்தேகா
வாழ்த்துக்கள்

**அசோகா
பலைகாட்
கம்பெனி**

4, மலாய் ஸ்திரீட், கோலாலம்பூர்
போன் நெ: 5842 த. பெ. நெ: 649

எங்களிடம் "சாப் ராஜா ராணி"
கைலிகள், துண்டுத் துணிகள்
நயமாகக் கிடைக்கும்

ASOKA PALAIKAT CO.,
4, MALAY STREET,
KUALA LUMPUR

Telephone: 5842 **P. O. Box: 649**

'எனக்கு ரெண்டு சம்பளங்க; பள்ளிக்கொடத்துக்கு ஏழு வெள்ளிங்க, கோயில்ல மணி யடிக்கிறதுக்கு நாலு வெள்ளிங்க. பொம்பளையாள் வேலைக்குப் போவுதுங்க. அதுக்கு ஒரு அஞ்சாறு வெள்ளி கிடைக்குங்க. தோட்டத்துல எதும் நம்மைதீமெ நடந்தா எதும் கிடைக்குங்க' என்று அடுக்கிக் கொண்டே போனார். இப்படியாக அந்தக் காலத்தில் பூசாரி, கங்காணி, பால்வெட்டு, தேங்காய் மூட்டை தூக்கி வாத்தியார்கள், சின்ன உபாத்தியாயர்களாகவும், தோட்டச் சிப்பந்திகளில் தமிழ்க் கற்றவர்கள் பெரிய உபாத்தியாயர்களாகவும் வேலை செய்தனர் என்று எனக்குத் தெரிய வந்தது. இம் முறையில் அப்போது மலாயாவில் சுமார் 500-க்கு மேற்பட்ட பாடசாலைகள் இருந்தன.

அங்கொன்றும், இங்கொன்றுமாக இந்தியாவிலும், இலங்கையிலும் போதனை முறைப் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் இருந்தனர். எனினும், அவர்களில் பெரும்பாலோர்

மாணவிகளின் உடற்பயிற்சி.

நகரங்களில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளிலும் நிர்வாக சபை பாடசாலைகளிலும் பணி புரிந்து வந்தனர். சிலர் தோட்டங்களில் பணியாற்றினும் அவர்களது அந்தஸ்து பின்னணியில்தான் இருந்தது. பள்ளிக்கூடத்துடன் இணைக்கப்பட்ட சிறு அறைகளில் பிள்ளை குட்டிகளுடன் வாழ்ந்தனர். இருபது முதல் இருபத்தைந்து வெள்ளி சம்பளத்தில் நாலைந்து குழந்தைகளுடன் ஜீவிப்பதே கஷ்டமாயிருந்த போது, சேமிப்பு என்பதற்கே வழியில்லை. பள்ளிக்கூடங்கள்

எடின்பரோ எஸ்டேட் தமிழ்ப் பாடசாலையில் வகுப்பு நடக்கிறது.



தோட்ட முதலாளிகளுடையவை. அக்காலத்தில் மாணவர்களின் ஆஜர் சஞ்சிகையின் படி சர்க்கார் மானியம் (கிராண்ட்) கொடுக்கப்பட்டதனால், இருபது முதல் இருபத்தைந்து வெள்ளிக்கு மேல் சம்பளம் கொடுக்கத் தோட்டத்தில் பணமில்லை என்று முதலாளிகள் மறுத்தனர். ஆனால், அனுதாபமிக்க சில துரைமார்கள் இடை நேரங்களில் ரப்பர் பால் நிறுத்தல், கள் விற்றல், மருந்து கொடுத்தல் போன்ற உப வேலைகளையும் கொடுத்து சிறிது உபரிச் சம்பளம் கொடுத்து வந்தனர். இதற்குச் சற்று ஆங்கில அறிவும் இருக்க வேண்டும். யானைக் காட்டில் வசிக்கும் முயல்கள் போலும், புலிக் காட்டில் வாழும் மான்கள் போலும் தமிழாசிரியர்கள் இதர சிப்பந்திகளின் கோள் குண்டுணிகளுக்கும், தோட்டத் தொழிலாளரின் புகார்களுக்கும் நடுவில், எப்போதும் மனக்கலவரத்துடன் இருந்ததோடு, தோட்ட முதலாளிக்குக் கோபம் வந்துவிட்டால் பெட்டியைக் கட்டிவிட வேண்டுமே என்ற பயத்தோடும் காலங்கழித்தனர் என்பது பொய்யல்ல.

மேற்கூறிய விஷயங்களைக் கேள்விப்பட்ட நான் ஊருக்குத் திரும்பிவிடவும் திட்டமிட்டேன். ஆனால் கப்பலேறி இந் நாட்டுக்கு வந்த நான்

வெறுங்கையாகவா ஊர் திரும்புவது என்று எண்ணி சில மனுக்களை எழுதிப் போட்டேன். 1934-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதலாம் தேதி ஒரு தோட்டத்தில் ஆசிரியத் தொழில் கிடைத்தது. அதுவும் மூன்று பக்கம் திறப்புள்ள ஓர் தகரக் கட்டடமேயானாலும், அக்காலக் கல்வி இலாகாவின் திட்டப்படி (பிளான்படி) கட்டப்பட்ட உயர்ந்த கட்டடம். முப்பத்தாறு பிள்ளைகளையுடையதும், மூன்றும் வகுப்பு மட்டும் நடத்தப்பட்டதுமான அப் பாடசாலையில் எனக்கு முன் பதிவு செய்யப்பட்ட ஒரு கங்காணி ஆசிரியரும் உதவி ஆசிரியராக வேலை செய்து வந்தார்.

நான் இந்தியாவில் போதனா முறை பயின்று பத்து வருஷ அனுபவமுடையவனாகவும், சொற்ப ஆங்கிலம் தெரிந்தவனாகவும் இருந்ததனால், என்னை வேலைக்கு வைத்துக் கொண்ட துரை எனக்கு இருபத்தைந்து வெள்ளி சம்பளம் தருவதாகச் சொன்னார். என் மனம் பூரித்தது. ஆனால் கணக்குப் பார்க்க முப்பத்தேழரை ரூபாய்தானாயிற்று. குடும்பஸ்

எஸ்டேட் பள்ளியில் படிக்கும் பெரிய மாணவிகள்.



எஸ்டேட் பள்ளியில் படிக்கும் குழந்தைகள்.

தனாகிய எனக்கு அச் சம்பளம் கைக்கும் வாய்க்கும் எட்டவில்லை. வருஷாந்திர சம்பள உயர்வோ, இதர சிப்பந்திகளுக்குக் கிடைக்கும் வருஷாந்திர நன்கொடையோ (போனஸ்) இல்லை. ஊதியத்தில் மனமுடைந்தாலும், என் வேலையில் திருப்தி கண்டேன். தமிழ்க் கல்விக்கு என்னால் இயன்ற மட்டும் ஆர்வத்தோடு தொண்டு செய்தேன். அடுத்த வருஷம் என் பள்ளியில் ஐம்பத்தாறு பிள்ளைகள் வாசித்தனர். நான்காம் வகுப்பும் ஆரம்பித்தோம். அதுதான் அக் காலத்தில் உயர்ந்த தமிழ் வகுப்பு. நான்காம் வகுப்பு தேர்ச்சியடைந்தால் உதவி ஆசிரியராக வேலை செய்யக் கல்வி இலாகா அனுமதியளித்தது. ஆகையால் என்னிடம் பயின்று தேர்ச்சி பெற்ற ஒரு மாணவரையே எனக்கு உதவி ஆசிரியராக எடுத்துக் கொண்டேன். பழைய கங்காணி உபாத்தியாயர் நீக்கப்பட்டார். அடுத்த வருஷம் எங்கள் பாடசாலை விஸ்தரிக்கப்பட்டதுடன், பாடசாலையைப் பார்வையிட வந்த வித்தியாதரிசி, வேலையில் திருப்தி கொண்டு எனக்கு "ஐந்து வெள்ளி சம்பளம் கூட்டவும்" என்று தமது குறிப்பில் எழுதிவிட்டுப் போனார். கருணை உள்ளம் படைத்த எனது முதலாளி ஐந்து வெள்ளி சம்பளம் கூட்டியதுடன் உபரி வேலையும் ஓய்வு நேரத்தில் கொடுத்து, மாதம் பத்து, பதினைந்து வெள்ளி உதவி வந்ததனால் அக் காலத்தில் நானும், எனது பெரிய குடும்பமும் ஒருவாறு நிம்மதியாகக் காலங்கடத்தினோம். நாளடைவில் ஐந்தாம், ஆறாம் வகுப்புகளும் நடத்தப்பட்டு அதில் தேர்ச்சி பெற்ற மாணவர்களே பெரும்பாலும் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டதனால், முற்கூறிய பழங்காலப் பகுதி நேர ஆசிரியர்கள் நீக்கப்பட்டு தனித் தமிழாசிரியர் சமூகம் உருவாயிற்று.

எல்லா சமூகங்களும் தங்கள் முற்போக்கு கருதி சங்கங்கள் ஸ்தாபித்தது கண்டு, தமிழாசிரியர்களும் வாளாவிராமல் ஒன்று கூடி 1936–37-ல் மாகாண வாரியாக ஆசிரியர் சங்கங்கள் ஸ்தாபித்ததுடன், மகாநாடுகளும் நடத்தி எங்கள் குறைகளை வெளியிட்டோம். சங்கங்கள் முன்னேறி, காரியங்கள் சற்றுக் கைகூடி வரும் போது மலாயாவில் யுத்த மேகம் சூழ ஆரம்பித்தது. மலாயாவில் தமிழாசிரியர் பற்றாக்குறையை அறிந்த அரசாங்கம், உயர்ந்த தமிழ் வகுப்புப் படித்துத் தேறிய மாணவர்களை ஆசிரியர்களாக்க எண்ணி, 1939 முதல் ஆசிரியர் போதனா முறைப் பாடசாலைகளை நிறுவி, ஆசிரியர்களை உற்பத்தி செய்தது. ஆண், பெண் ஆகிய இருபாலரும் அதில் கலந்து படித்து வெளி வந்த காரணத்தால், தமிழ்க் கல்வி முறை சற்று முற்போக்கு அடைந்தது. 1942-லிருந்து 45 வரையிலும் மலாயாவில் யுத்தமும் பஞ்சமும் தலைவிரித்து ஆடியதால் யாவராலும் கைவிடப்பட்டு மண்ணை வெட்டி வாழ்க்கை நடத்தினோம். ஜப்பான் மொழி (நிப்பன் கோ) படித்தோம். பயனில்லை.

1945-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் பத்தாம் தேதி மலாயாவில் சமாதான ஒலி முழங்கியது. திரும்பவும் பிரிட்டிஷார் நாடாள வருகின்றனர் என்ற செய்தி கேட்டு மகிழ்ந்தோம். அரசாங்க ஆணையின்படி அவரவர் பழைய தொழிலுக்குத் திரும்பினோம். எங்களுக்குக் கிடைத்த ஊதியத்தைப் பெற்று, விடா முயற்சியுடன் தமிழன்னைக்குச் சேவை

1936-ம் வருஷத்து மாணவ மாணவிகளின் தோற்றம்— சிப்பாங் அருகிலுள்ள சுங்கை பிளங்கான் எஸ்டேட் தமிழ்ப் பாடசாலையில்

செய்ய ஆரம்பித்தோம். சங்கங்களைப் பலப்படுத்தினோம். குறைகளை எடுத்துக் கூறினோம். ஓரளவு முற்போக்கைக் கண்டோம். சம்பளம், வேலை, வேலைநேரம், விடுமுறைக் காலம், ஆசிரியர் நியமனம், தள்ளுதல் முதலியவற்றில் நாளடைவில் அரசாங்கம் பொறுப்பெடுத்ததுடன், மாகாண வாரியாக ஆசிரியர் போதனமுறைப் பயிற்சிச் சாலைகளை நடத்தி இந் நாட்டிற்குத் தேவையான ஆசிரியர்களையும் தயார் செய்து வருகிறது; 1948-ம் வருஷம் திருத்தியமைக்கப்பட்ட சம்பளத்திட்டத்தின் மூலம் எங்களை ஒருபடி உயர்த்தியிருக்கிறது. ஆனால், அகவிலை உயர்வு காரணமாக எங்கள் நிலை இன்னும் திருப்தியற்றதாகவே இருக்கிறது. பொதுவாக நோக்குங்கால் இந்த நாட்டில் பணியாற்றும் இதர மொழி ஆசிரியர்களைவிட எங்கள் நிலை சற்றுத் தாழ்வானது என்பதை எங்களில் பெரும்பாலோர் வசிக்கும் வீடுகளைக் கொண்டும், பாடசாலைகளைக் கொண்டும் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

சுதந்திரப் பாதையில் நடைபோட ஆரம்பித்த மலாயா கூட்டணி அரசாங்கம் இந் நாட்டுக் கல்வி முறையை மாற்றியமைக்க முன்வரும்போதே நம் தமிழ் மொழிக்கும், ஆங்கிலம், மலாய், சீனம் முதலிய மொழிகளைப் போலச் சலுகை வழங்க முன் வந்திருப்பது நம் அதிர்ஷ்டமே. ஆயினும் இந் நாட்டில் தமிழர்கள் தமிழை வளர்க்கவில்லை என்பதை நினைத்து வருந்தாமல் இருக்க முடியவில்லை. இப்போதுள்ள தமிழர்கள் கண் விழித்து முன் வந்து, தமிழ் நடுத்தரப் பள்ளிகளையும் உயர்நிலைப்பள்ளிகளையும் நிர்மாணிக்கத் திட்டமிடுவதையும், பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர்கள் அனுமதிக்கப்பட வழி வகுத்ததையும் நினைக்கும்போது மனம் மகிழ்ச்சியடைகிறது.

எதிர்கால சுதந்திர மலாயாவில் அரசாங்கமும் தமிழ்க் கல்விக்குப் போதிய ஆதரவளித்து, தோட்டங்களில் ஆங்காங்கு சிதறிக் கிடக்கும் ஒற்றை ஆசிரியர் பாடசாலைகளைத் தொகுப்புப் பாடசாலைகளாக்கி, மாணவர் போக்குவரவுக்கான வசதிகளும், ஆசிரியர்களுக்கு வீட்டு வசதியும் செய்து கொடுக்க வேண்டும்.

பன்னெடுங்காலமும் கஷ்டப்பட்ட தமிழாசிரியர் சமூகம் சுதந்திர மலாயாவில் இதர மொழி ஆசிரியருடன் சமத்துவமாகப் பரிபாலிக்கப்பட்டு, சுமுகமாக வாழ்க்கை நடத்தித் தமிழன்னைக்கு அரும் தொண்டு செய்ய சுதந்திர மலாயா வழி வகுக்கும் என்பதே எமது நம்பிக்கை.

மலாயாத் தமிழ்ப் பத்திரிகை உலகின் தந்தை



மலாயாவில் முதல் முதலாகத் தமிழ்ப் பத்திரிகை நடத்தத் தொடங்கியவர் கி. நரசிம்ம ஐயங்கார். இவர் 3-7-1890-ல் திருச்சி ஜில்லா, நங்கைவரம் கிராமத்தில் பிறந்து, திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியிலும், எஸ். பி. ஜி. கல்லூரியிலும் கல்வி பயின்றார்; தமிழ்ப் புலவர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரிடம் தமிழிலக்கியமும் பயின்றார். 1915-ல் ரங்கூனுக்குச் சென்று, அக்கவுண்டண்ட் ஜெனரல் ஆபீஸில் பணியாற்றினார். உடல் நிலை காரணமாக 1920-ல் அவ்வேலையை விட்டு விட்டு, மறு வருஷம் மலாயாவுக்கு வந்தார். தம் சகோதரர் நிர்வாகியாக இருந்த இண்டஸ்ட்ரியல் பிரஸில் உதவி நிர்வாகியாக இருந்தார். "தமிழகம்" என்ற ஒரு பத்திரிகையையும் அப்போது நடத்தினார். இதுதான் மலாயாவில் ஸ்தாபிக்கப்பட்ட முதல் தமிழ்ப் பத்திரிகை. 1923-ல் அந்தப் பிரஸிலிருந்து விலகி, 1924-ல் ஆர்ட் பிரிண்டிங் ஒர்க்ஸ் என்ற அச்சகத்தை நிறுவி, 10-10-1924-ல் "தமிழ் நேச"னை ஆரம்பித்தார். முதலில் வாரப்பத்திரிகையாக இருந்த "நேசன்" 20-2-1937-லிருந்து தினசரிப் பத்திரிகையாக வளர்ந்தது. இத்துடன் ஓர் ஆங்கிலப் பத்திரிகையையும் இவர் நடத்தி வந்தார். பெடரல் சட்டசபையிலும், சிலாங்கூர் சமஸ்தான சபையிலும் இந்தியர்களுக்கு ஸ்தானம் வேண்டுமென்று பத்திரிகை வாயிலாக போராடியவர் இவரே. 1938-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 4-ந்தேதியன்று இவர் காலமானார். இவரால் நிறுவப்பட்ட "தமிழ்நேசன்" இன்று மலாயாவின் தமிழ்ப்பத்திரிகைகளில் முதல் பத்திரிகையாகவும், தமிழ்ப் பத்திரிகையுலகில் "சுதேசமித்திர"னைத் தவிர மற்ற எல்லாத் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளுக்கும் முன் தோன்றிய பத்திரிகையாகவும் திகழ்கிறது.

சிலாங்கூரின் நெற்களஞ்சியம்

-எஸ். பழனிவேல் பிள்ளை-

★

மலாய் நாடு மலை சூழ்ந்த நாடாக யிருப்பதால், வருடம் முழுவதும் நல்ல மழை பெய்கிறது. அதனால் சோலை நிறைந்த வளமான நாடாக மலாயா திகழ்கிறது. இவ்வளவு நீர்வளம், நிலவளம் நிறைந்த நாடாயிருந்தும், இந்நாட்டு மக்களில் மூன்றிலொரு பகுதியினருக்கு வேண்டிய உணவுப் பொருள்கூட உற்பத்தியாகவில்லை. முக்கிய உணவுப் பொருளாகிய அரிசிக்குப் பக்கத்து நாடுகளாகிய சயாமையும், பர்மாவையும் எதிர்நோக்கி வாழ வேண்டியிருக்கிறது.

ஏன் இந்த நிலை? நீர்வளமிருந்தும் நிலம் இல்லையா? ஏராளமான நிலங்கள் அடர்ந்த காடுகளாக, நெல் விவசாயத்திற்குப் பண்படுத்தப்படுவதற்கு ஏற்றவையாக இருக்கின்றன. பண விளை பொருள்களாகிய ரப்பர், ஈயம் போன்றவற்றின் உற்பத்தியில் முன்னைய சர்க்கார் அக்கறை காட்டியதால், நெல் விவசாயத்தில் லாபமில்லையென்று கருதி மக்கள் அதில் கவனம் செலுத்தவில்லை. மலாயா மக்கள் பணம் இருக்கின்றபொழுது உணவு பற்றிக் கவலை ஏன் என்ற எண்ணங்கொண்டவர்களாய் வாழ்ந்ததும் மற்றொரு காரணம்.

இந் நிலையில் அடங்கியுள்ள அபாயத்தை, ஜப்பானிய ஆதிக்க காலத்தில்தான் மக்கள் உணர்ந்தனர். அப்போது தங்கள் உணவுக்குத் தாங்களே உற்பத்தி பண்ணிக்கொள்ள வேண்டும் என்ற உணர்ச்சி பிறந்தது. அக்காலத்தில் ஜனங்கள் தாங்களாகவே வீட்டுக் கொல்லையிலும் காலி நிலம் உள்ள எல்லா இடங்களிலும் மரவள்ளிக்கிழங்கும், காய்கறிகளும் தங்கள் சொந்த முயற்சியில் பயிரிடத் தொடங்கி, அதன் பலனை அனுபவித்தார்கள்.

இப்பொழுது சிலாங்கூரின் நெற்களஞ்சியம் என்று வர்ணிக்கப்படும் தஞ்சோங் காராங் என்ற இடம் கோலாலம்பூரிலிருந்து 64 மைல் மேற்கே, கடற்கரையோரமாயுள்ள ஒரு சிறிய பட்டணம். தஞ்சோங் காராங்குக்கும், சபாபர்ணத்திற்குமிடையேயுள்ள பெரும் சமவெளிப் பிரதேசமே சிலாங்கூரின் நெற்களஞ்சியப் பிரதேசமென வர்ணிக்கப்படுகிறது.

இந்த இடமானது முன்னைய மலாயா சர்க்காரால் நெல் விவசாயத்திற்கெனப் பொறுக்கி எடுக்கப்பட்டது. நீர்ப்பாசன வாய்க்கால்களும் வடிகால்களும் அமைத்தும், விவசாயம் ஆரம்பிக்கப்படு முன்னர், இரண்டாவது மகா யுத்தம் ஆரம்பித்தபடியால் அதில் அபிவிருத்தி செய்யாமல் திட்டம் கைவிடப்பட்டது. யுத்த காலத்தில் உணவுப் பொருள் நெருக்கடியினால்

மக்கள் விவசாயம் செய்யத் தொடங்கினுலும், தஞ்சோங் காராங் 16, 18-வது மைல்களில் சீனர்கள் மரவள்ளி, சோளம், கேழ்வரகு, சர்க்கரைவள்ளிக்கிழங்கு போன்ற பயிர்கள் மூலம் நல்ல லாபத்தை அடைந்தார்கள். தஞ்சோங் காராங்கிலிருந்து 10 முதல் 14-வது மைல் வரையிலும் பாசன வசதி செய்யப்பட்டிருந்தும், 1944-ம் வருடம் வரையிலும் அதில் எந்த விவசாயமும் செய்யப்படாமல் இருந்தது. உணவுப் பொருள் நெருக்கடியின் காரணமாக ஏற்பட்ட நிர்ப்பந்தத்தால், 10-வது 14-வது மைல்களில் சுங்கை பூரோங் என்ற இடத்தில் ஒரு சில இந்தியர்கள் நெல் விவசாயம் பண்ண ஆரம்பித்தார்கள்.

1942-ம் வருட முதல் ஜப்பானியர்கள் சுங்கை பூரோங் 10-வது மைலில் நெல் விவசாயம் பண்ணுவதற்கு ஊக்கமூட்டினுலும் தொடர்ந்து செய்யாமல் விட்டுவிட்டார்கள். 10-வது மைலில் 2000 ஏக்கர் நிலத்தைக் கொடுத்து, நெல் விவசாயம் பண்ண வேண்டுமென்று ஜப்பானியர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அச் சமயம் நடந்து வந்த இந்திய சுதந்திர சங்கம் உணவுப் பொருள் உற்பத்தி இயக்கத்தைச் சிலாங்கூரில் 1944-ம் வருடம் ஏற்றுக்கொண்டது. அதற்கான அதிகாரியாக நான் நியமிக்கப்பட்டேன். மேற்காட்டிய 2000 ஏக்கர்களும் அடர்ந்த காடுகளாக இருந்தன. முதலாவது காடுவெட்டி நிலம் திருத்திப் பயிர் செய்ய வேண்டியிருந்தபடியால், உடனே நிவாரணம் அளிக்கக் கூடிய திட்டமில்லையென்றுலும், எதிர்காலத்திற்கு உதவியாக இருக்குமென்று கருதி இந்திய சுதந்திர சங்கம் பெரும் பணம் செலவு செய்தது. 1944-ம் வருடக் கடைசியில் வேலை செய்ய ஆரம்பிக்கப்பட்டது. ஆனுலும், அப்

தஞ்சங் காராங்கில் அறுவடை

போதே 900 ஏக்கர்கள் வரையிலும் காடு அழிக்கப்பட்டு, ஏறக்குறைய 150 லாட்டுகளில் நெல் பயிர் செய்யப்பட்டுமிருந்தது. ஒரு லாட்டு என்பது 3 ஏக்கர் விஸ்தீரணம். ஏறக்குறைய 120 இந்திய விவசாயிகள் 1945-ம் வருட ஆரம்பத்தில் குடியேறி விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர்.

விவசாயத்திற்கு இடையூறுகள் பல இருந்தன. அதில் மிக முக்கியமானது எலிகளின் தொந்தரவு. காய்கறிச் செடிகளைத் துண்டாகக் கடித்து எறிந்துவிடும்; சோளத் தட்டையில் ஏறிக் கதிர்களைத் தின்றுவிடும். நட்டிருக்கும் நெற்பயிர்களைத் தண்ணீரில் நீந்திச் சென்று நாசம் பண்ணிவிடும். இது போன்ற இடையூறுகளுக்கெல்லாம் நின்று பிடித்து, முதல் வருடத்தில் ஏறக்குறைய 350 ஏக்கர்களில் நெல் அறுவடைக்குத் தயாராயிருந்தது.

அதே சமயத்தில் 14-வது மைலில் இப்பொழுது பெரிய விவசாயியாக இருப்பவரும் ஒரு ஏக்கரில் 7200 பவுண்டு நெல் விளைவித்துப் புகழ் பெற்றவருமான ஸ்ரீ கே. வி. முனுசாமி, தம் சொந்தப்

நெல் மூட்டைகள் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன

தஞ்சங் காராங் வயல்களுக்குச் செல்லும் நண்ணீர்

பண்ணையில் விவசாயத்தை ஆரம்பித்து நடத்தி வந்தார். அவருக்கு விவசாயத்தில் உற்சாகம் கொடுத்தவர் 84 வயதுடைய சுவாமி ஆத்மராம் ஆவார். சுவாமி ஆத்மராம் 1935-ல் மலாயாவுக்கு வந்தார். மலாயாவில் தமிழர்களின் நலனுக்காக உழைத்தவர்களில் இவர் தலைசிறந்தவராவார். இப்பொழுது ஸ்ரீ மகாமாரியம்மன் கோவில் நிர்வாகத்தில் நடந்துவரும் அப்பர் தமிழ்ப் பள்ளிக்கூடம், 1936-ல் அன்னவரால் தோற்றுவிக்கப்பட்டது. அப்பர் சேவா சங்கம் அமைத்து அதன் மூலம் தமிழ்த் தொண்டும், சமயத்தொண்டும் செய்து வந்தார். தமிழர்களை விவசாயத்தில் ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் 1943-ல் தஞ்சோங் காராங் 14-வது மைலில் 4 லாட்டுகள் நிலத்தில் தாமே நெற்பயிர் செய்ய ஆரம்பித்ததுடன், ஸ்ரீ கே. வி. முனுசாமி போன்றவர்களையும் விவசாயத்தில் ஈடுபடுத்தி உற்சாகமூட்டினார்.

ஸ்ரீ கே. வி. முனுசாமி இப்பொழுது 14-வது மைலில் சிறந்த முறையில் விவசாயத்தை நடத்தி வருவதோடு, கால்நடைப் பண்ணையும் வைத்திருக்கிறார். இந்திய விவசாயிகளுக்குத் தலைவராகவும் சர்க்காருக்கு ஒத்துழைப்பாளராகவுமிருந்து பணியாற்றுகிறார். ஏறக்குறைய அங்கு 220 இந்தியக் குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றன. தமிழ்க் குழந்தைகள் படிப்பதற்குத் தமிழ்ப் பள்ளிக்கூடம் ஒன்றும் சர்க்

வயலில் வேலை செய்துவிட்டு வீடு திரும்பித் தேநீர் அருந்தும் மலாய்த் தம்பதிகள்

தஞ்சோங் காராங்கில் பகுதி வாரியாக நெல் பயிர் செய்யப்படும் ஏக்கர் விபரம்

—(✻)—

காவா சிம்பாங்	5991	ஏக்கர்கள்
சுங்கை பூரோங்	8932	,,
(இதில் 1080 ஏக்கர்கள் இந்தியர்களால் பயிர் செய்யப்படுபவை)		
சிக்கின் சாங்	4639	ஏக்கர்கள்
(இது சீனர்களால் பயிர் செய்யப்படும் பகுதி)		
சுங்கை லீமா	5268	ஏக்கர்கள்
பாசிர் பாஞ்சாங்	3991	,,
சுங்கை நீபா	4914	,,
பாஞ்சாங் மிடிஞ	15,224	,,
மொத்தம்	48,959	,,

(குறிப்பு: இந்தியர்கள், சீனர்கள் என்று குறிப்பிட்டிருப்பவை தவிர, பிற பகுதிகளிலெல்லாம் நெல் விளைவிப்பவர்கள் மலாய்க்காரர்கள்.)

கார் உதவியுடன் நடந்து வருகிறது. கூட்டுறவு முறையில் அரிசி மில் ஒன்றும் நடக்கிறது.

ஜப்பானியர்களின் காலத்தில் இந்தியர்களுக்காகச் சுங்கைபூரோங் 10-வது மைலில் கொடுக்கப்பட்ட 2000 ஏக்கரும் முன்னைய சர்க்காரினுல் மலாய்க்காரர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த இடமாகையால், யுத்தத்திற்குப் பின்னுல் நாடு பிரிட்டிஷ் ராணுவ நிர்வாகத்தின் கீழ் வந்தபொழுது, அங்குள்ள இந்தியர்கள் 14-வது மைலுக்குப் போகும்படிக்கும், மலாய்க்காரர்கள் அவர்கள் நிலத்தை ஒப்புக்கொள்ளும்படிக்கும் விடுத்த சர்க்கார் உத்தரவின்படி 14-வது மைலிலேயே எல்லா இந்திய விவசாயிகளும் குடியேறி, நெல் விவசாயத்தைத் திறம்பட நடத்தி வருகிறுர்கள். மலாய்க்காரர்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களை நல்ல முறையில் விவசாயம் செய்திருக்கிறுர்கள் என்பதை நான் சென்ற பிப்ரவரியில் அங்கு சென்றபொழுது கண்டேன். இப்பொழுது அந்த இடம் 'சிலாங்கூரின்நெற்களஞ்சியம்' என்று சொல்வதற்கு மிகப்பொருத்தமுடையதாகக் காட்சியளிக்கிறது. தஞ்சோங் காராங் திட்டம் பூர்த்தியடையுமானுல் ஏறக்குறைய 60,000 ஏக்கர்கள் நெல் விவசாய பூமியாகத் திகழும்.

இந் நாட்டை உணவுப் பொருளில் தன்னிறைவு நாடாகச் செய்ய வேண்டிய அவசியத்தை இரண்டாவது மகாயுத்தம் மக்களை உணரச் செய்திருக்கிறது. மலாயா உணவுப் பொருள் உற்பத்தியில், தன் நிறைவு நாடாக ஆவதற்குள்ளஎல்லாச் சௌகரியங்களும் உள்ளன. தஞ்சோங் காராங் போல் பேராவிலும், பிராவின்ஸ் வெல்லெஸ்லி மாகாணத்திலும், யுத்த காலத்தில் பினுங்கு டாக்டர் என். கே. மேனன், தெலுக்கான்சன் வழக்கறிஞர் பாதுரி ஆகியோர் தலைமையில் நெல் விவசாய செட்டில்மெண்டுகள் ஆரம்பித்து நடத்தப்பட்டன. அந்த இடங்களிலும், மற்ற மாகாணங்களிலும் மீண்டும் நெல் விவசாயம் ஆரம்பிக்கப்பட்டால், மலாயா அரிசிக்காகப் பிற நாட்டை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படாது.

மலாயாவில் சுதந்திய சூரியன் இன்று உதயமாகிருன். அவ்வொளியானது இந்நாட்டு மக்களின் உள்ளத்தில் பிரகாசித்து, சுதந்திரம் பரிபூரணமாகத் திகழ மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு சர்க்காருடன் ஒத்துழைப்போமாக.

மலாயில் வழங்கும் தமிழ்ப் பழமொழிகள்

தமிழ்ப் பழமொழிகள் பலவற்றை மலாய் மொழியில் காணலாம். சில பின் வருமாறு:—

மலாய்	தமிழ்
1. உட்கார்ந்திருக்கும்போது பூனை; பாய்ந்தால் புலி.	1. பார்த்தால் பூனை: பாய்ந்தால் புலி.
2. மலையைப் பார்த்து நாய் குரைத்ததால் மலை கஷ்டப்படுமா?	2. சந்திரனைப் பார்த்து நாய் குரைத்ததுபோல.
3. நாய் வாலை நிமிர்த்த முடியாது.	3. நாய் வாலை நிமிர்த்த முடியுமா?
4. ஒரு நாளுக்கு மூன்று தடவை குளித்தாலும் காக்கை வெள்ளையாகிவிடுமா?	4. காக்கை குளித்துக் கொக்காகுமா? (இந்தப் பழமொழி இப்போது மலையாளத்தில் வழங்குகிறது.)

உங்களுக்குத் தேவையான
தமிழ், ஆங்கில
புத்தகங்களுக்கு தகுந்த இடம்

ராம்தாஸ் பிரதர்ஸ்,
1-டி, மார்க்கெட் ஸ்திரீட்,
தெலுக்கான்சன்.

டெலிபோன்: 559 தபால் பெட்டி: 48

ஏஜண்ட்ஸ்:-

தமிழ் நேசன், தமிழ் முரசு, மலாயா நண்பன், Straits Times, Sunday Times, Berita Harian, Warta Negara, Times of Malaya மற்றும் சகலவிதமான தினசரி வார, மாத வெளியீடுகளும் கிடைக்கும்.

டெலிபோன்: 161. தபால் பெட்டி: 53.

ராம. ந. நடேச பிள்ளை,
29, ஆன்சன் ரோடு.
தெலுக்கான்சன்.

——:o:——

எங்களிடம் தமிழ், தெலுங்கு, ஆங்கிலப் பாடப்புத்தகங்களும், காலத்திற்கேற்ப புது விதமான பெங்களூர், மைசூர், காஞ்சிபுரம், பட்டு, நூல் சேலைகளும், சோளி, ரவிக்கை துணிகளும், மளிகை சாமான்களும் எங்களின் "R. M. N." மார்க் நல்லெண்ணை, ஓமத்திராவகமும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

RM. N. Natesa Pillai,
General Merchant, Textiles Dealer
No. 29, Anson Road,
TELUK ANSON.

Telephone: 161. P. O. Box 53.

Tel: 116 P. O. Box 5.

S. A. முஹம்மது
இஸ்ஹாக் அண் கம்பெனி,
ஜெனரல் மெர்ச்சண்ட்ஸ்,
ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம்.

130, மெயின் ரோடு, தைப்பிங்.

ஏஜண்ட்—: நெஸில்ஸ் புரொடக்ஸ்
(மலாயா) லிமிடெட்.

பிராஞ்ச்:— 173, மெயின் ரோடு,
தைப்பிங்.

இந்திய ரூபாய் நோட்டுகள்
விற்கப்படும்.

மலைநாட்டு மக்களுக்கு எங்கள்
சுதந்திர தின வாழ்த்துக்கள்!

உங்கள் திருப்தியே எங்கள் லட்சியம்!

நம்பிக்கையான இடம்
நியாயமான விலை
நாகரீக ஆடைகள்
கண்கவர் வனப்பு

எல்லாம் ஒருங்கே அமைந்த சிறந்த
ஜவுளிகள் மொத்தமாகவும்
சில்லரையாகவும் கிடைக்குமிடம்:

ஜெகன்னாதன்
வைத்திலிங்கம் அண் கோ.,
77, பெல்பீல்ட் ஸ்திரீட்.

Gram: JAGAN Co. தபால் பெட்டி 306
Phone: 3740 ஈப்போ.

மலாயாவில் வாழும்
இந்தியர் அனைவருக்கும்
எங்கள் மெர்தேகா வாழ்த்து

S. நடராஜன்
107, ரம்போ ஸ்திரீட்
கிள்ளான்

——o——

எங்கள் கடையில் கைதேர்ந்த வேலை யாட்களைக் கொண்டு நாகரீகத்திற்கேற்ற நகைகளை உங்கள் விருப்பப்படி உத்தர வாதத்துடன், குறிப்பிட்ட காலத்தில் செய்து தருவதே எங்கள் நோக்கம்.

CHOP KIPAS
FAST COLOUR
TRADE MARK
1200
SUN PULICAT CO.
MADE IN INDIA.

விசிறி மார்க் பளையகாட் கடை

போன்; 5880

எங்கள் விசிறி மார்க் பளையகாட் கைலிகள் எல்லா வகையிலும் உத்திரவாத முள்ளவை. ஒரு முறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்,

மற்றும் மைசூர் பனாஸ், பாம்பே சில்க், வாயல் சேலைகளும் சகாயமான விலைக்குக் கிடைக்கும். ஒரு முறை எங்கள் கடைக்கு விஜயம் செய்யுங்கள்,

சன் பளையகாட் கம்பெனி
67, பத்து ரோடு, கோலாலம்பூர்.

நற்சாட்சி

நான் ஆண்மையற்று வியாதியால் கஷ்டப்பட்டு அநேக வைத்தியர்களிடம் சென்று ஆயிரக்கணக்காகச் செலவு செய்து குணமாகவில்லை. அவ்வாறு இருந்த எனக்கு வைத்தியர் கவிராஜ் பாலி, ஆயுர்வேத & யுனானி மெடிக்கல் ஹால், 4-வது மைல் நம்பர் 12, ஈப்போ ரோடு, கோலாலம்பூர். ஆப்பரேஷன் இல்லாமலும், ஊசி போடாமலும் வீரியத்தை கொடுத்து என் வியாதியைக் குணப்படுத்தியுள்ளார்.

இப்படிக்கு,

F. P. K. ஜெனரல் மெர்செண்ட்
ரவாங்.

நேரம்:
காலை மணி 10 முதல் 12-30 வரை
மாலை மணி 5 முதல் 6-30 வரை
ஞாயிற்றுக்கிழமை விடுமுறை.

போன்: 69576.

வாடிக்கைக்காரர்களுக்கு
எமது மெர்தேகா வாழ்த்துக்கள்!

போன்: 799. *தந்தி:* 'ஜுவல்ஸ்'

அழகுக்கு அழகு செய்வது ஆபரணமே

கைதேர்ந்த வேலையாட்களைக் கொண்டு குறித்த நேரத்தில் கியாரண்டியுடன் நகைகள் செய்து தரப்படும்.

ரெங்கோன் கமலங்களும். பட்டரைக்குரிய அச்சு, அரம் வகையரு சாமான்களும், மிஷின், துருத்தி போன்ற பொருள்களும் எந்த நேரத்திலும் விலை சகாயமாய்க் கிடைக்கும்.

ச. லி. சு. சங்கரலிங்கம் ஆச்சாரி
61, ரெம்போ ஸ்திரீட்,
கிள்ளான்.

புது மலாயா

~சுவாமி சத்தியானந்தா~

"பழையன கழிதலும் புதியன புகுதலும்—வழுவல கால வகையினனே" என்ற நன்னூற் சூத்திரத்திற்குப் பரந்த பொருளுண்டு. ஞாலம் காலத்தேர். காலம் சுழன்று செல்லச் செல்ல, மாந்தர் புதுப் புதுக் காட்சிகளைக் காணுவதோடு எதிர்பாராத அனுபவங்களையும் பெறுகின்றனர்.

"நானே எல்லாவற்றையும் விழுங்கும் மஹா காலமாகிறேன்" என்பது கண்ணனின் ஆப்த வாக்கு.

50,961 சதுரமைல் பரப்பும் 70,00,000 குடிகளும் கொண்ட சின்னஞ் சிறு **மலாய் ஸ்தானம் (Stana Melayu)** சுயாட்சி பெறும் என்பதைப் பத்தாண்டுகளுக்கு முன்னர் நம்மில் பெரும்பாலோர் நினைத்திருக்கக் கூடுமா?

இரண்டாவது உலக மஹா யுத்தத்தின் முடிவிலிருந்து மனித சமுதாயத்தின் சரித்திரத்திலேயே ஒரு புது சகாப்தம் தொடங்கி யிருக்கிறது. எவ்விதம் ஒரு நோய்க்குப் பிறகு ஒருவருக்குப் புது இரத்தம் ஊறி உடல் நலம் உண்டாகின்றதோ, அவ்விதமே யுத்தத்தினுல் விளையும் இன்னல்களுக்குப் பிறகு சமுதாயத்திலே புத்துணர்ச்சிகள் உண்டாகின்றன. எனவே, முன்னர் அன்னியர் ஆட்சிக்கு அடி பணிந்து கிடந்த நாடுகளிலெல்லாம் கடந்த சுமார் பத்தாண்டுகளுள் சுய நிர்ணய உணர்ச்சியும், விடுதலை வேட்கையும் மேலிட்டுள்ளன. சுதந்திரமென்பது ஆத்ம சக்தியிலிருந்து பிறப்பது. சுதந்திரமில்லாவிடில் வாழ்க்கையும் வளர்ச்சியும் சீர்பெறு.

உலக மஹா யுத்தத்திற்குப் பிறகு இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பர்மா, இந்தோனேஷியா முதலிய கிழக்கு நாடுகள் சுதந்திரமடைந்துள்ளன. இந்நாடுகள் யாவும் மலாயாவைச் சூழ்ந்திருக்கின்றதனுல் மலாயாவிலும் சுதந்திர உணர்ச்சி கிளம்பியது இயல்பே. இவ்வுணர்ச்சியை சில இயக்கங்களும், தலைவர்களும் ஒல்லும் வகையான் வளர்த்திருக்கிருர்கள். அவர்களைப் போற்றுவோமாக.

இனி, ஆசியாவின் சரித்திர வரலாறு இந்தியாவின் சரித்திரத்தின் எதிரொலிகளென்று சொல்லலாம். உதாரணமாக இற்றையிலிருந்து சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்னர் இந்துப் பண்பாடு கிழக்கத்திய நாடுகளில் பரவிற்று. பௌத்த சகாப்தத்தில் பௌத்தப் பண்பாடு ஆசியாவெங்கும் மலிந்து பரவிற்று. பிறகு 6-வது 7-வது நூற்ருண்டுகளில் சைவமும், வைஷ்ணவமும் புத்துயிர் பெற்றகாலையில், அப்பண்பாடுகள் இந்நாடுகளில் பரவின. இந்து–பௌத்த செல்வாக்கு 12, 13, 14–வது நூற்ருண்டுகளில் குறைந்து படவே, இஸ்லாமியம் இந்தியாவில் பரவியதைத் தொடர்ந்து, கீழ் நாடுகளிலும் இஸ்லாமியப் பண்பாடு பரவிற்று. இன்றும் கிழக்காசிய மக்களின் மொழிகள், பழக்க வழக்கங்கள், கொள்கைகள் முதலியன யாவும் இந்திய மயமானவையே. அடுத்து, ஐரோப்பிய அரசியலும் பண்பாடும் இந்தியாவில் நுழைந்த பிறகு அவை கீழ் நாடுகளிலும் ஆதிக்கம் செலுத்தியுள்ளன. இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு கீழ் நாடுகளும் ஒவ்வொன்ருகச் சுதந்திரம் பெறலாயின.

இன்னுமொரு பெரிய சக்தி ஆசியாவில் தொன்று தொட்டு வேலை செய்து கொண்டிருக்கிறது. அதுதான் சீனவின் மகத்தான விறு விறுப்பும் உலகியலுமாகும். எங்ஙனம் ஆத்மீக மானசிகத் துறைகளில் பாரத சக்தி கிழக்காசிய நாடுகளைப் பான்மைப்படுத்தி யிருக்கின்றதோ, அங்ஙனமே உலகியல் துறையில் சீன சக்தி இந் நாடுகளைப் பான்மைப்படுத்தியுள்ளது.

இன்றைய மலாயாவில் நான்கு சக்திகள் உள்ளன. மலாய்க்காரருடைய எளிய அன்பு நிறைவு; இந்தியருடைய கலைவளம் பொருந்திய ஆத்மீகப் பண்பு; சீனருடைய திருவினையாக்கம்; பிரிட்டிஷாருடைய நவீன யந்திர சாதன நுண்மையும், நிர்வாக அமைப்பும். இந் நான்கு சக்திகளையும் மெர்டேக்கா மலாயா சமன் வயப்படுத்தி இயங்குமாயின் இச் சிறு நாடு மன்பதையின் பண்புக்கும் பயனுக்கும் எடுத்துக் காட்டாக விளங்கும்.

"ஹிடுப் மலாயு."

த. பரமகுரு

பவுன், வெள்ளி & வைர நகை வியாபாரம்
31-A, ரம்பா ஸ்திரீட், கிள்ளான்
ஸ்தாபிதம் 1929

T. PARAMAGURU

Jeweller, Goldsmith & Diamond Merchant
31A, Rembau Street, Klang

மறந்து விடாதீர்கள். எங்கள் கடை சில் **T. P. G.** ஒவ்வொரு நகையிலும் இருக்கும். கவனித்து வாங்குங்கள். போலியைக் கண்டு ஏமாறுதீர்கள்.

காலத்திற்கேற்ற முறையில் நாகரீக வேலைப்பாடுகளுடன் புது தினுசு நகைகள் உத்திரவாதத்துடன் குறிப்பிட்ட தேதியில் செய்து கொடுக்கப்படும்.

ஒரு முறை விஜயம் செய்தால்
உண்மை விளங்கும்.

ராணி மார்க் சுருட்டுத் தொழிற்சாலை

66, புக்கிட் கூடா ரோடு, கிள்ளான்
போன்: 873

விநியோகஸ்தலம்:
47-c, ரெம்போ ஸ்திரீட்,
கிள்ளான்

முதல்தரமான லெங்கோ புகையிலையால் சுகாதார முறைப்படி சுத்தமாய்த் தயார் செய்யப்பட்டு, நம்பிக்கையுடனும் உத்திரவாதத்துடனும் விற்பனை செய்யப்படுகிறது.

காரம், மணம், குணம் ஒருங்கே அமைந்தது

RANI BRAND CIGAR FACTORY

66, Bukit Kuda Road, Klang.

நண்பர்கள் அனைவருக்கும் எமது மெர்தேகா வாழ்த்துக்கள்.

A. A. அப்துல் வஹாப் அண் கம்பெனி,

165, ஹைஸ்திரீட், கோலாலம்பூர்.

போன்: 5022.

★

அச்சகங்களுக்கு வேண்டிய பேப்பர்கள், அட்டை, மை எல்லாம்
உயர்ந்த ரகத்தில் குறைந்த விலையில் சப்ளை செய்யப்படும்.

மற்றும் சகலவிதமான ஸ்டேஷனரி சாமான்களும் புத்தம் புதிதாய்க் கிடைக்கும்.

உங்கள் திருப்தியே எங்கள் லட்சியம்!

A. A. ABDUL WAHAB & CO.,

165, HIGH STREET, KUALA LUMPUR.
TELEPHONE: 5022.



மலாயாவின் பூர்வ குடிப் பெண்கள்

மலாயாச் செல்வத்தின் பிறப்பிடம்

ரப்பர் பாலைச் சேகரிக்கும் தமிழ்ப் பெண்மணி
நாட்டுக்குச் செல்வத்தையும் சேகரிக்கிறாள்



பாட்டாளிகள் கொண்டு வருவது ரப்பர் மட்டுமன்று
மலாயாவின் சுபீட்சமுமாகும்

எஸ்டேட் ஸ்டோருக்கு வந்துவிட்டன பால் வாளிகள்





பால் வெட்டும் பாட்டாளியின் குடும்பம்

கீழே — பாட்டாளிகள் வாழும் தோட்ட வீடுகள்



மலாயாவின் மற்றொரு செல்வமாகிய ஈயத்தை மண்ணிலிருந்து எடுக்கும் "கப்பல்"

மலாயாவில் பரத நாட்டியம் — சிங்கப்பூர் உமா சங்கர்



மலாய் ஜோகட் நடனம்

மலாயாவில் நடக்கும் சீன நாடகம்

மலாயாவில் மேல்நாட்டுக் கூத்து



பெடரல் ஹவுஸ் — கோலாலம்பூர்



கோலாலம்பூர் ரயில்வே ஸ்டேஷன் (வலது புறம்)

ஸ்தாப்பா வெந்நீர் ஊற்று



பத்துமலைக் குகை





கி. பி. 1670-ல் டச்சுக்காரர்களால் கட்டப்பட்ட
மலாக்கா கோட்டையின் வாசல்



பினுங்கு ஆயர் ஈத்தாம்
புத்தர் கோவில்

கோலாலம்பூர் பூமலையில் ஒரு காட்சி

பினங்கு கடற்கரையில் ரயில்வே ஸ்டேஷன்

மலாக்காவில் மணிக்கூண்டும், சர்க்கார் காரியாலயங்களும்



கலாசாரக் கலப்பு

~ஜெரால்டு ஹாக்கின்ஸ்~

மலாயாவின் பற்பல சமூகங்களுக்கிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும் ஏற்பட வேண்டிய அவசியத்தைப் பற்றி அடிக்கடி கூறப்படுவதைக் கேட்கிறோம். ஒத்துழைப்பு எவ்வளவுக்கு நெருக்கமாகிறதோ அவ்வளவுக்கு நல்லதுதான் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆனால், சில சமயங்களில், கலாசாரக் கலப்பே ஏற்பட வேண்டுமென்று வற்புறுத்துகிறவர்களும் இருக்கிறார்கள். அநேக தலைமுறைகளுக்குப் பின், சமூகங்களும், கலாசாரங்களும் கணிசமான அளவுக்கு ஒன்று கலப்பது சாத்தியமே. ஆனால், இப்படிப்பட்ட கலப்பு லாபகரமானதா, இந்தக் கலப்பைத் துரிதப்படுத்த முயற்சி செய்வதனால் உண்மையில் ஏதாவது நன்மை விளையுமா என்றால், அது சந்தேகமே. இவ் விஷயம் மிக மிக முக்கியமான விஷயமாக இருப்பதால், நாம் அனைவரும் இதைப் பற்றிக் கவனமாகச் சிந்திக்க வேண்டியது அவசியம்.

இந்தத் தீபகற்பத்தில் மலாய்க்காரர்களும், சீனர்களும், இந்தியர்களும், பாகிஸ்தானிகளும், ஐரோப்பியர்களும், மற்றும் சிலருமாக மொத்தம் 60 லக்ஷம் மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் இஸ்லாமிய, பௌத்த, ஹிந்து, கன்பூஷிய, மேற்கத்திய கலாசாரங்களைக் கொண்டவர்கள். இந்த இனங்களும், இந்தக் கலாசாரங்களும் உண்மையில் எப்படி ஒன்று கலக்க முடியும் என்பதைத் தெரிந்து கொள்வது சுலபமான விஷயமல்ல. அது இருக்கட்டும், கலப்பு என்பதுதான் என்ன? பல விஷயங்கள் ஒன்று கலந்து, பிரிக்க முடியாதவாறு கலப்பாகி, ஒவ்வொன்றும் தனது தனித்தன்மையை இழந்து, உருக்கி எடுக்கப்பட்ட வஸ்து போன்று உருவற்ற ஒரு பிண்டமாக ஆவது என்று பொருள்படுகிறதல்லவா? ஒவ்வொரு இனமும், ஒவ்வொரு கலாசாரமும் தன் தனித்தன்மையை இழந்து, விகாரமான ஒரு பிண்டத்தில் கலந்துவிட வேண்டுமென சிந்தனையுள்ள எந்த மனிதனும் விரும்புவான் என்று நான் நினைக்கவில்லை.

ஒன்றாகக் கலப்பதைவிட ஒற்றுமையாக ஒன்று சேருவதில் நன்மைகள் உண்டு. இப்படிப்பட்ட ஐக்கியத்தை மலாயர்களாகிய நாம் உண்டு பண்ண முடியுமா? அப்படி உண்டு பண்ணுவதற்கு அவசியமாகத் தேவைப்படுபவை யாவை? நாம் சரித்திரத்தைப் படித்துப் பார்ப்போம். பற்பல வேறுபட்ட கலாசாரங்கள் பரஸ்பரம் ஒன்றால் ஒன்று பாதிக்கப்பட்டு, அதன் பயனாக ஓர் உயர்தர நாகரிகம் எப்படி உதயமானது என்பதை எடுத்துக் காட்டும் பாடங்கள் சரித்திரத்தில் ஏராளமாக உண்டு. தொலை தூரத்தில், தனியே ஒதுங்கி, தன்னந்தனியாக, சுயதேவைப் பூர்த்தியுடன் வாழும் ஒரு நாட்டில் 'தூய' இனமும், 'தூய' கலாசாரமும் இருப்பது இயல்பு. ஆனால் 'தூய' கலாசாரம் என்பது, ஒரே குடும்பத்திற்குள் விவாக சம்பந்தம் ஏற்பட்டு விருத்தியான சந்ததி மாதிரி திருப்தியளிக்கக் கூடியதல்ல; அது பலஹீனமானதுமாகும். ஜாதிக் கலப்பில் பிறந்த சந்ததிதான் ஆரோக்கியமும், திடகாத்திரமும் கொண்டதாக இருக்கிறது. தாவரங்களிலும், விலங்கினங்களிலும் இனக் கலப்பினால் உயரிய ஜாதி தோன்றுவது கண்கூடு. அது போலத்தான் மனித ஜாதியும். பற்பல விதமான கலாசாரங்கள் பரஸ்பரம் ஒன்றையொன்று சந்தித்துப் பாதிப்பதால் நன்மைகள் ஏற்படும் என்பதற்கு அநேக சான்றுகள் உள்ளன.

இன்றைய உலகின் கலைக்கும், விஞ்ஞானத்துக்கும், தத்துவத்துக்கும் ஏறக்குறையத் தாயகமாக விளங்கிய பூர்வீக கிரேக்க நாடு, மத்திய தரைக் கடற் கரையில் வாழ்ந்த சுதேசிகளுடன் வட ஐரோப்பிய மக்கள் வந்து கலந்த காலத்தில் மலர்ச்சி பெற்றுத்

அப்துல் காதரும் தீபாவளியும்!

'அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் என்ன சம்பந்தம்?' என்று வேடிக்கையாகக் கூறுவதுண்டு. ஆனால். அப்துல் காதருக்கும் தீபாவளிக்கும் மலாயாவில் நெருங்கிய சம்பந்தம் உண்டு என்பது சரித்திரத்தில் இடம் பெற வேண்டிய ரசமான செய்தி. தீபாவளியன்று விடுமுறை விட வேண்டுமென்று சட்டசபையில் வாதாடி வெற்றி பெற்றவர் ஒரு அப்துல் காதர் தான் அவரால்தான் இன்றும் தீபாவளி விடுமுறையை அனுபவித்து வருகிறோம். அந்த எச். ஏ. அப்துல் காதர் பினாங்கில் வழக்கறிஞராகவும், ஜார்ஜ்டவுன் முனிசிபல் கமிஷனராகவும், செட்டில்மெண்ட் சட்டசபையில் இந்தியர்களின் பிரதிநிதியாகச் சர்க்காரால் நியமிக்கப்பட்ட அங்கத்தினராகவும் இருந்தவர். 1935-ல் பிரிட்டிஷ் மன்னரின் வெள்ளி விழாப் பதக்கமும், 1937-ல் முடிசூட்டு விழாப் பதக்கமும், 1938-ல் சி. பி. இ. பட்டமும் பெற்றவர். இந்தப் பட்டத்தை மலாயாவில் முதல் முதலாகப் பெற்ற இந்தியர் இவரே. இவர் 21-9-1890-ல் பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த சூரத் நகரில் பிறந்து 1912-ல் வழக்கறிஞரானவர் அதே வருஷத்தில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னருக்கு இவர் அறிமுகம் செய்து வைக்கவும் பட்டார். இந்தியர்களுக்காக இந்நாட்டில் பாடுபட்டவர்களில் அப்துல் காதரும் ஒருவர்.

திகழ்ந்தது. இங்கிலாந்தின் வம்சாவளி பிரிட்டானியர், ரோமானியர், ஆங்கிலர், ஸாக்ஸனியர், டேனர், நார்மானியர் ஆகியோருடன், 14-ம் நூற்றாண்டில் டச்சுக்காரரும், 17-ம் நூற்றாண்டில் பிரெஞ்சுப்பிராட்டஸ்டண்ட்டுகளும், 19-ம் நூற்றாண்டில் ஜெர்மானிய, ஆஸ்திரிய, இத்தாலிய அகதிகளும் சேர்ந்து கலந்ததில் உருவானதாகும். அமெரிக்காவில் ஐரோப்பியர்கள் குடியேறியதும், சுதேசிகளான அமெரிக்க இந்தியர்களின் கட்டுக்கிடை கலாசாரம் தேய்ந்துவிட்டது. ஐரோப்பியர்களிடையே கலப்பு ஏற்பட்டு, உலகத்திலேயே அதிக உற்பத்தி சக்தி பெற்ற நாகரிகம் தோன்றியிருக்கிறது. கனடாவில் பிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயரும், ஸ்காட் ஜாதியாரும் தங்கள் அரசியல் வேற்றுமைகளைத் தீர்த்துக் கொண்டபின் அதிவேகமாக முன்னேறியிருக்கின்றனர். ஸ்பெய்ன் தேசத்து அறிவுத் துறைக்கு மூர் ஜாதியார் பெரிதும் உதவியுள்ளனர்.

ஆனால், இந்தக் கலாசாரத் தொடர்புகள் எல்லாமே இரண்டு சாராருக்கும் மதிப்பு வாய்ந்தவையாக இருந்தது கிடையாது. தென் அமெரிக்காவில் ஆஜ்டெக் ஜாதியாரும், மாயா ஜாதியாரும் வெற்றியாளர்களுக்கு முன் அழிந்து பட்டார்கள். இலங்கையின் வெட்டர்களைப் போலவும், மலாயாவின் ஒராங் புக்கிட் ஜாதியாரைப் போலவும் ஆஸ்திரேலியப் பூர்வகுடிகள் ஒதுங்கிப் போய் தூரப் பிரதேசத்தில் தனியாக வசிக்கலானார்கள். இரண்டு கலாசாரங்களுக்குமிடையே இருந்த மிகப் பெரிய ஏற்றத் தாழ்வினால், இரண்டுக்குமிடையே பாலம் அமைக்க முடியாமல் போனதற்கு இவை உதாரணங்கள். சில இடங்களில், ஒத்துப்போகவோ, உறவாடவோ முயற்சியே செய்யப்படவில்லை.

கலாசார ஒற்றுமை பற்றிச் சரித்திரத்தில் காணப்படும் செய்திகள் இவை. கலாசார ஒற்றுமை சாத்தியமாக வேண்டுமென்றால், கலாசாரங்களுக்கிடையே உள்ள ஏற்றத் தாழ்வு மிகவும் அதிகமாக இருக்கக் கூடாது. இருந்தால், அவற்றின் தொடர்பில் ஏதாதது ஒரு மலட்டுப் பிறவி பிறந்துவிடக் கூடும்.

அத்துடன், கலாசாரங்களுக்கிடையில் பரஸ்பரம் ஓரளவுக்கு மரியாதையும், அனுதாபமும், சகிப்புத் தன்மையும், செயலளவில் நல்லெண்ணமும் இருந்து வர வேண்டும்.

அதிர்ஷ்ட பூமியான மலாயாவில், மேற்சொன்ன இரண்டு அம்சங்களிலும் சாதகமான நிலை இருந்து வருகிறது. அதாவது, பூர்வகுடிகளின் கலாசாரத்தைத் தவிர மற்றக் கலாசாரங்களில் எதுவும் பிறவற்றைவிடக் கீழ் நிலையில் இல்லை; அடுத்தபடியாக, மிகுந்த நல்லெண்ணமும் இருக்கிறது. இப்போதுள்ள நல்லெண்ணம் மேலெழுந்த வாரியாகவே இருப்பதாகவும், பொது வைபவங்களில்தான் அது பயன்படுத்தப்படுகிறது என்றும் சொல்லக் கூடிய சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், அவர்கள் கூறுவது தவறு. ஏனெனில், பற்பல சமூகங்களையும் சேர்ந்தவர்களுக்கிடையே உண்மையான நட்பும், மரியாதையும் இருந்து வருகின்றன; இதற்கு எண்ணற்ற சான்றுகள் உண்டு.

(103-ம் பக்கம் பார்க்க)

மலாயாவுக்கு இந்தியாவின் கலாசார உதவி

(எஸ். துரைராஜசிங்கம்
குவாந்தான்)

★

மலாயாவைத் தவிர வேறு எந்த நாட்டின் கலாசாரப் பின்னணியிலும் இத்தனை வகையான நாகரிகங்கள் ஒன்று கலந்திருக்கவில்லை என்று கூறிவிடலாம். மலாக்கா ஜலசந்தியை ஒட்டியிருக்கிறது இந் நாடு. மிகப் புராதன காலத்திலிருந்தே உலகத்தின் முக்கியமான வியாபார மார்க்கங்கள் சந்திக்கும் இடமாக விளங்கி வந்தது மலாக்கா. வர்த்தகம் செய்யவும், குடியேறவும் வந்த மக்களெல்லோரும் இத் தீபகற்பத்துக்குத் தத்தம் கலாசாரங்களைக் கொண்டு வந்தனர். அவற்றின் நிரந்தர அடையாளங்கள் இந் நாட்டில் பதிந்துள்ளன. ஆசிய பூமியின் முனையிலிருக்கும் இந் நாட்டில் சீனர், இந்தியர், ஜப்பானியர், அராபியர், பர்மியர், யூதர், ஸயாமியர், ஜாவனியர், மற்றும் பல இந்தோனேஷிய ஜாதியார் ஆகியவர்கள் வேறு எங்கும் காண முடியாத ஒரு ஆசிய நாகரிகக் கலப்பை உண்டு பண்ணியிருக்கிறார்கள். இக் கலப்பின் பின்னணியில் தூரதேசங்களின் வாழ்க்கை, கலாசாரம் ஆகியவற்றின் பிதுரார்ஜிதம் உள்ளது. அது ஓவியம், இசை, இலக்கியம், சிந்தனை, மதம், சமூக அமைப்பு முறைகள், அரசாங்கம், வாழ்க்கையமைப்பு ஆகியவற்றிலெல்லாம் மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது.

மலாயாவின் நாகரிகக் கலப்பில் மிக முக்கியமான ஒரு அம்சம் என்னவென்றால், இந் நாட்டின் வரலாற்றை உருவாக்கியதில் புராதன காலத்திலிருந்தே பெரும் பங்கெடுத்துக் கொண்ட ஒரு நாடு இந்தியா தான். அமரத்துவம் அடைந்த டாக்டர் ஆனந்தா கே. குமாரசாமி கூறியது போல, "ஆசியாவில் சகல மார்க்கங்களும் இந்தியாவை நோக்கியே செல்லுகின்றன." மலாயாத் தீவுக் கூட்டத்துக்கு இஸ்லாம் வருவதற்கு முன் 1000 வருஷ காலமாக மலாய் தீபகற்பத்தில் ஹிந்து–பௌத்த நாகரிகம் பரவியிருந்தது. இஸ்லாம் வந்தும்கூட மலாய் வாழ்க்கையின் உள் இயல்பை, இந்தியத் தன்மையை, மாற்றிவிடவில்லை. இந்தியப் பிதுரார்ஜிதத்தை அராபியச் செல்வாக்கு மெல்லிய துகில் மாதிரி மூடிக் கொண்டிருக்கிறது. அவ்வளவுதான்.

இந்து மகா சமுத்திரத்தின் ஒவ்வொரு கரையிலுமே இந்தியக் கலாசாரம் பரவத் தொடங்கி, அங்கெல்லாம் நிரந்தரமான அடையாளங்களைப் பதித்திருக்கிறது. அப்படிப் பரவியதன் காரணமாக முதல் முதலில் மாறுதல் நிகழ்ந்தது மலாய்த் தீபகற்பத்திலும், தீவுக் கூட்டங்களிலும்தான் என்று கருதலாம். இங்கு கலாசாரச் செல்வாக்குப் பரவியதுடன் மட்டுமின்றி, இனத்தோடு இனம் இணைந்து ரத்தக் கலப்பே ஏற்பட்டது. சரித்திர காலத்துக்கு முன்பு ஏற்பட்ட இன உறவைக் காட்டும் அடையாளங்களை இந்தியாவிலும், மலாயாவிலும், தென்கிழக்கு ஆசியத் தீவுகளிலும் (இந்தோனேஷியா, மலேஷியா என்றெல்லாம் கூறப்படும் இடங்களில்) காணலாம்.

தென் இந்தியத் தமிழர்கள் கிறிஸ்தவ சகாப்தத்தின் தொடக்கத்திலும், அதற்கு முன்பும் தலை சிறந்த மாலுமிகளாக விளங்கியவர்கள். வியாபார நிமித்தமாக இந்த மாலுமிகள் தங்கள் தாயகத்திலிருந்து கடல் தாண்டி வந்தார்கள். நாளாரம்பத்தில், மலாய்த்தீபகற்பம் அவர்களுக்குப் பாலமாகிவிட்டது. இந்தியாவிலிருந்து ஆசியத் தீவுக் கூட்டங்களுக்கு இப் பாலத்தின் வழியாகவே சென்றார்கள்.

இவ்வாறு முதல் முதலாகக் குடியேறத் தொடங்கியது கி. மு. 1000-ல் என்று சில ஆராய்ச்சி நிபுணர்கள் வரையறுத்துக் கூறுகிறார்கள். இவர்கள் புதியதொரு நாகரிகத்தை, புதியதொரு வாழ்க்கை முறையை இந் நாடுகளுக்குக் கொண்டு வந்தார்கள். அவை இங்கு நிலவிய நாகரிகத்தை

★ சுதந்திரம் பெறும்

★ மலாயா மக்களுக்கு

★ எமது வாழ்த்துக்கள்

இயான் சிங்

கோலாலம்பூர்

அபிமானிகளுக்கு மெர்தேகா வாழ்த்துக்கள்!

பாக்ஷா
&
முத்தையா

புக் ஸ்டால்

பால்டுவின் ரோடு,

தாப்பா (பேரா)



தமிழ் நேசன், தமிழ் முரசு, இங்கிலீஷ் சீன தினப் பத்திரிகைகளும், இந்தியன் மூவி நியூஸ், பேசும் படம், முதலிய மாதப் பத்திரிகைகளும், கல்கி, ஆனந்த விகடன், முதலிய வாரப்பத்திரிகைகளும், கதை வசனப் புத்தகங்கள், துப்பறியும் நாவல்கள், தலைவர்கள் அறிஞர்கள் எழுதிய தலைசிறந்த நூல்களும், இங்கிலீஷ் காமிக் கதை புத்தகங்களும் ஸ்டேஷனரி சாமான்களும். கிடைக்கும்,

நேரிலும் கடித மூலமும் பெறலாம்.

BATCHA & MUTHIAH **Book Stall**, P. O. Box No. 9. **Tapah** (Perak)

யும், வாழ்க்கை முறையையும் விட மிக மிகச் சிறந்த அமைப்பும், பண்பும் உடையனவாக இருந்தன. ஓவியம், இலக்கியம், மணிச்சிற்பம், சிற்பம், நடனம் முதலியன இந்தியக் குடியேற்றக்காரர்களால் கொண்டு வரப்பட்டவையே. மலாயாவில் வடக்கே லங்கா சுகமும், மேற்கே கங்கா நகரமும், கிழக்கே இந்திரபுரமும், சுமாத்ராவில் ஸ்ரீவிஜயமும், ஜாவாவில் தர்மநகரமும், இந்தோ-சீனாவில் பூனன், சென்-லா, சம்பா ஆகியவையும் புராதன காலத்தில் இந்தியர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ராஜ்யங்களே. 8-ம் நூற்றாண்டுவாக்கில், மலேஷியா முழுவதிலும் கடலிலும் தரையிலும் ஸ்ரீவிஜய சாம்ராஜ்யம் ஆதிக்கம் பெற்று விளங்கியது. அதன் ஆதிக்கம் உச்ச நிலையடைந்திருந்தபோது, மலாயா, இலங்கை, சுமாத்ரா ஆகிய நாடுகளும், ஜாவா, போர்னியோ, செலிபிஸ் ஆகியவற்றின் பகுதிகளும் அந்த சாம்ராஜ்யத்தில் அடங்கியிருந்தன.

கி. பி. முதல் நூற்றாண்டில், சோழமண்டலக் கரையிலிருந்து இந்திய வர்த்தகர்கள் மலாய்த் தீபகற்பத்துக்கு வரத் தொடங்கினார்கள். அவர்களில் பலர் தொழில் திறமை மிக்கவர்கள். மணிச் சிற்பிகளாகவும், நெசவாளர்களாகவும், உலோக வேலைக்காரர்களாகவும், மற்றும் பல தொழில் வல்லுநர்களாகவும் வந்து இங்கேயே தங்கினார்கள். அவர்கள் இந்தியப் பழக்க வழக்கங்களை அறிமுகப்படுத்தினார்கள். மலாயாவில் இருந்து வந்த பழங்கால முறைகளான தந்தை வழி, தாய் வழி ஆட்சி உரிமை முறைகள் மாறி, ராஜாக்கள் இருந்து ஆட்சி செய்யும் முறை ஏற்படுவதற்கும் அவர்கள் வழி செய்தார்கள். தென் இந்திய ஹீனயான பௌத்த மதத்தையும், வட இந்திய மஹாயான பௌத்த மதத்தையும் ஒருங்கே பரப்பினார்கள். இங்கு கிறிஸ்தவ சகாப்தத்தின் ஆரம்பத்திலிருந்து, 15-ம் நூற்றாண்டு வரை இந்தியப் பொருளாதார, கலாசார ஆதிக்கமே நிலவியது. 15-ம் நூற்றாண்டில் வந்த இஸ்லாம், அவ்வாதிக்கத்தை முதலில் பலஹீனப்படுத்தி, பின்பு அழித்துவிட்டது. மலாயாவில் இந்தியச் செல்வாக்கு குறைந்து கொண்டு வந்த சமயத்திலும், மலாக்காவில் இந்தியர்கள் பெரும் அளவில் வியாபாரம் செய்து கொண்டு செல்வமும், செல்வாக்கும் படைத்தவர்களாகவே விளங்கினார்கள். மேற்கே இருந்து புதிய சக்திகள்—மத்தியக் கிழக்கிலிருந்து இஸ்லாமும், மேற்கத்திய நாடுகளிலிருந்து வர்த்தக உறவும்—வந்து சேர்ந்த பின், சரித்திரத்தின் போக்கையே அவை மாற்றி விட்டன.

"விரிவான அர்த்தத்தில், மலாய்க்காரர்கள் நம்முடைய தூர பந்துக்களாக இருக்கிறார்கள்" என்று ஜவாஹர்லால் நேரு கூறியது சரியான வாசகமாகும். ஏனென்றால், இஸ்லாம் மதத்தைத் தழுவிய பின்னரும், தொட்டிலிலிருந்து சுடுகாடு வரை மலாய்க்காரர்களின் வாழ்க்கையில் ஹிந்துக் கலாசாரம், ஹிந்து இலக்கியம், ஹிந்து நடனம், ஹிந்து சங்கீதம், ஹிந்து நாடோடி மரபுகள் முதலியவையே சூழ்ந்திருக்கின்றன. மலாயா முழுவதிலும், மலாயாத் தீவுக் கூட்டத்திலும் நாடோடி இலக்கியத்தில் காணும் தேவதைக் கூட்டங்கள் ஹிந்து தேவதைகளின் இயல்பையே கொண்டிருக்கின்றன. இவற்றுள் பெரிய தேவதைகள் ஹிந்துவாகவும், சிறு தெய்வங்கள் மலாய்த் தெய்வங்களாகவும் இருக்கின்றன. இன்னும் மலாயாவின் கிராமப்புறங்களில் நடக்கும் பாவைக் கூத்தில் இடம் பெறுபவை இந்தியப் புராணக் கதைகளே. "செரிதா ஸ்ரீ ராமா" எனப்படும் ராமன் கதை, மகா பாரதக் கதையான "பாண்டவ லீமா" (பஞ்ச பாண்டவர்) ஆகிய இரண்டும் பாவைக் கூத்தின் பிரதானக் கதைகளாகும். இக் கதைகள் மலாய்க்காரர்களின் வாழ்க்கை, கற்பனை, கலைகள், தொழில்கள் முதலியவற்றிலெல்லாம் பிரதிபலிக்கின்றன.

மலாய் மொழியில் இந்திய மொழி வார்த்தைகள் பல கலந்திருப்பது வெளிப்படையாகத் தெரிந்த விஷயம். தமிழ், ஹிந்துஸ்தானி, சமஸ்கிருதம் ஆகியவற்றின் வார்த்தைகளோடு, அரபு வார்த்தைகளையும் மலாய் மொழியில் காணலாம்.

ராஸ் (கடிவாளம்), ரொட்டி, டான் (லாயம்), ஜோரி (சிறு வண்டி) முதலியன ஹிந்துஸ்தானி வார்த்தைகள். கப்பல், மாளிகை, கட்டில், கடை, திரை, கோலம் (குளம்), மெம்பிலை (மாப்பிள்ளை), தண்டல், கூலி, கறி, மாலை, மெம்பலம் (மாம்பழம்) முதலியன மலாய் மொழியில் வழங்கும் தமிழ் வார்த்தைகள்.

(100-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, கலாசாரங்கள் இரண்டறக் கலந்துவிட வேண்டிய அவசியமில்லை. ஆனால், சமாதானமாக ஒத்து வாழ முடியும் என்பதை உலகத்துக்கு மலாயா எடுத்துக் காட்டும் என்று நம்பிக்கை கொள்ள இடமிருக்கிறது. தொடர்ந்து நல்லெண்ணம் நீடிக்க வேண்டும்; மலாயர்கள் தங்கள் முதல் விஸ்வாசத்தை மலாயா நாட்டுக்குச் செலுத்த வேண்டும். அப்படிச் செய்தால் நாம் இதற்கு முன் என்றும் காணாத வளமான நாகரிகத்தை மலாயா அடைய முடியும்.

*

சுதந்திர மலாயா மக்களுக்கு

எமது "மெர்தேகா" வாழ்த்துக்கள் !

இந்திய
கைத்தறி ஜவுளிகள்

கைதேர்ந்த கைத்தறி நிபுணர்களால் தயார்செய்யப்பட்டவை

காஷ்மீர் சில்க், பிரிண்டெட் சாரிகள், பெனரிஸ் சில்க் சாரிகள், கோயமுத்தூர், மதுரை, சூப்பர் பைன் சாரிகள், இன்னும் எத்தனையோ ரகங்கள் இன்றைய நாகரிகத்திற்கு ஏற்றவாறு வந்துள்ளன. மற்றும் படுக்கை விரிப்பு, ஜமுக்காளம், தலையணை உறை, அச்சிட்ட துண்டுகள், புலிக்காட் கைலிகள், டவல்கள், 4 முழம் வேஷ்டிகள், துண்டுகள், சட்டை துணிகள்; ரவிக்கைத் துணிகளில் ஏராளமான தினுசுகள் உள்ளன. உங்களுக்குத் தேவையானதைத் தேர்ந்தெடுக்க இன்றே வாருங்கள்.

கைத்தறி நெசவாளர் சங்கத்தாரால் இவை தயாரிக்கப் பட்டவை. நீடித்த உழைப்புள்ள உயர்தரத் துணிகளே இங்கு தயாரிக்கப்படுகின்றன.

கெட்டிச்சாயத்திற்கு உத்தரவாதம்

நியாயமான — நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு
கைத்தறித் துணிகள் கிடைக்கும்.

கைத்தறி ஜவுளி நிலையம்

(இந்திய சர்க்கார்)

67, அம்பாங் ரோடு,
கோலாலம்பூர்
போன்: 88821

23, ரேஸ் கோர்ஸ் லேன்,
சிங்கப்பூர்-8
போன்: 33861

சமயம், வான சாஸ்திரம், விவசாயம், சட்டம், ராணுவம், நீதிமன்றம், உலோகங்கள், உறுப்புக்கள், உறவு முறைகள் முதலியவை சம்பந்தமாக ஏராளமான சமஸ்கிருத மொழிகள் மலாய் மொழியில் எடுத்தாளப்படுகின்றன. ரூபா (உருவம்), பாதா (பாதம்), இஸ்திரி (ஸ்திரீ), பங்ஸா (வம்சா), குலவர்க்கா, ஆங்ஸா (ஹம்சா), சிங்கா, கஜா முதலியவை சில உதாரணங்களாகும்.

ஹிந்து புராணங்களில் வரும் பல பறவைகளும், பல ஊர்வனவும் மலாய் நாடோடி இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. ஓர் உதாரணமாகக் கருடனைச் சொல்லலாம். திடீரென்று சூரியனை மேகங்கள் மூடிவிட்டால், பேராவில் வசிக்கும் மலாய்க்காரர், "கெர்டா தன் சிறகுகளை, உலர்த்துவதற்காக விரிக்கிறது" என்று கூறுவார். மத சம்பந்தமான பல மலாய் வார்த்தைகளும் சமஸ்கிருத வார்த்தைகளே. உதாரணம்: குரு, தபா (தவம்), சுவர்க்கா, நரகா, பூஜா, பக்தி, மந்த்ரா, பிக்கு (பிக்ஷு), பிஸ்னு (விஷ்ணு), சாஸ்தரா (சாஸ்திரம்) முதலியன.

பெயர்களிலும் பட்டங்களிலும் சமஸ்கிருதப் பதங்கள் வழங்கி வருவதையும் காணலாம். மலாய்த் தலைவர்களின் பட்டங்களுக்கு முன் "ஸ்ரீ" சேர்க்கப்படுகிறது. பேரா சமஸ்தான ராஜகுடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ராஜா சூலன் என்று பெயர். ஜாவா ராஜ்யமாகிய மஜாபஹித், மலாயா சமஸ்தானங்கள் பலவற்றின் மீது படையெடுத்து வென்ற காலத்தில், மலாக்காவை ஆண்ட ஹிந்து மன்னன் "ஸ்ரீ பரமேஸ்வரா" என்னும் பட்டத்தை உடையவன்.

மலாக்காவும் தமிழும்

150 வருஷங்களுக்குமுன் மலாக்காவில் தமிழ்தான் சகல சமூகத்தாருக்குமிடையே வர்த்தக மொழியாக உபயோகிக்கப்பட்டு வந்தது. இம் மாதிரி எவ்வளவு காலம் தமிழ் பொது மொழியாக இருந்து வந்தது என்று இப்போது திட்டவட்டமாகத் தெரியவில்லை. எனினும் கி. பி. 1800-க்குப் பல வருஷங்கள் முன்னும் சில வருஷங்கள் பின்னும் தமிழ் இந்த உயர்ந்த ஸ்தானத்தை வகித்து வந்திருக்க வேண்டும் என்று கருத ஆதாரமிருக்கிறது. மலாயாவின் ஷேக்ஸ்பியர் என்று மலாய்க்காரர்களால் போற்றப்படும் முன்ஷி அப்துல்லா தமது 6-வது வயதிலிருந்து 2 1/2 வருஷங்கள் வரை விரலால் மணலில் எழுதி தமிழ் படித்தார். அவரது காலம் கி. பி. 1796—1854. அவரை பற்றிய விபரத்தை இதே மலரில் வேறோரிடத்தில் காண்க.

முன்ஷி அப்துல்லா தம் சுய சரித்திரத்தில் பின் வருமாறு கூறியிருக்கிறார்:—

"தமிழ் என்ற ஒரு இந்திய மொழியைப் படிக்க என் தந்தையார் என்னை ஓர் ஆசிரியரிடம் அனுப்பினார். மலாக்காவில் எங்கள் மூதாதையர் காலத்திலிருந்து நல்ல, செயலான குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் தமிழ் படிப்பது வழக்கமாக இருந்து வருகிறது. கூட்டல், கழித்தல் முதலியன போடவும், கணக்குகள் எழுதவும், சம்பாதிக்கவும் அம்மொழி பயனுள்ளதாக இருந்தது. ஏனென்றால் அந்தக் காலத்தில் மலாக்காவில் இந்திய வர்த்தகர்கள் ஏராளமான பேர் இருந்தனர். மலாக்காவில் வியாபாரம் செய்து செல்வந்தர்களானவர்கள் பலர். அதனால், தமிழ் வர்த்தகர்களின் பெயர்கள் பிரபலமாக இருந்தன. அவர்கள் அனைவரும் தம் குழந்தைகளைத் தமிழ் படிக்க வைத்தார்கள்."

தமிழ் கற்பித்த ஆசிரியருக்கு அப்துல்லாவின் தந்தை பணமும், வஸ்திரங்களும் கொடுத்ததாகவும் சுய சரிதையில் காணப்படுகிறது.

மலாக்காவில் நதியும் வீடுகளும்



மலாய் இலக்கியத்திலும் பழங்கதைகளிலும் இந்திய அம்சமே மேலோங்கியிருக்கிறது. பாண்டவர்கள், ராமன், சீதை, ஹனுமான் ஆகியோருடைய கதைகள் மலாய்க் குழந்தைகளுக்கும் தெரியும். மாட் ஜனின், சி லுஞ்சாய், பா பெலலாங், மூஸாங் பெர்ஜங்குட் ஆகிய நாடோடிக் கதைகளைக் கவனித்துப் படித்தால், அவற்

திற்கும், ஹிதோபதேச, பஞ்ச தந்திரக் கதைகளுக்கும் உள்ள ஒற்றுமைகளைக் காணலாம்.

மலாய்க்காரர்கள் இன்னும் நடராஜ வடிவில் சிவனுக்கு மரியாதை செய்து வருவது சுவாரஸ்யமான விஷயமாகும். ஆனால், இன்று அவர்களுக்கு அக் கடவுளின் பெயரும், தன்மையும் அவ்வளவாகத் தெரியாது.

பழைய மலாய் இலக்கியத்தில் சிவனைப் பற்றிய பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. அதில் சிவன் பெரிய குருவாக (பெதாரா குரு) கருதப்படுகிறான். காளிதேவதை இப்போது காட்டுப் பேயாகக் கருதப்படுகிறது. அறுவடைத் திருநாட்களில் "ஸ்ரீ" உச்சாடனம் செய்யப்படுகிறது. மலாய்க் கதைகளின் பிரகாரம், பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற மும்மூர்த்திகளும், காலனும், ஸ்ரீயும் சேர்ந்து காலத்தின் ஐந்து பகுதிகளுக்குத் தலைமை தாங்குவதாகக் கருதப்படுகிறது.

இவ்வாறு மலாய்க்காரர்களின் வாழ்வில் பல துறைகளிலும் இந்தியக் கலாசாரம் படிந்திருக்கிறது. இந் நாட்டில் பூமிக்கு அடியிலிருந்து அகப்பட்ட சிலைகளும், கல்வெட்டுக்களும் பழங்காலத்தில் இந்தியக் கலாசாரம் பரவியிருந்ததை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

கிட்டாவில் ஸ்ரீமதி குவாரிட்ச் வேல்ஸ் தோண்டி எடுத்த 8 1/2 அங்குல வெண்கலப் புத்தர் சிலைதான் மலாயாவில் கிடைத்த மிகப் பழைய புத்தர் சிலையாகும். அந்த அம்மையார் பிராவின்ஸ் வெல்லெஸ்லியில் மூடா நதியின் பழைய படுகையில் எடுத்த 5-ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்தூபியின் சிதைவும் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கது. அதே இடத்தில்தான் ஒரு நூற்றாண்டுக்கு முன் புத்தகுப்த மஹாநவிகா சாஸனம் கண்டெடுக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. 5-ம் நூற்றாண்டைச் சேர்ந்த அந்தச் சாஸனம் இப்போது கல்கத்தா மியூஸியத்தில் இருக்கிறது.

ஈப்போவுக்கு அருகில் 1931-ல் கிடைத்த வெண்கலச் சிலை ஒன்றை, "மத்திய காலக் கீழை நாட்டுக் கலையின் ரத்தினமாகும்" என்று டச்சு புதைபொருள் ஆராய்ச்சியாளரான டாக்டர் வான் ஸ்டீன் காலன்பெல்ஸ் கூறினார். வடக்கு மலாயாவில் ஸ்ரீவிஜயாவின் சைலேந்திர மன்னன் ஒருவன் தன் செல்வாக்கைப் பரப்பியிருந்த காலத்தை (சுமார் கி. பி. 740)ச் சேர்ந்த சிலை என்று அதை டாக்டர் காலன்பெல்ஸ் கருதினார். இரண்டாவது உலக யுத்தத்தின் போது, மலாயாவில் போராட்டம் நடந்து வருகையில் அந்தப் புத்தர் சிலையைக் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர். அப்புறம் அச் சிலையின் கீழ்ப்பாதிதான் அகப்பட்டது.

ஈப்போவுக்கு அருகே பெங்காலனில் வெண்கலத்தால் செய்யப்பட்ட தாமரை ஆசனம் ஒன்று அகப்பட்டது. அதன் மீது, பாதிச் சாய்வாகப் படுத்துக் கொண்டிருக்கும் சிலை யொன்று இருந்திருக்க வேண்டும்.

பீடோரில் ஈயச் சுரங்கம் ஒன்றில், ஈயக் கப்பலால் வெளியே கொண்டு வரப்பட்ட சிலை ஒன்று 31 அங்குல உயரம் உடையது. அதற்கு 8 கைகள். பரிசோதித்துப் பார்க்கும்போது, அது அநேகமாக சுத்தமான செம்பில் செய்யப்பட்ட சிலை என்று தெரிய வந்தது. அதை மஹாயான மார்க்கத்தைச் சேர்ந்த அவலோகிதேஸ்வரர் சிலை என்று ஸ்ரீமதி குவாரிட்ச் வேல்ஸ் கருதுகிறார். தோற்றத்தைக் கொண்டு பார்க்கும்போது, அது சந்தேகத்துக்கிடமின்றி தென் இந்தியச் சிற்ப வகையைச் சேர்ந்ததாகவே இருக்கிறது. தைப்பிங்கிலுள்ள பேரா மியூஸியத்திலிருந்து அச் சிலை கொள்ளையடிக்கப்பட்டு விட்டது. ஆனால், சுரங்கக் குழி ஒன்றில் அது முழுசாகத் திரும்பவும் கிடைத்துவிட்டது. ஜப்பானியர் ஆட்சிக் காலத்துக்குப் பின் அதை நான் கடைசியாகத் தைப்பிங்கில் பார்த்தேன். இந்த புத்த சிற்பங்கள், பழங்காலத்திய இந்தியர் குடியேற்றத்தைத் தெரிவிக்கின்றன.

"மலாய்த் தீபகற்பத்தை முதல் முதலில் சரித்திர முக்கியத்துவம் கொண்டவாறு நாகரிகப்படுத்தியது இந்தியாவே" என்று ஸர் ரோலண்டு பிராடல் தமது "சிங்கப்பூர் விளக்குகள்" என்ற நூலில் கூறுகிறார். ஆகவே, இந்தியா–மலாயா உறவுகள் கலாசார ரீதியில் இவ்வளவு ஆழமாக வேரூன்றியிருப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

மலாயாவில் கர்நாடக சங்கீதம்

ம. கந்தையா

கௌஸ்மியான் சாகிப்
(மலாயாவின் முதல் கர்நாடக
சங்கீத குரு)

இற்றைக்கு முப்பத்தெட்டு வருடங்களுக்கு முன் கோலாலம்பூரைக் காணும் பாக்கியம்பெற்றேன். மலாயா புகையிரதப் பகுதியில் உத்தியோகமும் வகிக்கலானேன். எனது உடலுறுதிப் பயிற்சி நேரமும் உத்தியோக நேரமும் தவிர, எஞ்சிய நேரத்தை இசையை ரசிப்பதிலேயே செலவிட்டேன். அக் காலத்தில் மலாயாவில் இன்றிருப்பது போல் சங்கீத சபாக்களோ, சங்கீதப் பாடசாலைகளோ, சங்கீத வித்வான்களோ இல்லாதிருந்த போதிலும், தலைசிறந்த தமிழ் நாட்டு இசைவாணர் இசைவாணிகளின் இசைத் தட்டுகள் மலிந்து கிடந்தன. சங்கீத வித்வான் முசிரி சுப்பிரமணிய ஐயர், மைசூர் கிருஷ்ணப்பா ஆகியோரின் கர்ணாமிர்தமான கீர்த்தனங்களையும், திருச்செந்தூர் சண்முகவடிவு, கோயம்புத்தூர் தாயி ஆகியவர்களின் தெவிட்டாத அருட் பாக்களையும், ராமசாமிப் பத்தரின் மெய்சிலிர்க்கும் தேவாரம், திருப்புகழ், சிந்துகளையும், பல்லடம் சஞ்சிவிராவின் தீங்குழல் ஓசையையும் செம்பொன்னார்கோவில் ராமசாமி, மதுரை பொன்னுசாமி முதலியோரின் இனிய நாதஸ்வர இசையையும் இசைத் தட்டுகள் மூலமாகக் கேட்ட எனது உள்ளம் இசையைக் கற்கவும் ஆராயவும் விரும்பியது.

அப்போது இங் நாட்டில் அத்தி பூத்தது போல் அம்பாங் ஸ்திரீட்டில் மே. சு. வடிவேலுப் பிள்ளையின் வர்த்தக நிலைய மேல்மாடியில் தேனினுமினிய இசையொலியைக் கேட்டு ஆசை உந்த ஆங்கு சென்றேன். அன்று அதிர்ஷ்டவசமாய் இசைவல்லுநர் சோ. கௌஸ்மியான் சாகிப்பின் ஆர்மோனிய வாசிப்பையும் வித்வான் ராவுஜியின் மிருதங்க வாசிப்பையும் கேட்டு ஆனந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. கௌஸ்மியான் சாகிப்தான் மலாயாவின் முதலாவது கர்நாடக சங்கித குரு ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்று முதல் வெள்ளிக்கிழமை தோறும் ஆங்கு நடைபெறும் பஜனையில் கலந்து கொண்டேன்.

இப் பஜனையில் காலஞ்சென்ற மதுரமுத்துப் பிள்ளை ஆர்மோனியமும், புல்லாங்குழலும், தங்கவேலு மிருதங்கமும் வாசித்து வந்தனர். அக் காலத்தில் இங் நாட்டிற்கு விஜயஞ்செய்யும் இசைவாணர்களை இப் பஜனையில் பங்குபற்றச் செய்தும், அவர்களுக்குப் பொருளுதவி புரிந்தும், இசைக் கலையை இங் நாட்டில் வளர்த்து வந்த முதற் பெருமை மே. சு. வடிவேலுப்பிள்ளையையே சாரும். பக்க உதவியாகத் தற்சமயம் யாழ்ப்பாணத்திலிருக்கும் நா. இராமசாமியும் (சங்கீத அபிவிருத்தி சபாவின் முதல் காரியதரிசி), காலஞ் சென்ற சுப்பிரமணிய ஐயரும் (தொழில் இலாகா அதிகாரி) விளங்கினர். இம் மூவரின் பெருமுயற்சியுடனும், இன்னும் பல ஆர்வமுள்ள இசைப் பிரியர்களின் ஆதரவுடனும் சங்கீதத்தையும் அது சம்பந்தமான சகல கலைகளையும் வளர்க்க 1923, ஜூன் 20-ந் தேதி பிரிக்பீல்ட்ஸுக்கு அணித்தாயுள்ள வள்ளுவர் ஆலயத்தில் காலஞ் சென்ற



சி. எஸ். விஸ்வநாத ஐயர்,
கோலக்கிள்ளான்

அழகுக்கு

அழகு

செய்பவை

ஆபரணங்களே!

அழகிய வேலைப்பாட்டுடனும், உத்தரவாதத்துடனும், குறித்த காலத்தில் நீங்கள் விரும்பிய தினுசுகளில் நகைகள் செய்து கொடுக்கப்படும்.

V. கோபால் பத்தர்

97, ரம்போ ஸ்திரீட்,

கிள்ளான்

வாசக அன்பர்களுக்கு

ஓர் நற்செய்தி

எங்களிடம் நவீன நாவல் புத்தகங்களும், சினிமா ஸ்டார், சுவாமி தேசிய மூவர்ணப் படங்களும், சினிமா கதை வசனம், பாட்டுப் புத்தகங்களும், மொத்தமாகவும் சில்லரையாகவும் விலை மலிவாகவும் கிடைக்கும்.

விபரங்களுக்கு எழுதவும்:

மீனு விலாஸ் புத்தகசாலை

மெயின் ரோடு, தம்பின்

MEENA VILAS BOOK DEPOT

Main Road, Tampin

நீங்கள் விரைவில்

கார் ஓட்டப் பழகிக்கொள்ள

வேண்டுமா?

அதற்கோர் சந்தர்ப்பம்!

பூரண உரிமையாளர்:

வைரமுத்து டேனியல்

ஸ்தாப்பா டிரைவிங் ஸ்கூல்

42, ஹை ஸ்திரீட், — கோலாலம்பூர்

போன்: 6413

எமது வாடிக்கைக்காரர்களுக்கு

மெர்தேகா தின வாழ்த்துக்கள்!

எங்களிடம் இந்திய பட்டு ஜவுளி தினுசுகளும், வெங்கலப் பாத்திரங்கள், வளையல் தினுசுகள், சில்லரைச் சாமான்களும் கிடைக்கும்.

K. S. கொண்டசாமி செட்டியார்

&

அழகிரிசாமி செட்டியார்

55, ரெம்போ ஸ்திரீட், கிள்ளான்

போன்: 759 | தந்தி வளையல் (Valayal) | தபால் பெட்டி எண்: 85

பிராஞ்சு:

230, மெயின் ரோடு, பந்திங்

பேரறிஞர் ச. சின்னத்துரையைத் தலைவராகக் கொண்டு சங்கீத அபிவிருத்தி சபா ஸ்தாபிக்கப்பெற்றது. அக்காலத்தில் சங்கீதம் கற்பதற்குப்பெண்மணிகளோ, சிறுவர்களோ முன் வரவில்லையாதலால், 30 வயதுக்கு மேற்பட்ட 38 மாணவர்களுடன் (அனைவரும் உத்தியோகஸ்தர்கள்) இசை வல்லுநர் சோ. கௌஸ்மியான் சாகிப்பை ஆசிரியராகக் கொண்டு சங்கீதப் பாடங்கள் ஆரம்பிக்கப் பெற்றன. பின்னர் அவர்களுக்கு சங்கீதத்துடன் நாடகமும் பயில்விப்பதற்கு, காலஞ்சென்ற முடிகொண்டான் சி. குமாரசாமி பிள்ளை நாடக ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1927-ம் வருடம் பிப்ரவரி மாதம் பாதுகா பட்டாபிஷேகம் என்னும் நாடகத்தை நடத்தி எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றனர். மக்களின் ஆதரவு பெருகவே சமய கலாசாரப் பண்புகள் நிறைந்த பல நாடகங்களை நடத்திவருங்காலத்தில், இம்பிரோட்டில் "இஷ்ட மித்திர நடன சபா" எனும் ஒரு ஸ்தாபனம் எஸ். இராஜரத்தினம், கே. செல்லையா ஆகியோரது பெருமுயற்சியினாலும் இன்னும் பலருடைய ஆதரவுடனும் ஸ்தாபிக்கப்பெற்றது. அவர்கள் பல வருடங்கள் நாடகங்கள் நடத்தி இங் நாட்டில் நாடகக் கலையை வளர்த்து வரலாயினர். அக்காலத்தில் தாய் நாட்டிலிருந்து பல நாடகக் குழுவினர்களும் வந்து, இப்போது "லிடோ" என்றழைக்கப்படும் கட்டிடத்திலும், நகர மண்டபத்திலும் நாடகங்கள் நடத்தி மக்களை மகிழ்வித்து வந்தனர். ஆனால் கர்நாடக சங்கீத கோஷ்டிகளோ வித்வான்களோ வருவது மிக மிக அரிதாயிருந்தது. நாடகக் கலை வளர்ச்சியில் சிறிது காலம் ஈடுபட்டிருந்த சங்கீத அபிவிருத்தி சபையார், சபாவின் பெயருக்கமைய சங்கீதத்தை மென்மேலும் வளர்க்கத் திட்டமிட்டு, தாய் நாட்டிலிருந்து வயலின் வித்வான் டி. பொன்னுசாமி ஐயங்காரை 1931-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் தருவித்து ஆசிரியராக நியமித்தனர். 1928-ல் கௌஸ்மியான்சாகிப் காலமாகி விட்டார். 1931-லிருந்து மாணவிகளும் முதன் முதலாகச் சங்கீதம் கற்க முன் வந்தனர். 25 மாணவிகளுடனும் 6 மாணவர்களுடனும் சங்கீதப் பாடங்கள் ஆரம்பமாயின. இவர் மூன்று வருடம் சலியாது உழைத்து வந்ததன் பயனாக மாணவிகள் ஏராளமாக வந்து கற்கலாயினர்.

பின்னர் புல்லாங்குழல் வித்வான் கே. நடேச பிள்ளை, வயலின் வித்வான் வ. ராஜா கிருஷ்ணன், ஆர்மோனிய வித்வான் எஸ். ஹரிஹர ஐயர், வயலின்வித்வான் எஸ். ராமலிங்க ஐர் ஆகியோருடைய அரிய சேவையால் சபா நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது.

கோலாலம்பூர் சங்கீத அபிவிருத்தி சபையினரால் முதல் முதலாக 1927-ல் நடத்தப்பெற்ற "பாதுகா பட்டாபிஷேக" நாடகத்தின் பாத்திரங்கள். ஒரு ஸ்தாபனத்தினால் மலாயாவில் நடத்தப்பட்ட முதல் நாடகம் இதுவே. இடமிருந்து வலம் நான்காவதாக 'பரதன்' வேடத்தில் நிற்பவர் இக் கட்டுரையாளரான ம கந்தையா. 6-வதாக நிற்பவர் சங்கீத அபிவிருத்தி சபாவின் முதல் காரியதரிசி நா. ராமசாமி. வலது கோடியில் அமர்ந்திருப்பவர் நாடக ஆசிரியரான முடிகொண்டான் சி. குமாரசாமி பிள்ளை.

மலாயா மெர்தேகா நன்னாளில்

அனைவருக்கும் எங்கள் நல் வாழ்த்து

கே. ரெங்கசாமி செட்டியார் & சன்ஸ்

(ஸ்தாபிதம் 1932)

நெ. 32, ஜாலான் செக்கட், ஜோகூர்பாரு

எண்ணெய் மில், மாவு மில் & ஸ்டோர் நெ. 3, ஜாலான் ஆ பூக்,

KIRSHNA BRAND
RENGA OIL MILLS JOHORE

"கிருஷ்ணன் மார்க்"

நல்லெண்ணெய்

சுத்தமானது, சுவையானது.
ஒரு முறை நீங்கள் பரீக்ஷை
செய்து பாருங்கள். எல்லா
கடைகளிலும் கிடைக்கும்.

மானேஜிங் பார்ட்னர்: கே. ஆர். நடேச செட்டியார்

தபால் பெட்டி	போன்:	தந்தி விலாசம்
நெ. 21	நெ. 2855	"ரெங்சன்"

3–9–1939–ல் மைசூர் சமஸ்தான வித்வான் கோட்டு வாத்தியம் நாராயண ஐயர், காலஞ்சென்ற சங்கீத வித்வான் டி. ஏ. கே. சாமி பாகவதர் ஆகிய இருவராலும் சங்கீத பூஷண வகுப்புப்பரீட்சை நடத்தப்பெற்று, சித்தியெய்திய ஆறு மாணவிகட்கு தராதரப் பத்திரங்களும் வழங்கப்பெற்றன.

மாணவிகள் அதிகரிக்கவே செந்தூலிலும் கிளை ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்தப்பெற்றது. இவ்விரு ஸ்தாபனங்களிலும் அப்பொழுது 196 மாணவிகள் சங்கீதம் கற்று வந்தனர்.

அக் காலத்தில் சபாவில் அங்கம் வகித்த சிலர் உத்தியோகத்தின் நிமித்தம் வேற்றூருக்கு மாற்றப்பட்ட காலத்தில், அவர்களும் ஆங்காங்கு சங்கீத சபாக்கள் நிறுவினர். சிரம்பானில் நா. தம்பித்துரையின் பெருமுயற்சியினால் பால சங்கீத சபாவும், ஈப்போவில் மு. சென்கரத்தினத்தின் பெருமுயற்சியினால் பேரா சங்கீத சபாவும் நிறுவப்பெற்றன.

அதன் பின்பு மலாயன் சுகுண விலாச சமாஜத்தார் அரிய நாடகங்கள் நடத்தி பல ஆண்டுகளாக நாடகக் கலையை வளர்த்து வந்தனர். இச் சமாஜத்தின் தலைசிறந்த நடிகராய் திகழ்ந்தவர் சங்கீத ஆராய்ச்சியாளராகவும், கர்நாடக சங்கீத மேதையாகவும் விளங்கும் கோலக்கிள்ளான் சி. எஸ் விசுவநாத ஐயர் ஆவார்.

ஜப்பானியர் படையெடுப்பால் சங்கீத சபாக்களின் அபிவிருத்திகள் பாதிக்கப்படவே பேரா சங்கீத சபாவும், சிரம்பான் பால சங்கீத சபாவும் தமிழ்ப் பாடசாலைகளாக மாற்றப்பட்டன. பேரா சங்கீத சபா 1954-ம் ஆண்டிலிருந்து மீண்டும் சங்கீதக் கலையை மக்களுக்குச் சிறந்த முறையில் ஊட்டி வருகின்றது. இஷ்டமித்திர நடன சபா, கலா விருத்தி சங்கமாக மாற்றப்பட்டு தமிழையும், சங்கீதத்தையும் வளர்த்து வருகிறது.

1949-ம் வருஷத்திலிருந்து கோலாலம்பூரில் சங்கீத அபிமானிகள் ஒன்று கூடி ஸ்ரீ தியாகப் பிரம்ம உற்சவத்தை ஆண்டுதோறும் நடத்தி வருகிறார்கள். இந்த ஆண்டில் இந்த உற்சவம் சங்கீத மும்மூர்த்திகள் (தியாகையர், முத்துசாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரி) விழாவாக நடத்தப்பட்டது. உற்சவத்தில் 2 நாட்கள் பல பாடக, பாடகிகளின் கச்சேரிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சங்கீதக் கலை பற்றிய சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன. பொது மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் இவ் விழாக்களில் கலந்து சிறப்பிப்பது மிகுந்த உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிக்கிறது.

அத்துடன் கோலாலம்பூரில் சங்கீத அபிவிருத்தி சபையாரும், கலாவிருத்தி சங்கத்தாரும், ஈப்போவில் பேரா

(113–ம் பக்கம் பார்க்க)

மலாயா சுகுண விலாச சமாஜத்தார் 1931-ல் கோலாலம்பூரில் நடத்திய "இரண்டு நண்பர்கள்" (ப. சம்பந்த முதலியார் எழுதியது) நாடகத்தின் பாத்திரங்கள். இது இந்த சமாஜத்தின் 2-வது நாடகம். முதல் நாடகமாகிய "ரத்தினாவளி"யும் அதே ஆண்டில் நடத்தப்பட்டது. இடமிருந்து வலம் 5-வதாக அமர்ந்திருப்பவர் கோலக்கிள்ளான் சி. எஸ். விஸ்வநாத ஐயர். வலது கோடியில் அமர்ந்திருப்பவர், இவ்வாண்டில் "தேவன்" ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி நடத்திப் பரிசுகள் வழங்கிய கோலாலம்பூர் கி. மூர்த்தி.

மலாயாவில் புத்தமதம்

~கே. தம்மானந்த தேரோ~

இந்தியச் சக்கரவர்த்தி அசோகரின் காலத்தில்தான், கி.மு. 252-ல் மலாயாவில் புத்த மதம் பரவத் தொடங்கியது என்று மலாயாவில் வசிக்கும் புத்த மதத்தினரிடையே ஒரு நம்பிக்கை இருந்து வருகிறது, புத்தமத வரலாற்றின்படி, அசோக சக்கரவர்த்தியானவர் பௌத்த சமயப் பிரசாரகர்களான சோண, உத்தரா என்பவர்களை ஸ்வர்ண பூமிக்கு அனுப்பிவைத்தார். பழங்காலத்தில் ரங்கூனிலிருந்து சிங்கப்பூர் வரை கடற்கரைப் பகுதி முழுவதற்கும் ஸ்வர்ண பூமி என்ற பெயர் வழங்கி வந்தது.

இன்று கிடைக்கும் சான்றுகளின்படி, கிறிஸ்தவ சகாப்தத்தின் ஆரம்பத்தில் மலாயாவில் புத்தமதம் பரவத் தொடங்கியது என்று தெளிவாகத் தெரிகிறது. 19-ம் நூற்றுண்டில் பினங்கின் ரெஸிடென்டான கர்னல் ஜேம்ஸ் லோ என்பவரும், மற்றும் சிலரும் கிட்டாவிலும், பிராவின்ஸ் வெல்லெஸ்லியிலும் அநேக சமஸ்கிருத சாஸனங்களைக் கண்டெடுத்தனர். இந்தியாவிலிருந்து முதல் முதலில் மலாயாவில் குடியேறியவர்களால் இங்கு புத்தமதம் கொண்டுவரப்பட்டது என்பதை அந்தச் சாஸனங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அத்துடன், சமீபத்தில் டாக்டர் வேல்ஸ் செய்த புதைபொருள் ஆராய்ச்சி வேலைகளும், மிகப் பழங்காலத்திலேயே இங்கு புத்த மதச் செல்வாக்கு நிலவியிருந்ததற்குச் சான்று கூறுகின்றன.

பஹாங், குவா கம்பாரில் கிடைத்த 2 புத்தமத முத்திரைகளை இப்போது ராபிள்ஸ் மியூஸியத்தில் காணலாம். அந்த முத்திரைகளில் கட்டுக்குட்டையான 6 உருவங்கள் பொறிக்கப் பட்டிருக்கின்றன. அவ்வுருவங்கள் ஜாவா உருவங்களை நினைவூட்டுகின்றன.

கோலாலம்பூர் புத்தர் கோவிலில் இருக்கும் மைத்ரேய புத்தர்

மலாயாவில் கிடைத்த மிகப் பழைய புத்தர் சிலை, கிட்டாவில் ஸ்ரீமதி வேல்ஸ் தோண்டியெடுத்தசின்னஞ்சிறிய வெண்கலச்சிலையாகும். அது கி. பி. 5 அல்லது 6–ம் நூற்றுண்டைச் சேர்ந்ததாக இருக்கவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கோலாலம்பூர் தேசீய மியூஸியத்தில் உள்ள பெரிய புத்தர் சிலை, 1931–ல் ஈப்போவுக்கு அருகில் சுங்கை கிந்தா ஈயச் சுரங்கத்தில் ஈயக் கப்பலால் வெளியே கொண்டு வரப்பட்ட வெண்கலச் சிலையாகும். இதுவும் கி. பி. 5 அல்லது 6–ம் நூற்றுண்டை, குப்தர் காலத்தைச் சேர்ந்தது என்று ஆராய்ச்சியாளர்களால் கூறப்பட்டுள்ளது.

இந்நாட்டில் புத்தமதம் இருந்ததற்குச் சான்ருக அநேக புத்தர் சிலைகளும், சாஸனங்களும் மலாயாவில் பல இடங்களில் கிடைத்திருக்கின்றன.

ஸ்ரீவிஜய சாம்ராஜ்யம் என்ற பௌத்த சாம்ராஜ்ய ஆதிக்கத்தின் கீழ் மலாயா வந்தது, இந்நாட்டில் மஹாயான புத்தமதச் செல்வாக்கு பலம் பெற்றதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். ஸ்ரீவிஜய சாம்ராஜ்யம் கி. பி. 7–ம் நூற்றுண்டிலிருந்து 12–ம் நூற்றுண்டுவரை மலாயா தீபகற்பத்தையும், தாய்லாந்தின் ஒரு பகுதியையும் ஆண்டு வந்ததாகச் சரித்திரம் கூறுகிறது. 8–ம் நூற்றுண்டின்



புத்தர் கோவிலின் மூலஸ்தானத்தில் உள்ள புத்தர்

பிற்பகுதியில் அநேகமாக மலாயா தீபகற்பம் முழுவதும் தாய்லாந்தின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அப்போது தேரவாத புத்தமதம் இங்கு மேலோங்கியிருந்தது. கி. பி. 1276–ல், மலாக்காவில் முகம்மது ஷா ஆட்சிக்கு வந்த பின் நாடு முழுவதும் முஸ்லிம் நாடாக மாறிவிட்டது. அன்று முதல் நிலைமை அப்படியே இருந்து வருகிறது. முஸ்லிம் மதம் பரவுவதற்கு முன் புத்த மதத்தின் இரு கிளைகளான தேரவாதமும், மஹாயானமும் மலாயாவில்நிலவியிருந்ததற்கு அநேக சான்றுகள் இருக்கின்றன. அப்போது புத்த மதமும், ஹிந்து மதமும், அடுத்தடுத்து இங்கே நிலவின. ஆனால், மஜாபஹித், ஜம்பி ஆகிய ராஜ்யங்களின் தாக்குதல்களால் ஸ்ரீ விஜய சாம்ராஜ்யம் பலஹீனம் அடைந்து வீழ்ச்சியுற்றபின், முஸ்லிம் மதம் தன் ஆற்றலுடன் மலாயாவெங்கும் பரவியது. அன்றிலிருந்து மலாயாவுக்குச் சீனர்கள் குடியேற ஆரம்பிக்கும் வரையிலும் இங்கு புத்த மதம் உறக்க நிலையில் இருந்து வந்தது. 14–வது நூற்றுண்டில் மலாயாவில் சீனர்கள் குடியேற ஆரம்பித்தார்கள். ஆனல் 19, 20–ம் நூற்றுண்டுகள் வரையில், அதிக எண்ணிக்கையில் சீனர்கள் குடியேறவில்லை. அவர்கள், மஹாயான புத்தமதம் கன்பூஷிய மதம் டாவோமதம் ஆகியவற்றின் கலவையான ஒரு மதத்தைக் கொண்டுவந்தனர்.

சிங்கள புத்தர்கள் சமீபத்தில்தான் இந்நாட்டுக்குக் குடியேற ஆரம்பித்தார்கள். 19-ம் நூற்றுண்டின் இறுதிப் பகுதிக்கு முன் அவர்களுடைய மத சம்பந்தமான வேலைகள் நடைபெற்றிருக்க முடியாது. மிகப் பழைய தேரவாதக் கோவில், 1894–ல் கோலாலம்பூரில் பிரிக்பீல்ட்ஸில் கட்டப்பெற்று இப்போதும் சீர்பெற்று விளங்கும் கோவில்தான். இது கடந்த 60 வருஷ காலத்தில் மலாயாவில் வாழும் சகல சமூக புத்தமதத்தினருக்

(111–ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கீத சபையாரும் வருஷந்தோறும் 9 நாட்கள் நவராத்திரி விழாக் கச்சேரிகளையும் சிறப்பாக நடத்தி வருகிறுர்கள்.

இந் நாட்டில் இசைக் கலைக்குச் சேவை செய்யும் வித்வான்களுக்குச் சங்கீத அபிமானிகள் பட்டம் அளித்துக் கௌரவிக்கிறுர்கள்.

ரேடியோ மலாயாவில் அடிக்கடி அரைமணி நேரக் கர்நாடக சங்கீதச் கச்சேரிகள் நடப்பது பெரிதும் பாராட்டத் தக்கதாகும்.

இந்த இசை நிகழ்ச்சிகளும், தமிழ்நாட்டிலிருந்து வந்து செல்லும் வித்வான்களின் கச்சேரிகளும் இந்நாட்டில் கர்நாடக சங்கீத ரசிகர்களின் தொகையைப் பெருக்கி வருகின்றன.

நமது கர்நாடக சங்கீதமும் நடனம், நாடகம் ஆகிய கலைகளும் ஓங்கி வளர நாட்டின் நடுநாயகமாகிய கோலாலம்பூரில், போதிய ஆசிரியர்களுடன் சங்கீதக் கலாசாலை ஒன்று அமைவது இன்றியமையாததாகும். அறம் வளர்க்கும் பெருந்தகையாளர்களும், பிரபுக்களும், ரசிகர்களும், சங்கீத ஸ்தாபனங்களும் சேர்ந்து முயற்சி செய்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

*

கும் சமய ஞானத்தை புகட்டும் பணியைச் செய்து வருகிறது. மலாயா வெங்கும் அநேக சீன புத்தமத ஸ்தாபனங்களும், பௌத்தக் கோவில்களும் இருந்தபோதிலும், சிங்கள பௌத்தர்களின் தொடர்பால்தான் அவை சரியான மார்க்கத்தைப் பின்பற்றின. "மலாயாவில் புத்த மதம்" என்ற நூலில் ஸ்ரீ கோவின் மெக்டௌகல் என்பவர் பின்வருமாறு கூறுகிறார்:—

"பெடரேஷன் முழுவதிலும் முழுக்க முழுக்க சிங்களக் கோவில்கள் என்பவை இரண்டே இரண்டுதான் இருக்கின்றன. புத்தமதம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் சிங்களவர்கள் பிரதான பங்கெடுத்துக் கொண்டதைக் கவனிக்கும்போது, இது சற்று ஆச்சரியமாகவே இருக்கிறது. மலாயாவில் சிங்கள பிக்ஷுக்களும், சிங்கள மக்களும் தங்கள் மத விஷயத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்களாக இருக்கிறார்கள். கூடிப் பேசுவதற்கு எப்போதும் தயாராக இருக்கிறார்கள். பிற சமூகங்களில் சிலவற்றைவிட அவர்கள் தங்கள் மதத்தைப் பற்றி நல்ல விஷய ஞானம் படைத்தவர்களாக இருக்கிறார்கள். அத்துடன், அவர்களுக்கு ஆங்கிலத்திலும் நல்ல ஞானம் இருப்பது ஒரு சௌகரியம்."

மலாயாவில் பெரும்பாலான சீனர்கள் புத்தமதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனாலும், இம்மதத்தினரின் மொத்த எண்ணிக்கையைத் தெரிந்துகொள்ள இயலவில்லை. அதே போல இந்நாட்டிலிருக்கும் புத்த சங்கங்கள், புத்த கோவில்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையையும் கூற இயலவில்லை. இவை போக, இந்நாட்டில் தாய்லாந்து மக்களின் புத்தக் கோவில்கள் பலவும், ஒரு சில பர்மிய புத்தக் கோவில்களும்

(126-ம் பக்கம் பார்க்க)

தம்புசாமிபிள்ளையின் சமூக சேவைகள்

சுமார் 60 வருஷங்களுக்கு முன் மலாயா இந்தியர்களில் மிகப் பிரபலமாக விளங்கியவர் தம்புசாமி பிள்ளை. இந்திய சமூகத்தின் தனிப்பெருந் தலைவர் என்று அரசாங்கமும், பிற சமூகங்களும் அவருக்கு உயர்ந்த ஸ்தானம் அளித்தன. அவர் பெயரால் இப்போது கோலாலம்பூரில் உள்ள ஒரே நிலையம், செந்தூல் தம்புசாமி பிள்ளை தமிழ்ப் பாடசாலையாகும். பெருந் தனவந்தராகவும், வள்ளலாகவும் விளங்கி சமூக நலனுக்கு உழைத்தவரான தம்புசாமி பிள்ளை. சிலாங்கூரின் முதல் ரெஸிடெண்ட்டான ஜே. ஜி. டேவிட்ஸனுடன், அவருடைய குமாஸ்தாக்களில் ஒருவராகச் சிங்கப்பூரிலிருந்து வந்தார். பின்பு சிலாங்கூர் சமஸ்தான பொக்கிஷ அதிகாரியானார். 1889-ல் சர்க்கார் பதவியை விடடு, லொக் யூ வுடன் சேர்ந்து ரவாங் ஈயச் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டுப் பெரும் பொருள் சம்பாதித்தார். வேறு பல தொழில் துறைகளையும் ஸ்தாபித்து நடத்தினார். 1902-ல் சிங்கப்பூர் குதிரைப் பந்தயத்துக்குப் போயிருந்தபோது அங்கே காலமானார்.



தம்புசாமிபிள்ளை

கோலாலம்பூரில் 1890-ல் முதல் முதலாக சுகாதார போர்டு (பின்பு முனிசிபாலிடியாக மாறியது) ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு ஏ.ஆர்.வென்னிங் தலைவராக நியமிக்கப்பட்டார்; பூமலையின் ஸ்தாபகர் அவரே. 1894-ல் சுகாதார போர்டின் அங்கத்தினர்கள் 11 பேரில் ஒருவராக நியமிக்கப்பட்ட முதல் தமிழர் தம்புசாமி பிள்ளையே.

தம்புசாமி பிள்ளை தம் வாழ்நாளில் அனுதினமும் தான தர்மங்கள் செய்தவர். அவருடைய முயற்சியால்தான் கோலாலம்பூரில் மகா மாரியம்மன் கோவில் கட்டப்பட்டது. ஸ்தாப்பாவிலும் புடுவிலும் இந்துக்கள் மயானத்துக்கு இடம் கொடுத்தும் உதவினார்.

தம்புசாமிபிள்ளை தமிழ்ப் பாடசாலை

"ஹாங் துவா" என்ற நாடகத்தில் மலாய்ப் பெண்களின் நடனம்

படம் - ஹோங் போட்டோ ஸ்டுடியோ

'அடுக்கு வன்னச் சேலை எடுத்து நெறிபிடித்த உடையினுள்' —குற்ருலக் குறவஞ்சி.

மலாய் உடையழகு காட்டும் நடையழகி.

'நவ்வியின் ஒதுங்கி, இறைநாணி, 'அயல் நின்ருள்'--கம்பர்.

மலாய்ப் பெண்களின் மற்ருெரு வகை உடையலங்காரம்

'கண்பிற பொருளில் செல்லா, கருத்தெனின் அஃதே, கண்ட,
பெண்பிறந்தேனுக்கென்றால் என்படும் பிறருக்கு.........? —கம்பர்.

மென்பூங் கலிங்கத்தில் மேல் உடை தரித்த அழகி.

கோலாலம்பூரில் இந்திய நடனம் பயிலும் ஐரோப்பியப் பெண்மணி.

செலாபா எஸ்டேட்டில் தீமிதி உற்சவம்: நெருப்பில் மிதிக்க பக்திப் பெருக்குடன் விரைந்து வருகின்றனர்.

உற்சவம் காணக் கூடிநிற்கும் தோட்டப் பாட்டாளிகள்.

நெருப்புக்கும் நீருக்கும் வேற்றுமை தெரியாமல் நடக்கிறார்கள்.

கடவுள் பெயரை முழங்கிக் கொண்டே நெருப்பிலிருந்து
வெளியே வந்து நீரில் மிதிக்கின்றனர்.



வேதனையுணர்ச்சியின்றி தீமிதித்த கால்களை நீட்டி அமர்ந்துள்ளனர்.

தீமிதிக்குப்பிறகு, புனிதச் சாம்பலை அள்ளிச் செல்லுகின்றனர்.

நெகிரி செம்பிலான், பெங்காலன் கெம்பாஸுக்கு அருகே கிராமட் சுங்கை உடாங்கில் கிடைத்த புராதன ஹிந்துச் சிற்பங்கள்.

கிராமட் சுங்கை உடாங்குக்கு 21-8-53ல் சென்றிருந்த முன்னாள் ஹைகமிஷனர் ஸர் ஜெரால்ட் டெம்ப்ளர், ஹிந்துச் சிற்பங்களைப் பார்த்து வியக்கிறார்.



கூட்டணியின் வரலாறு

—க. குருபாதம்—

இரண்டாவது உலக யுத்தம் தொடங்கும் வரை மலாயா பெடரேஷன் காலனி ஆதிக்கத்திலேயே தொடர்ந்து இருந்து வந்தது. 1942-ம் ஆண்டு தொடக்கத்தில் மலாயா ஜப்பானியர் ஆட்சிக்குட்பட்டது. 44 மாத காலம் ஜப்பானியர் ஆட்சி நீடித்தது.

1943-ம் ஆண்டு முற்பகுதியில் தந்தை நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மலாயாவுக்குள் வந்து சேர்ந்தார். அவரது வருகையினால் சிதறிக் கிடந்த இந்தியசமூகம் ஒன்று சேர்ந்து ஒற்றுமைப்பட்டுச் செயல் புரியத் தொடங்கியது. இந்திய சுதந்திர இயக்கம், அதன் ஒரு பகுதியாகிய இந்திய தேசிய ராணுவம் ஆகியவை அவரால் தோற்றுவிக்கப்பட்டு, அந்நிய ஆட்சிக்கு முடிவு தேடும் சுதந்திரப் போராட்ட இயக்கம் வலுப்பெற்றது. நகரப் பகுதிகளில் உள்ளவர்கள் மட்டுமல்லாது, தோட்டப் புறங்களில் வாழும் ஆயிரமாயிரம் பாட்டாளி மக்களும்—ஆண் பெண் இரு சாராருமே—உத்வேகத்துடனும், உத்ஸாகத்துடனும் இந்த இயக்கங்களில் பூரணமாய்ப் பங்கு பெற்று ஒத்துழைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மலாயா இந்தியர் காங்கிரஸ்

பல லட்சம் பேர் செத்த பின்னர் 1946-ல் உலகப்போர் முடிவுற்றது. போர் முடிவுற்ற போதிலும்கூட மக்களின் உள்ளத்துணர்ச்சி செத்துவிடவில்லை. இந்திய தேசிய ராணுவத்தில் பெரும் பணியாற்றிய ஸ்ரீ ஜான் ஏ. திவி தமது சிறை வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற்று வெளியே வந்தார். அதே ஆண்டு ஆகஸ்டு மாதம் மலாயா இந்தியர் காங்கிரஸைத் தோற்றுவித்தார். மலாயாவின் முதலாவது அரசியல் ஸ்தாபனமாக மலாயா இந்தியர் காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்ட ஆகஸ்டு மாதத்திலேயே மலாயா சுதந்திரம் அடைகிறது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். முதன் முதலாக மலாயாவுக்குப் பூரண சுதந்திரம் கோரிய ஸ்தாபனம் மலாயா இந்தியர் காங்கிரஸ்தான் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரே தேசிய இனம், பிரஜா உரிமைத் தகுதி, சிங்கை—பெடரேஷன் இணைப்பு, சிங்கையில் சிதைக்கப்பட்ட நேதாஜி ஞாபகார்த்த சின்னத்தைத் திரும்ப அமைத்தல், கள் ஒழிப்பு, கல்வி முறையில் மாறுதல், முற்றிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை ஆகியவை காங்கிரஸ் போராடிய முக்கிய லட்சியங்களில் முதலிடம் பெற்றவையாகும். காங்கிரஸின் தலைவர்களாக ஸ்ரீ திவியை அடுத்து ஸ்ரீ பூத்சிங் (1948–49), ஸ்ரீ கா. ராமநாதன் (1950), ஸ்ரீ கே. எல். தேவாசர் (1951–54) ஸ்ரீ வீ. தி. சம்பந்தன் (1955 முதல் இன்று வரை) ஆகியோர் இருந்துள்ளனர்.

ஐக்கிய மலாய்க்காரர் தேசிய ஸ்தாபனம் (அம்னோ)

1946-ம் ஆண்டு இறுதியில் டத்தோ ஆன் பின் ஜாபர் மலாய்க்காரர்களுக்கு அரசியல் கட்சி நிறுவும் முயற்சியை மேற்கொண்டு ஐக்கியமலாய்க்காரர் தேசிய ஸ்தாபனத்தை நிறுவினார். இவர் பல ஆண்டுகள் ஜோகூரின் மந்திரி புஸார் பதவி வகித்தவராதலின், அவரிடம் மலாய்க்காரர்களுக்கு நல்ல ஈடுபாடு இருந்ததில் வியப்பில்லை. ஜோகூர் சுல்தானுடன் ஏற்பட்ட அபிப்பிராயபேதம் காரணமாக, அவர் தமது மந்திரி புஸார் பதவியை ராஜினாமா செய்த சமயத்தில் மக்கள் எழுப்பிய பெரும் குரல் காரணமாக, அவரை மீண்டும் மந்திரி புஸாராக சுல்தான் நியமித்தார். 1951-ம் ஆண்டு இறுதியில் சகல சமூகத்தாரும் அங்கம் பெற்று ஒரே ஸ்தாபனமாய் விளங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மலாயா சுதந்திரக் கட்சியை டத்தோ ஸர் ஆன் பின் ஜாபர் தொடங்கியதுடன் அம்னோவிலிருந்தும் ராஜினாமாச் செய்தார். பின்னர் நெகராக் கட்சியையும் அவர்

(127–ம் பக்கம் பார்க்க)

(40-ம் பக்கத் தொடர்ச்சி)

டேட்டே செட்டியார்கள் உதவிய மூலதனத்தைக் கொண்டுதான் ஆரம்பிக்கப் பட்டது என்பது சரித்திரத்தில் காணும் உண்மை. மேலும் அக்காலத்திலேயே இச் சமூகத்தவர் பலர் காடுகளை அழித்து மலாயாவின் ஜீவாதாரமான ரப்பரைப் பயிர் செய்திருக்கிறார்கள். மலாயன் ரயில்வே போடப் பட்ட காலத்தில் பெரும் பொருள் உதவி புரிந்திருக்கின்றனர்.

இன்றும் நாணயமாக நடக்கின்ற வியாபாரிகள் அல்லது தொழிலாளிகளுக்கு எவ்விதமான ஈடுசாடுமின்றி நபர் நம்பிக்கையின் பேரில் பெரும் பண உதவி செய்து, வியாபாரத்தையும்தொழிலையும் வளம் படுத்தி வருகிறார்கள்.

சாதி மத மொழி வேறுபாடுகளின்றி இவர்கள் நேர்மையான முறையில் தொழில் நடத்தி வருவதால், அரசாங்கத்தார் எக்காலத்திலும் இவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்து வருவதுடன், கௌரவித்தும் வந்திருக்கிறார்கள். சமஸ்தான அதிபர்களாகிய சுல்தான்களும் இவர்களை அன்புடன் நடத்தி வருகிறார்கள்.

தங்களுடைய தொழிலையே சீரும் சிறப்பும் பெருக நடத்தி வரும் தனவணிகர்கள் கடவுளிடத்தும் மக்களிடத்தும் மாறாத அன்புடையவர்கள். தாங்கள் வசிக்கின்ற ஒவ்வொரு ஊரிலும் ஆலயங்கள் கட்டி ஆண்டுதோறும் மஹேஸ்வர பூஜையை மகிழ்ச்சியுடன் செய்துவருகின்றனர்.

மலாய் நாட்டின் கல்விப் பெருக்கத்திற்கும் பெருந் தொண்டு செய்து வருகின்றனர். அவ்வப்போது ஆங்காங்குள்ள பள்ளிகளிக்கு பொருள் உதவி செய்து வந்திருக்கின்றனர். இவர்களின் உதவிபெற்ற கல்வி நிலையங்களுள் கோலாலம்பூர் மெதடிஸ்ட் ஆண் பாடசாலை, விவேகானந்தா தமிழ்ப் பள்ளி. பூச்சோங் சுத்த சமாஜம் முதலியவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம். மலாயா பல்கலைக் கழகத்திற்கு சமார் லட்சம் வெள்ளிக்கு மேல் பொருள் உதவியிருக்கிறார்கள். மேலும் பெடரேஷன் தலைநகராகிய கோலாலம்பூரில் ஒரு உயர்நிலைப்பள்ளி நிறுவத் துரிதமாக முயன்று வருகின்றனர்.

நாட்டுக்கோட்டைச்செட்டியார்களின் உயர்வையும் நாணயத்தையும் பற்றி அரசாங்க அதிகாரிகள் பலரும் பாராட்டிக் கூறியுள்ளனர்.

உதாரணமாக மலாக்கா ஜில்லா நீதிபதியாக இருந்த ஜே. எஸ். டபிள்யூ. ஆர்தர் 2-5-1925-ல் அப்பதவியினின்று மாற்றிச் சென்ற பொழுது நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் வழக்கறிஞர் எம். என். மாலிக் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"செட்டியார்கள் ஒரு சட்டையுடனும் வேஷ்டி துண்டுடனும் இருக்கிறார்கள், நம்மைப்போல் ஹாட்டும் சூட்டும் அணியவில்லை என்று கருதவேண்டாம். அவர்கள் செல்வத்தில் சிறந்தவர்கள். அவர்களால்தான் இம்மலாயாவிலுள்ள காடுகள் எல்லாம் நாடாகியது. நாடெல்லாம் நகரமாகியது. அவர்கள் இந்நாட்டுக்கு வராதிருந்தால், தங்கள் செல்வத்தைக் கண்டவர்களுக்கெல்லாம் கொடுத்து உதவாதிருந்தால், இம் மலாயாவை நாம் இந்த நிலையில் காணமுடியாது."

நீதிபதி ஆர்தர் பதில் கூறுகையில், "செட்டியார்களைப் பொறுத்தவரை ஸ்ரீ மாலிக் கூறியவை உண்மை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். அத்துடன் செட்டியார்கள் ஒழுக்கத்தால் உயர்ந்தவர்கள் உண்மையிற் சிறந்தவர்கள். நான் இங்கு நீதிபதியாக வந்த பின் பல வழக்குகள் வந்தன. செட்டியார்கள் கொண்டு வந்த கேஸ்களில் புரட்டு என்பதே கிடையாது. அதுவுமின்றி அவர்கள் வைத்திருக்கும் கணக்கும் மிக நேரானது. அதனால் எனக்கு எவ்விதத் தொந்தரவும் நேரவில்லை. அதற்காக அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்" என்றார்.

மலாய் நாடு சுதந்திரம் அடைவதை எண்ணி எண்ணி மகிழ்கின்ற பல லட்சம் மக்களுடன் இச் சமூகத்தினரும் கூடி இன்பம் அடைகின்றனர். மலாயா சுதந்திரத்தின் தந்தை துங்கு அப்துல் ரஹ்மான் இந்நாடு விடுதலை அடைவதற்குச் செய்த சேவையையும் தியாகத்தையும் மனமாரப் போற்றுகிறார்கள். அன்னாரின் தலைமையின் கீழ் இந்நாடு மென்மேலும் பல துறைகளிலும் முன்னேறி, உலக அரங்கிலே சிறந்த இடம் பெறுமெனத் திண்ணமாக நம்புவதோடு, இந்நாட்டு முன்னேற்றத்துக்குத் தங்களாலானவற்றை எல்லாம் செய்ய இச் சமூகத்தினர் என்றென்றும் கடமைப்பட்டிருக்கின்றனர்.

—அகிலமலாயா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வர்த்தக சங்கச் சார்பில் கொடுக்கப்பட்ட கட்டுரை.

(114-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளன, அவையும் பல விதமான பௌத்தப் பணிகளைச் செய்துவருகின்றன.

ஒவ்வொரு சமூகத்திலுமுள்ள படித்தோர் கூட்டம், இப்போது புத்த மதத்தில் அக்கறை காட்டிவருகிறது. கடந்த சில வருஷங்களில், மலாயாவில் புத்த மதம் நன்கு விழிப்படைந்துள்ளது.

மலாயாவில் ஆரம்ப கால புத்தமதம் மறைந்த பின், சமீபத்தில் குடியேறிய சமூகங்களினால் இங்கு அம் மதம் தழைத்திருக்கிறது.

(125-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கினார். இடைக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மந்திரி-அங்கத்தினர் பதவியையும் ஏற்றார்.

ஸர் ஆன் ராஜினாமா செய்த பின்னர் துங்கு அப்துல் ரஹ்மான் புத்திரா அம்னோ தலைமைப் பதவியை ஏற்றார். அரசியல் கட்சித் தலைமைப் பதவியை ஏற்பதற்காகக் கிட்டா சமஸ்தானத்தில் தாம் வகித்து வந்த டெபுடி பப்ளிக் பிராசிகியூட்டர் பதவியையும் ராஜினாமாச் செய்தார். கிட்டா சுல்தானின் சகோதரரான துங்கு அப்துல் ரஹ்மான், மக்களுடன் சாதாரணமாகவும் சரளமாகவும் பழகி மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றார். பதவியை விடுத்த தியாகம், மக்களை அவர் பால் மேலும் மேலும் கவர்ந்தது. பலஹீனப்பட்டுக் கிடந்த ஸ்தாபனத்தை மீண்டும் பலப்படுத்தி பிரம்மாண்டமானதொரு ஸ்தாபனமாய் வியக்கத்தக்க முறையில் அவர் அமைத்தார். அம்னோ ஸ்தாபன அமைப்பில் குறிப்பிடத்தக்கவை அதன் இளைஞர் பகுதியும், மாதர் பகுதியுமேயாகும். இவ்விரு பகுதிகளின் கட்டுக்கோப்பான சக்தியே இன்று அம்னோ கோட்டையைக் கட்டிக் காப்பவை என்றால் அது மிகையல்ல. தேர்தல் சமயத்திலும், கட்சிப் பிரசாரத்திலும், கட்சி வளர்ச்சியிலும் பெருந்தொண்டு புரிகின்ற இவ்விரு பகுதிகளும் அம்னோவின் இரு கண்களாகும்.

மலாயா சீனர் சங்கம்

1948-ல் அவசர காலம் பிரகடனம் செய்யப்பட்டது. மலாயா வாழ் சீனர் சமூகம் கட்டுக்கடங்காத நிலை எய்தி விடுமோ என்ற அச்சம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆலோசனையின் பேரிலும், தூண்டுதலின் பேரிலும் மலாயா சீனர்களை ஒரு ஸ்தாபனத்துக்குள் கொண்டு வருவதற்காகத் தொடங்கப்பட்ட ஸ்தாபனமே மலாயா சீனர் சங்கம். ஆனால் அரசாங்க ஆதரவுடன் விளங்கிய காரணத்தினால் தொடக்க காலத்தில் இந்த ஸ்தாபனம் மக்களின் ஆதரவைப் பூரணமாய்ப் பெறவில்லை. பின்னர் 1950-ம் ஆண்

(129-ம் பக்கம் பார்க்க)



செம்பனை வந்த கதை

செம்பனை மரங்கள் மலாயாவின் சுதேசிகளல்ல: குடியேறியவைதான். மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து செம்பனை முதல் முதலாக மலாயாவுக்குக் கொண்டுவரப்பட்டு, சிங்கப்பூர் விவசாயப் பண்ணையில் ஊன்றி வளர்க்கப்பட்டது. செர்டாங் ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதனைகள் செய்யப்பட்ட பின், 1917-ம் வருஷம் முதல் அது எஸ்டேட் பயிராக மாறியது. ஜோகூரிலும், பிற இடங்களிலும் இப்போது மொத்தம் சுமார் 60 செம்பனைத் தோட்டங்கள் இருக்கின்றன. இவற்றின் மொத்த விஸ்திரணம் சுமார் 1,10,000 ஏக்கர்கள். உற்பத்தி 56,000 டன் எண்ணெய்; 15,000 டன் பிண்ணாக்கு. ஒரு டன் எண்ணெயின் விலை சுமார் 640 வெள்ளி.

(தேவாசர்........தொடர்ச்சி)

கப்பட்டவர்களே அங்கம் வகிக்கும் பெடரல் சபை வேண்டுமென்று காங்கிரஸை அடுத்து மலாயா தொழிற் கட்சியும், அம்னோ—ம. சீ. ச. கூட்டணியும் கோரின.

முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் சபையில் அங்கம் வகிக்க வேண்டும் என்ற இந்தக் கோரிக்கை தான், அம்னோ—ம. சீ. ச. கூட்டணிக்கு அண்மையில் காங்கிரஸைக் கொண்டு வந்து சேர்த்தது. இந்தச் சமயம் வரை மலாயா சுதந்திரக் கட்சியைக் காங்கிரஸ் ஆதரித்தது. ஆனால், மலாயா சுதந்திரக் கட்சியானது தேர்தலை ஆட்சேபித்ததுடன், மீண்டும் நியமன முறை வேண்டுமென்று கோரியதால், அந்தக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய மகாநாட்டிலிருந்து காங்கிரஸ் வெளியேறியது. வகுப்புவாத ஸ்தாபனம் என்ற முறையில் பல ஆண்டுகள் வரை காங்கிரஸ் தேர்தலில் பங்கு பெறாது விலகியிருந்தது; அதே சமயத்தில் வகுப்புவாதமற்ற ஸ்தாபனங்களைத் தேர்தலில் ஆதரித்தது. ஆனால், மலாயா சுதந்திரக் கட்சி பலப்படாத காரணத்தாலும், தேர்தலை அக்கட்சி எதிர்த்ததாலும், 1954-ல் ஈப்போ நகரக் கவுன்சில்தேர்தலில் முதன் முதலாகக் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டது. அதே ஆண்டில் டிசம்பர் மாதத்தில், கோலாலம்பூர் நகரசபைத் தேர்தல் நடைபெற்றபொழுது அம்னோ—ம. சீ. ச. கூட்டணியுடன் காங்கிரஸ் சேர்ந்தது. அது முதல் கூட்டணியில் காங்கிரஸ் ஒரு அங்கமாக விளங்கி வருகிறது.

பதினொரு ஆண்டு கால வாழ்வில், நாட்டின் தேசியப் போராட்டத்தில் காங்கிரஸ் தனது பங்கைச் செவ்வனே நிறைவேற்றி வந்துள்ளது. மலாயாவுக்கும் மற்றவர்களுக்கும் செய்ய வேண்டிய தனது கடமையிலிருந்து காங்கிரஸ் என்றும் பின்வாங்கியதில்லை. பலாத்காரத்தைக் காங்கிரஸ் எப்போதுமே கண்டனம் செய்து, சட்டபூர்வமான முறையில் வேலை செய்ய வேண்டுமெனக் கூறி வந்துள்ளது. சேவையும், பயமின்மையும் காங்கிரஸின் தாரக மந்திரமாகவும், சின்னமாகவும் இருந்து வந்திருக்கின்றன.

சமீப காலத்தில், காங்கிரஸின் பல மகாநாட்டுத் தீர்மானங்களை அதன் தலைமை செயல்படுத்தத் தவறிய காரணத்தால் ஸ்தாபனம் பலஹீனம் அடைந்திருக்கிறது. காங்கிரஸ் விழித்தெழுந்து, தான் இயங்கும் அவசியத்தை நிரூபிக்கவேண்டும். ❋

(ரமணி...........தொடர்ச்சி)

போவதில்லை. ஜனநாயகத்தில், எண்ணிக்கைக்குத்தான் பலமே ஒழியத் தரத்துக்கு அல்ல.

பிரஜையாவதற்குரிய உரிமையை அடிப்படையாக வைத்துக் கொண்டு நாம் இந் நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமையைப் பற்றி யோசிக்கக் கூடாது. பிரஜைகளாக இல்லாத நிலையிலும், நாம் வாழும் இந் நாட்டிற்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் பல உண்டு. வாழும் நாட்டுக்கு விஸ்வாசம் செலுத்த வேண்டிய கடமை முதலில் இருக்கிறது. நாம் பிரஜைகளாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், நம்மை இந்தியர்கள் என்று கருதுவதில், மகத்தான ஒரு நாகரிகத்தின், மகத்தான ஒரு கலாசாரத்தின், இன்றைய நவீன அளவுகோல்களைக் கொண்டு அளந்து பார்த்தாலும், இனத் தொடர்பால் மகத்தான, உயிர்த்துடிப்புள்ள, ஜீவ சக்தி நிறைந்த ஒரு ஜனநாயகத்தின் வாரிசுகளாகக் கருதுவதில், நாம் பெருமை கொள்ளவேண்டும். இந்த உணர்ச்சியே நாம் இந்த நாட்டுக்குச் செய்ய வேண்டிய, செய்யக் கூடிய, சேவையின் அளவு கோலாய் இருக்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டே எதிர் காலத்தில் நமது மனப் போக்கை அமைக்க வேண்டும். இந் நாட்டுப் பிரஜைகளான பிறகு, இந்தியர்கள் என்ற நினைவையே அழித்துவிட வேண்டுமென்று இந்தியத் தலைவர்கள் எனக் கூறப்படுவோர் சிலர்விரும்புவதை, சமீப காலத்தில் பத்திரிகையில் வெளிவந்து கொண்டிருக்கும் அவர்களுடைய அறிக்கைகள் பிரதிபலிக்கின்றன. இதனால் நஷ்டமடைவது இந்தியர்களே ஒழிய, இந்தியாவல்ல.

இந் நாட்டிலுள்ள இந்தியர்களுக்கு நான் கூறும் ஆலோசனை என்னவென்றால், மலாயாப் பிரஜைகளான பிறகும் கூட, இதயத்தில் இந்தியர்களாகவே இருக்க வேண்டும் என்பதுதான். இது ராஜதுரோகம் என்று நினைப்பது அறிவீனம். அதன் மூலம், அவர்களுக்கு மலாயா விவகாரங்களில் கிடைக்கும் செல்வாக்கு, அதன் தரத்தைக் கொண்டு, நாட்டின் முக்கிய கவனத்தில் இடம்பெறும்; புதிய நாடு என்ற முறையில் இந் நாட்டின் எதிர்காலத்திற்கும் அது நன்மை பயக்கும். முக்கியமாக இந் நாடு சுதந்திரநாடு என்ற முறையில் சர்வதேசப் போட்டா போட்டி சமுத்திர ஜலத்தில் முதல் முதலாகக் கால் வைக்கிறது; அந்தப் போட்டிகளில் இந்தியர்கள் இந் நாட்டுப் பிரஜைகளாயிருப்பதால், இந் நாட்டுக்கு நம் தாய் நாட்டுடன் தொடர்பும், அதன் மூலம் உலகத்துக்கே பயனளிக்கக் கூடிய அளவில் ஒத்துழைக்கும் சந்தர்ப்பமும் கிட்டும். அதனால் உண்டாகும் சாதனைகளால், இந் நாட்டின் கண்ணியமும், கௌரவமும் உயர்வதற்கு மற்றெவரையும்விட இந்தியர்களே காரணம் என்று சரித்திரம் சொல்லுமல்லவா? ❋

(127-ம் பக்கத் தொடர்ச்டில் நலனபிவிருத்தி லாட்டரி களை சீனர் சங்கம் தொடங்கி அதில் கிடைத்த பல லட்சக் கணக்கான வெள்ளி வருமானத்தைப் புதுக் கிராமங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவைகளில் செலவிடத் தொடங்கியதன் பயனாய் மக்களிடையே கவர்ச்சி ஏற்பட்டு அதில் பற்றுதல் கொண்டு அங்கத்தினர்களானார்கள். ஆரம்ப காலம் முதல் டத்தோ ஸர் செங் லாக் டான் ம. சீ. ச. வின் தலைவராய் இருந்து வருகிறார். ஆரம்ப காலத்தில் இருந்து வந்த அரசாங்க ஆதரவுக் கொள்கைகளை நாளா வட்டத்தில் சிறிது சிறிதாகக் கைவிட்டு மக்களைப் பிரதிநிதித்து மக்களின் விருப்பு வெறுப்புக்களை வெளியிடும் ஸ்தாபனமாக இன்று ம. சீ. ச. விளங்குகிறது. ம. சீ. ச. வின் வளர்ச்சியில் ஸர் செங் லாக் டானுக்குப் பெரிதும் உதவிகரமாய் விளங்கிப் பணி

மலாயாவின் பிரதான செல்வம்



விக்காம் என்பவர் பிரேஸில் நாட்டிலிருந்து 70,000 ரப்பர் விதைகளைக் கொண்டு வந்தார். அந்த விதைகளை இங்கிலாந்தில் கியூ என்ற இடத்தில் ஊன்றினர். அங்கிருந்து சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்ட கன்றுகளில் 22 தான் உயிரோடு வந்து சேர்ந்தன. அந்தக் கன்றுகளைச் சிங்கப்பூரிலும், கோலக்கங்சாரிலும் பயிரிட்டார்கள். இந்த 22 கன்றுகள்தான் மலாயாவில் உள்ள கோடிக்கணக்கான ரப்பர் மரங்களுக்கு மூதாதையர். ரப்பர் மரத்திலிருந்து லாபகரமாகப் பாலை எடுக்கும் முறையைக் கண்டு பிடித்தவர் எச். என். ரிட்லே. ரப்பரைத்தோட்டப் பயிராகப் பயிரிடும்படி அவர் எவ்வளவோ சொல்லியும் அந்தக் காலத்தில் யாருமே அதற்குச் செவி சாய்க்கவில்லை. 1895–ம் வருஷத்துக்குப் பின் புக்கிட் லிந்தாங் என்ற இடத்தில் நாட்டுக்கோட்டைச்செட்டியார்களின் பண உதவியோடும் ரிட்லேயின் தூண்டுதலினாலும் தன் சே யான் என்ற சீனர் ரப்பரை எஸ்டேட் பயிராகப் பயிரிட்டார். இதுதான் மலாயாவின் முதலாவது ரப்பர்த் தோட்டம். 1897-ல் 345 ஏக்கர்களில்தான் ரப்பர் பயிரிடப்பட்டிருந்தது. 1300-ல் ரப்பர் எஸ்டேட்டுகளின் விஸ்திரணம் 5000 ஆகிவிட்டது. 1905–ல் 43,000; மறு வருஷம் 85,000. 1911-ல் 10 லக்ஷம் ஏக்கர்களுக்கும் அதிகம்! 1918-லேயே உலக ரப்பர் உற்பத்தியில் பாதி, மலாயாவின் உற்பத்தியாக ஆகிவிட்டது.

1905-ல் ஏற்றுமதியான ரப்பர் மொத்தம் 200 டன்கள் தான். இப்போது வருஷத்துக்குச் சராசரி 6 1/2 லக்ஷம் டன்கள் வீதம் ஏற்றுமதியாகின்றன; மொத்தம் சுமார் 40 லக்ஷம் ஏக்கர்களில் ரப்பர் பயிர் செய்யப்படுகிறது.

(36–ம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தின் சவாலை மலாயாவில் வாழும் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளுவார்களா? தமிழினத்தின் பெருமைக்குரிய வரலாற்றையும், தமிழ் மொழியின் சிறப்பையும், அழகையும் பேணிப் பாதுகாப்பது இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு தமிழனுடையவும், ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணினுடையவும் கடமையாகும். பல்வேறுசமூக மொழிகளை அடிப்படையாகக் கொண்டு, மலாயர்—இனம் ஒன்றை உருவாக்க முடியாது என்று கூறுகிறவர்கள்பலராக இருக்கக் கூடும். ஆனால், தன் மொழியையும், தன் இனத்தையும் எண்ணிப் பெருமைப் படும் ஒரு தமிழன் தான், மலாயாவின் மற்ற பிரஜைகளுடன் கௌரவத்தோடும், சமத்துவத்தோடும் தனக்குரிய ஸ்தானத்தைப் பெறமுடியும் என்பது என் நிச்சயமான கருத்து. மலாய், சீனம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் கலாசாரங்கள் ஒன்றுபட்டு இணைவதன் மூலம், மகத்தான சந்தர்ப்பங்களும், பிரகாசமான எதிர்காலமும் உடைய இந்நாட்டுக்குப் பொது விஸ்வாசம் செலுத்தும் பெருமைக்குரிய, ஆற்றல்மிக்க, ஒரு தேசிய இனம் உருவாகும்.

யாற்றியவர் கர்னல் எச். எஸ். லீ யாவார்.

அம்னோ-ம. சீ. ச. இணைப்பு

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை அங்கத்தினராகக் கொண்டு நிர்வகிக்கும் நோக்கத்துடன் கோலாலம்பூர் முனிசிபல் சபைக்கு முதலாம் தேர்தல் 1952-ம் ஆண்டில் நடைபெற்றது, டத்தோ ஸர் ஆன் பின் ஜாபரைத் தலைவராகக் கொண்டு விளங்கிய மலாயா சுதந்திரக் கட்சி பலம் வாய்ந்ததாக விளங்கியது. இந்த நிலையில் அந்தக் கட்சியைத் தேர்தலில் முறியடிக்க வேண்டுமானால் அம்னோ-ம. சி. ச. இணைப்பு அவசியம் என்று இரு கட்சிகளும் உணர்ந்தன. கர்னல் எச். எஸ். லீயின் பெரு முயற்சியின் காரணமாக இந்த இணைப்பு ஏற்பட்டு 12 ஸ்தானங்களுக்கான தேர்தலில் அம்னோ-ம. சி. ச. கூட்டணிக்கு 9 ஸ்தானங்களும், மலாயா சுதந்திரக் கட்சிக்கு 3 ஸ்தானங்களும் கிடைத்தன. ம. இ. கா. வின் அப்போதைய தலைவரான ஸ்ரீ கே. எல். தேவாசர் மலாயா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றார் என்பது நினைவுபடுத்திக்கொள்ள வேண்டிய விஷயமாகும்.

கோலாலம்பூர் முனிசிபல் சபைத் தேர்தலைத் தொடர்ந்து நகரசபைகளுக்கும் சமஸ்தான சபைகளுக்கும் தேர்தல்கள் நடைபெற்று அம்னோ-ம. சி. ச. கூட்டணி பரிபூரண வெற்றியுடன் பெரும்பாலான ஸ்தானங்களையும் கைப்பற்றியது. 1954-ம் ஆண்டு பிறை மகாநாட்டில் ம. இ. கா. தனித்துப் போட்டியிடுவது என்று தீர்மானித்து ஈப்போ, கோலாலம்பூர் ஆகிய இடங்களில் பரீட்சார்த்த முயற்சிகளில் இறங்கித் தோல்வியே கண்டோம்.

தேவாசரின் நற் செயல்

பின்னர் 1954–செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் கோலாலம்பூரில் நடைபெற்ற அகில மலாயா இந்தியர் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பிற அரசியல் கட்சிகளுடன் ம. இ. கா. இணைப்புப் பெறுவதன் மூலமே ம. இ. கா. வின் எதிர் காலமும் இந்தியர்களின் எதிர்காலமும் பாதுகாக்கப்படும் என்ற நல்ல முடிவு ஏற்பட்டது. இது பதவிக்காகவும், காலி நாற்காலிகளுக்காகவும் செய்யப்பட்டிருக்கின்ற முயற்சி என்றும், "சந்தர்ப்ப மணம்" என்றும், இந்தியர்கள் நலன் விலைகூறப்பட்டு விட்டதாயும் கடுமையான கண்டன பாணங்கள் எழுப்பப்பட்டு பலத்த ஆட்சேபனைகள் கிளம்பின. இரண்டையும் ஆதரிக்காத மதில் மேல் பூனைகளும் இருந்தன. இந்த நிலையில் அத்தனை எதிர்ப்புகளையும் தாங்கி, சமூக நலனைக் கருத்தில் கொண்டு ஸ்ரீ கே. எல். தேவாசர் ம. இ. கா. வை அம்னோ–ம. சி. ச. கூட்டணியில் அங்கம் பெறச் செய்து தம் கடமையைச் செவ்வனே நிறைவேற்றினார். இன்று சாங்கிரஸ் ஸ்தாபனமும், அதன் மூலம் ஸ்தல ஸ்தாபன சபைகள் முதலாய் மந்திரி சபை ஈறாகப் பதவியிலுள்ளோர் அனைவரும் ஸ்ரீ தேவாசருக்கும் அவரது துணிவான நற்செயலுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள்.

அம்னோ–ம. சி. ச.-ம. இ. கா. கூட்டணி முதன் முறையாக கோலாலம்பூர் முனிசிபல் சபைத் தேர்தலில் பரிபூரண வெற்றி பெற்றது. பரீட்சார்த்தமாகவும், பூர்வாங்க நடவடிக்கையாகவும் முனிசிபல் தர அளவில் ஏற்பட்ட முக்கூட்டு அணி பெடரல் ரீதியில் பின்னர் ஏற்கப்பட்டு சமஸ்தான செட்டில்மெண்டு சபைகள், பெடரல் சபை ஆகியவைகளிலும் மூன்று இனப்பிரதிநிதிகளும் அபேட்சகர்களாய் நிறுத்தப்பட்டு, பூரண வெற்றியும் கண்டனர்.

மலாயாவில் வாழும் மிக முக்கிய இனத்தவராகிய மலாய்க்காரர், சீனர், இந்தியர் ஆகியவர் ஒரே கட்சியாகிய கூட்டணியில் இணைந்து ஒரே குரலில் சுதந்திரக் கோரிக்கை எழுப்பினர். பிரித்தாளும் கொள்கையைக் கையாண்டு காலனி ஆதிக்கத்தில் உள்ள மக்களைப் பலவீனப்படுத்திப் பழகிய பிரிட்டிஷ் அரசாங்கம் செய்வதறியாத நிலையில் மலாயா மக்களின் சுதந்திர வேட்கையைத் தீர்க்கவேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது. எதிர்பார்த்தபடி ஆகஸ்ட் 31-ல் மலாயா சரித்திரத்தில் புதிய திருப்பம் ஏற்படுகிறது. சுதந்திர மலாயாவில் சகல இன மக்களின் வாழ்க்கையும் சுபிட்சமாகவும், சந்தோஷம் நிறைந்ததாகவும் இருக்குமென்று நம்புவோமாக.

மலாக்காச் செட்டியார்களின் பூர்வீகம்

மலாக்காவைப் போர்ச்சுக்கீஸியர் ஆண்டு வந்த காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த ஒரு கப்பல் பேராவுக்குச் சமீபமாகக் கடலில் மூழ்க, அதில் இருந்த 17 அல்லது 18 பேரும் தப்பிப் பிழைத்துக் கரை சேர்ந்தனர். தாய்நாடு திரும்ப வசதியற்ற நிலையில் மலாக்காவிலேயே நிரந்தரமாகத் தங்கிவிடத் தீர்மானித்தார்கள். அந்த 18 பேரில் வியாபாரச் செட்டியார், படையாச்சி, நாயக்கர், பிள்ளை எனப் பல பிரிவினர் இருந்தனர். அவர்கள் சீனர், மலாய்க்காரர் போர்ச்சுக்கீஸியர் ஆகிய வகுப்பினரிடமிருந்து பெண்களை எடுத்துத் தாலி கட்டித் திருமணம் செய்து கொண்டனர். ஆனால் தாய்மொழி மட்டும் நாளடைவில் மலாயாக மாறிவிட்டது. உடைகளும் சீனரின் உடைகளாகிவிட்டன. சமீப காலமாக மலாக்காச் செட்டியார்கள் தமிழ் கற்று வருகிறார்கள். இப்போதுள்ள அவர்களுடைய குடும்பங்கள் சுமார் 70.

கோலாலம்பூரின் தந்தை யப் ஆ லாய்

சரியாக 100 வருஷங்களுக்கு முன் (1857-ல்) கிள்ளானிலிருந்து 87 சீனர்கள் கோலாலம்பூரை நோக்கிக் கிள்ளான் ஆற்றில் படகில் வந்தார்கள். கிள்ளான் நதியும் கோம்பாக் நதியும் கலக்கும் இடத்தில் இறங்கி, அம்பாங்குக்குச் சென்று ஈயச் சுரங்கங்களை வெட்டினார்கள். அம்பாங் ஈயச் செல்வத்தினால்தான், கோலாலம்பூர் நகரமே உற்பத்தியானது. 1857-ல் கோலாலம்பூரில் சில வியாபாரிகளின் வீடுகளைத் தவிர, வேறு வீடுகள் கிடையாது. ஹியூ சியூ என்ற ஒரு சீனப் பிரமுகர் 1862-ல் காலமானார். அவர்தான் கோலாலம்பூர் என்ற பெயரில் ஒரு சிறு கிராமத்தை ஸ்தாபித்தார். அதே வருஷத்தில்தான் லியூ இங்கிம் கோங் என்ற சீன முதலாளி அழைத்ததன் பேரில், யப் ஆ லாய் கோலாலம்பூருக்கு வந்தார். அவர் வந்திராவிட்டால் கோலாலம்பூர் ஒரு நகரமாகியிருக்க முடியுமா என்பது சந்தேகமே. கோலாலம்பூருக்கு வந்த யப் ஆ லாய் தம் முதலாளியின் ஈயச் சுரங்கங்களை மேற்பார்த்ததோடு, சீக்கிரத்தில் தாமே சுரங்க முதலாளியாகிப் பெரும் பொருள் சம்பாதித்து, கோலாலம்பூரின் பாதி வீடுகளுக்குச் சொந்தக்காரராகி விட்டார். அவர் பிளான்போட்டுக் கட்டியபடிதான் இன்றும் கோலாலம்பூர் நகரம் இருக்கிறது. அவர் போர் வீரனாக இருந்து எதிரிகளை ஒழித்துக் கட்டினார். மிகுந்த துணிவுடன் புதுப் புது முயற்சிகளில் இறங்கி வெற்றி பெற்றார். ஏராளமாக தான தர்மங்கள் செய்தார். இப்படிப்பட்ட

அசகாய சூரரை மலாயாவின் வரலாற்றில் காண்பது அரிது. ''அபரிமிதமான ஆற்றலும் துணிவும் கொண்டவர்'' என்று அவரை அவர் காலத்து ஆங்கிலப் பிரமுகர் ஒருவர் வர்ணித்துள்ளார்.

சீனாவில் குவாங்டங் மாகாணத்திலுள்ள டாம் ஷுயீ என்ற கிராமத்தில் ஏழை விவசாயியின் புதல்வராக 1837-ல் பிறந்த யப் ஆ லாய், தமது 17-வது வயதில் மலாக்காவுக்கு வந்தார். முதலில் டொரியான் தங்கல் ஈயச்சுரங்கத்தில் வேலை பார்த்தார். அப்புறம், பன்றி வியாபாரியாகவும் இருந்தார். சூதாட்டத்தில் பணத்தைத் தொலைத்துவிட்டதால் அவரைத் திரும்பவும் சீனாவுக்கு அனுப்பத் தீர்மானித்த அவருடைய மாமா ஒருவர் $ 100 செலவுக்குக் கொடுத்து அனுப்பினார். இந்தப் பணத்தை அவர் சிங்கப்பூரில் சூதாட்டத்தில் இழந்துவிட்டார்! பிறகு, ஊர் திரும்பக் காசில்லாமல், திரும்பவும் மலாக்காவுக்கு வந்து, அங்கிருந்து கால் நடையாக சுமார் 200 மைல் தூரத்தில் உள்ள லுகுட்டுக்கு வந்து, அங்கிருந்து கோலாலம்பூருக்கு 1862-ல் வந்தார். லுகுட் என்பது போர்ட்டிக்ஸனுக்கு அருகேயுள்ள இடம். 1865-ல் மலாக்காவைச் சேர்ந்த கோக் காங் கியோன் என்ற மங்கையை மணந்தார். பெரும் குபேரனாக, சமூகத்தின் தனிப் பெரும் தலைவனாக, கோலாலம்பூருக்கு அரசன்போல வாழ்ந்த யப் ஆ லாய் கடைசிக் காலத்தில் சீனாவுக்குத் திரும்ப எண்ணினார்; ஆனால் 48-ம் வயதில் 1885, ஏப்ரல் 15-ம் தேதி கோலாலம்பூரிலேயே காலமானார். அவர் இறந்த தினத்தன்று இந்நகரின் சர்க்கார் காரியாலயங்கள் யாவும் மூடப்பட்டன. சீன மொழியில் "மனிதன்" என்பதைக் குறிக்கும் எழுத்து மாதிரி அவர் நெற்றியில் ஒரு தழும்பு இருந்ததாம். உண்மையிலேயே மனித சக்தியின் எல்லையைக் கண்டவர் யப் ஆ லாய். அவர் இறந்தபின் அவரது குடும்பத்தார், இப்போது ஈஸ்டர்ன் ஹோட்டலாக இருக்கும் கட்டடத்துக்குக் குடியேறி வசித்து வந்தார்கள். யப் ஆ லாய் வசித்த வீடு ஓல்டு மார்க்கெட் ஸ்கொயரில் இருந்தது. யப் ஆ லாயின் பெயரால் இப்போது ஒரு தெரு இருக்கிறது.

கோலாலம்பூரைப் பற்றிய ரசமான சில புள்ளி விவரங்கள்: 1875-ல் இதன் ஜனத்தொகை 2000; 1884-ல் 4000. 1887-ல் இந்நகரில் இருந்த வீடுகள் 518.

மலாயா வரலாற்றில் இந்தியர்கள்

(கு. அழகிரிசாமி)

மலாயாவின் வரலாற்றில் முக்கால் பகுதி இந்திய நாகரிகத்தின் வரலாறுதான். சரித்திர காலத் தொடக்கத்திலிருந்து 15-ம் நூற்றாண்டு வரை, சுமார் 1800 வருஷங்களாக இந் நாட்டு வரலாற்றில் காணப்படுவதெல்லாம் இந்திய நாகரிகத்தின் பெருமைதான்.

பதினாயிரம் வருஷங்களுக்கு முன்பே மலாயாவில் மனிதர்கள் வசித்திருக்கிறார்கள். ஆனால் 2,200 வருஷங்களுக்கு முன்புதான் இங்கு உலோகங்களை உபயோகிக்கக் கற்றுக்கொண்டார்கள். அது வரையிலும் கற்காலமே நீடித்தது. இரும்பு, வெண்கலம் போன்ற உலோகங்களை மலாயா வாசிகளுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் இந்தியர்களும் சீனர்களும் ஆவார்கள்.

முதல் ராஜ்யம்

கிறிஸ்து பிறப்பதற்கு 300 வருஷங்களுக்கு முன்பு கிட்டாவில் இந்தியர்கள் குடியேறினார்கள். இந்தியாவின் வர்த்தகப் பொருள்களைக் கொண்டு வந்து குவித்தார்கள்; இந்தியாவின் நாகரிகத்தையும், கலாசாரத்தையும், பழக்க வழக்கங்களையும், தொழில் முறைகளையும் இங்கே பரப்பினார்கள். மலாயா மக்கள் அவை அனைத்தையுமே மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள். கிறிஸ்தவ சகாப்தத்தின் தொடக்கத்தில், கிட்டா, பெர்லிஸ், கிளந்தான் ஆகியவை அடங்கிய பகுதியில் லங்கா சுகம் என்ற ஒரு ராஜ்யத்தை இந்தியர்கள் ஸ்தாபித்தார்கள். மலாயாவில் ஸ்தாபிக்கப்பட்ட முதல் ராஜ்யம் இதுவே. இதன் முதல் மன்னன் மாரன் மஹா வங்ஸன் எனப்படுபவன். இந்த ராஜ்யம் 6 நூற்றாண்டுகள் வரை சிறப்புற்று விளங்கியது.

முதல் ராஜ்யத்தை ஸ்தாபித்த இந்தியர்கள், மலாயாவின் வரலாற்றில் பல துறைகளிலும் முன்னோடிகளாக, மற்றவர்களுக்கு வழி காட்டிகளாக, இருந்து வந்திருக்கிறார்கள். அவற்றை விவரிக்கப் புகுந்தால் இந்தக் கட்டுரை பெரியதொரு புத்தகமாகி விடும். இச் சின்னஞ்சிறு கட்டுரையில் சில முக்கியமான விவரங்களைப் பற்றி மட்டும் பார்ப்போம்.

லங்கா சுகத்துக்குப் பின்னர்—அதாவது 6-ம் நூற்றாண்டிலிருந்து 700 வருஷ காலம்—ஸ்ரீ விஜய சாம்ராஜ்ய ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது மலாயா. இது பௌத்த சாம்ராஜ்யம். இதன் பின் மஜாபஹித் என்ற இந்து சாம்ராஜ்ய மன்னர்கள் இந் நாட்டை ஆண்டனர். அதற்குப் பிறகு 1400-ல் மலாக்காவை ஸ்தாபித்து ஆண்ட ஸ்ரீ பரமேஸ்வரா மன்னனும் ஹிந்துவே. அவன் 1414-ல் காலமானான். அன்றோடு மலாயாவில் ஹிந்து, பௌத்த மன்னர்களின் ஆட்சி முடிவுற்றது. பிறகு இஸ்லாம் மன்னர்களின் ஆட்சி தொடங்கியது. 18 நூற்றாண்டுகள் வரை இந்திய நாகரிமும், கலாசாரமுமே இங்கே பரவியிருந்தன.

முதல் சுல்தான்

ஸ்ரீ பரமேஸ்வராவின் மகன் இஸ்லாம் மதத்தைத் தழுவினான். தனக்கு இஸ்கந்தர் ஷா எனப் பெயர் வைத்துக் கொண்டான். இஸ்லாம் மதத்தை இந் நாட்டில் பரப்பியவர்களும் இந்தியர்களே. குஜராத்தி வியாபாரிகளால் முதலில் சுமாத்ராவிலும், பின்பு மலாயாவிலும் இம் மதம் பரவியது.

இஸ்கந்தர் ஷாவின் மகன் ஸ்ரீ மகராஜா. அவனுடைய மனைவியர் இருவருள் மூத்தவள், துன் அலி என்ற தமிழ் வியாபாரியின் மகள். அவள் வயிற்றில் பிறந்த முஜாபர் ஷா 1446-லிருந்து 1456 வரை மலாக்காவை ஆண்டான். சுல்தான் என்ற பட்டம் பெற்ற முதல் மன்னன் இவனே. ஆகவே, முதல் சுல்தானின் தாய் ஒரு தமிழ்ப் பெண்மணி என்பது குறிப்பிடத் தக்கது.

முஜாபர் ஷாவின் வாரிசுகள் தான் பஹாங், பேரா, ஜோகூர் ஆகிய சமஸ்தானங்களின் முதல் சுல்தான்களாகச் சிம்மாசனம் ஏறினார்கள்.

பதினைந்தாம் நூற்றுண்டின் கடைசிப் பகுதியில் உலகத்திலேயே மலாக்கா பெரிய துறைமுகமாக விளங்கியது என்று அந்தக் காலத்தில் வாழ்ந்த துவார்த்தே பார்போஸா என்ற போர்ச்சுக்கீஸியன் எழுதி வைத்திருக்கிறான். மலாக்காவில் தமிழ் வர்த்தகர்கள் பெரிய அளவில் வர்த்தகம் செய்து வந்தார்கள் என்றும், அவர்கள் தான் மலாக்காவுக்கு அதிகமான பெருமையைத் தேடித்தந்தவர்கள் என்றும் 1514-ல் டாம் பியரிஸ் என்றமற்ருெருபோர்ச்சுக்கீஸியன் எழுதினான். மலாக்காவுக்கு மட்டுமல்ல மலாயா முழுவதற்கும்—ஏன், தென் கிழக்கு ஆசியா முழுவதற்குமே—அதிகமான பெருமையைத் தேடித்தந்தவர்கள் இந்தியர்கள் தான்.

ராஜாங்கப் பொறுப்பு

பல சந்தர்ப்பங்களில் தமிழர்கள் சுல்தான்களுக்கு ஆலோசனையாளர்களாகவும், மந்திரிகளாகவும், ஆசிரியர்களாகவும் இருந்திருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து வந்த முஸ்லிம் அறிஞர்களிடம் மாணவர்களாக இருந்து சுல்தான்கள் அரபு மொழியில் குர் ஆனைப் படித்ததாக "மலாயாவின் ஷேக்ஸ்பியர்" முன்ஷி அப்துல்லா கூறினர். சிங்கப்பூரை ஸ்டாம்போர்டு ராபிள்ஸுக்கு விற்ற ஹுஸேன் என்ற சுல்தான், அப்துல் காதர் என்ற தமிழரைத் தமக்கு ஆலோசனையாளராகவும், மந்திரியாகவும் வைத்துக் கொண்டார். அதிகாரமெல்லாம் உண்மையில் அப்துல் காதரிடமே இருந்தது. சுல்தானின் 2 புதல்வர்களும் தமிழர்களைப்போல உடை உடுத்தி வாழ்ந்தார்கள். அப்துல் காதர் எவரிடத்திலும் மிகுந்த மரியாதையோடு பேசுவார் என்று எழுதியுள்ள முன்ஷி அப்துல்லா, அப்படிப்பட்ட பண்பு அவரிடம் இருந்ததற்குக் காரணம் அவர் ஒரு தமிழராக இருந்ததுதான் என்றும் கூறியிருக்கிறார்.

ராஜாங்கப் பொறுப்பில் இந்தியர்களுக்கிருந்த செல்வாக்கு இப்படி. அப்புறம் பிரிட்டிஷ் ஆட்சி தொடங்கிய புதிதிலும், இங்கே உத்தியோகங்களுக்கு ஆங்கிலம் கற்ற அனுபவஸ்தர்கள் தேவைப்பட்டார்கள். இந்தத் தேவையை நிரப்புவதற்கு இந்தியர்களின் உதவியையே நாடினார்கள். ஏராளமான இந்திய உத்தியோகஸ்தர்களையும், போலீஸ் அதிகாரிகளையும், டாக்டர்களையும், பள்ளி ஆசிரியர்களையும் இங்கே அழைத்துக்கொண்டு வந்தார்கள். ஆரம்ப காலத்தில் பிறுங்கில் நர்ஸ் வேலை பார்த்தவர்கள், நாடு கடத்தப்பட்ட இந்தியக் கைதிகளே.

அறிவுத் துறை

கி. பி. 1843-ம் வருஷத்தில் கூட மலாய்மொழி கற்பிக்க ஒரு பள்ளிக்கூடம் இருந்ததில்லை. ஆனல், தமிழ் கற்பிக்க மலாக்காவில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்தன! 'தாய்மொழியைப் படிப்பானேன்?' என்று அப்போது மலாய்க்காரர்கள் கேட்பார்கள் என்றும், இது உலகத்தில் இல்லாத புதுமை என்றும் முன்ஷி அப்துல்லா கூறுகிறார். தென்கிழக்கு ஆசியாவில் இருந்த ஆசிரியர்களைப் பற்றிய தகவல் சீன வரலாற்று நூல்களில் காணப்படுகிறது. கி. பி. 671-லேயே இங்கே இந்தியர்கள் ஆசிரியர்களாக இருந்தார்கள் என்று அந் நூலின் மூலம் அறிகிறோம். ஏறக்குறைய அதே நூற்றுண்டில்தான் பல்லவர்கள், மலாய்மொழியை எழுதுவதற்கு எழுத்துக்களைக் கொடுத்து உதவினார்கள். பேராவில் கங்கா நகரம் என்ற பல்லவ ராஜ்யமும் இருந்தது. முஸ்லிம் மதம் பரவிய பின், பழைய எழுத்துக்களை விட்டு விட்டு, அரபு எழுத்துக்களில் மலாய்மொழியை எழுதத் தொடங்கினார்கள். இதைக் கற்பித்தவர்களும் இந்தியர்கள் தான்.

15-ம் நூற்றுண்டில் "ஸெஜரா மலாயு" என்னும் நூல் ஒன்று மலாக்காவில் எழுதப்பட்டது. மலாயாவின் பழைய வரலாற்றை அறியப் பிரதானமான ஆதார நூலாக இருப்பது இது ஒன்றே. இதை எழுதிய ஆசிரியரும தமிழ் ரத்தக் கலப்புடையவர். 'மலாயாவின் ஷேக்ஸ்பியர்' என்று இப்போது மலாய்க்காரர்களால் போற்றப்படும் முன்ஷி அப்துல்லாவும் தமிழ் ரத்தக் கலப்புடையவர் தான்.

ஹென்றி மெதர்ஸ்ட் என்ற ஆங்கிலேயர் சென்னையில் சில வாரங்கள் தங்கி, ஒரு தமிழ்ப் பெண்ணைக் கல்யாணம்செய்து கொண்டு, அதன்பின் மலாக்காவுக்கு 1817-ல் வந்தார். வரும்போது அச்சு இயந்திரத்தையும் கொண்டு வந்தார். மலாயாவுக்குக் கொண்டுவரப்பட்ட இந்த முதல் அச்சு இயந்திரத்தை ஓட்டியவர்கள் இந்தியர்கள்—6 வங்காளிகள்.

தொழில் துறை

உத்தியோகஸ்தர்களும்டாக்டர்களும் இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்டார்கள் என்று முதலில் பார்த்தோம். இந்நாட்டில் ரப்பர் பயிர் செய்யப்பட்ட பின் தோட்டங்களில் வேலை செய்ய இந்தியர்களைத்தான் தொழிலாளிகளாக அழைத்து வந்தார்கள். போர்ட் வெல்டிலிருந்து தைப்பிங்குக்கும் (1885), கிள்ளானிலிருந்து கோலாலம்பூருக்கும் (1886) முதலில் ரயில் பாதைகள் போட்ட போது, அந்த வேலையில் திறமை பெற்றிருந்த வங்காளிகள் அழைத்துவரப்பட்

டனர். அவர்களும், தமிழ்த் தொழிலாளிகளும் சேர்ந்து ரயில் பாதைகள் போட்டார்கள். ரோடுகளைப் போட்டவர்களும் தமிழர்கள்தான். இந்நாட்டில் குடியேறிய இந்தியர்களில்பெரும்பாலோர், அழைப்பின் பேரில் வந்தவர்களே ஒழிய, வயிற்றுப்பாட்டுக்காக வலிய வந்தவர்களல்லர் என்ற உண்மையை எந்த வரலாற்று நூலிலும் காணலாம்.

அரசியல் துறை

அரசியல், தொழிற் சங்க இயக்கம் முதலிய துறைகளிலும் இந்தியர்கள் முன்னோடிகளாக இருந்துவருகிறார்கள். முதலில் ஸ்தாபிக்கப்பட்ட அரசியல் ஸ்தாபனம் மலாயா இந்தியர் காங்கிரஸ். மலாயாவுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று முதலில் கேட்ட ஸ்தாபனமும் அதுதான். இந்தியர்கள் அரசியல் உணர்ச்சி மிக்கவர்கள், தேர்தல் போன்ற நடவடிக்கைகளில் அனுபவம் மிகுந்தவர்கள் என்று எல்லா சமூகத்தவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நாட்டுக்கு உழைப்பை மட்டுமின்றி, மூலதனத்தையும் இந்தியர்கள் கொடுத்து உதவி யிருக்கிறார்கள்.

தனிப்பட்டவர்கள் ரப்பர்த் தோட்டம் போடவோ, தொழில்துறைகளைத் தொடங்கவோ மூலதனத்தைக் கடனாகக்கொடுத்து உதவியவர்கள் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள். இவர்களுடைய மூலதன உதவியும், தமிழ்த் தொழிலாளிகளின் உழைப்பும் சேர்ந்து சுபிக்ஷம் நிறைந்த நவீன மலாயாவை உருவாக்கியிருக்கின்றன.

நாட்டின் பற்பல முக்கியத் துறைகளில் முன்னோடிகளாக இருந்து பாடுபட்ட இந்தியர்கள், இந்நாட்டுக்கு நாகரிகத்தை மட்டுமின்றி, முதல் மந்திரி துங்கு அப்துல் ரஹ்மான் கூறுவதுபோல, சமாதானத்தையும், சுபிக்ஷத்தையும், சந்தோஷத்தையும் கொண்டுவந்தார்கள். மற்ற மக்களுடன் சகோதரர்களைப் போல உறவுகொண்டு வாழ்ந்தார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் இவர்கள் பிற சமூகங்களிடம் துவேஷமோ, பொறாமையோ கொண்டதில்லை. வகுப்புவாதம் என்பது இவர்களுடைய இயல்புக்கே மாறான விஷயம். சுதந்திர மலாயாவிலும் இந்தியர்கள் தங்கள் பாரம்பர்யப் பண்புக்கும் இயல்புக்கும் ஏற்ப, நாட்டு நலனுக்குப் பாடுபடுவார்கள்; வழிகாட்டியும் உதவுவார்கள்.



இணையற்ற இன்சுவைத் தீங்கனி

1727-ல் ஹாமில்டன் என்பவர், டொரியானைப் பற்றி விரிவாக வர்ணித்துள்ளார். "மிகச் சிறந்த பழம் டொரியான். சிலருக்கு அதன் மணம் பிடிக்காது. ஆனால் ஒரு முறை சாப்பிட்டுப் பழகிய பின் அந்த மணம் மறைந்துவிடும்" என்றும், அது மிகவும் சுவையுள்ளது, வயிற்றுக்குக் கெடுதல் செய்யாமல் நல்லது செய்வது, கிளர்ச்சியை உண்டுபண்ணக் கூடியது, சத்தானது, சூடானது என்றும், அவர் எழுதியுள்ளார். 1869-ல் வாலஸ் என்பவர், டொரியானை அதிகமாகச் சாப்பிடச் சாப்பிட, அதை நிறுத்த வேண்டுமென்ற ஆசையும் குறைந்து கொண்டே வரும் எனவும், டொரியானைச் சாப்பிட்டுப் பார்ப்பதற்கு மேல் நாட்டிலிருந்து கீழ் நாட்டுக்கு ஒரு கப்பல் பிரயாணம் செய்தாலும் தகும் என்றும் எழுதியிருக்கிறார். வேறு பல ஐரோப்பியர்களுடைய புகழ் மாலைகளையும் அந்தக் காலத்திலேயே டொரியான்பழம் சூடியிருக்கிறது. மிக உயர்ந்ததோடு மிகத் தாழ்ந்தது ஒன்று சேர முடியுமா என்ற கருத்தில், 'டொரியானும் வெள்ளரிக்காயும் ஒன்று சேர முடியுமா?' என்று ஒரு மலாய்ப் பழமொழி கூறுகிறது.

கட்டுரையாளர்களைப்பற்றி.........

—(*)—

துங்கு அப்துல் ரஹ்மான் புத்ரா: முதல் மந்திரி; உள்நாட்டுப் பாதுகாப்பு, உள்நாட்டு விவகாரங்கள் ஆகியவற்றிற்கும் மந்திரி; ஐக்கிய மலாய்க்காரர் தேசிய ஸ்தாபனத்தின் (அம்னோ) தலைவர்; கூட்டணிக்கும் தலைவர்.

டத்தோ ஸர் செங் லாக் டான்: மலாயா சீனர் சங்கத் தலைவர்.

வீ. தி. சம்பந்தன்: தொழிலாளர் மந்திரி, மலாயா இந்தியர் காங்கிரஸ் தலைவர்.

இஞ்சே ஸர்டான் பின் ஹாஜி ஜுபீர்: மராமத்து, தபால் தந்தி மந்திரி.

லியாங் இயூ கோ: சுகாதார, நலனபிவிருத்தி மந்திரி; நாளையிலிருந்து மலாக்காவின் கவர்னர்.

டத்தோ ஸர் கிளவ் துரைசிங்கம்: பெடரல் சட்டசபை அங்கத்தினர்; அகில மலாயா இலங்கையர் சங்கத் தலைவர்; வழக்கறிஞர்.

கே. எல். தேவாசர்: பெடரல் சட்டசபை அங்கத்தினர்; வழக்கறிஞர்.

ஆர். ரமணி: வழக்கறிஞர்.

"நாகுமணாளன்": கிளன்மேரி எஸ்டேட் தமிழ்ப் பள்ளி ஆசிரியர்; "தேவன்" ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றவர்.

ஜோசப் ஜெகன்: "நேச"னின் விளையாட்டுப் பகுதி நிருபர்.

டி. ஜே. டி. ராஜிலு: எடின்பரோ எஸ்டேட் தமிழ்ப் பள்ளி ஆசிரியர்; சிலாங்கூர் இந்தியப் பாடசாலை ஆசிரியர்கள் சங்கத் தலைவர்.

எஸ். பழனிவேல் பிள்ளை: ம. இ. கா. கோலாலம்பூர் நகரக் கிளையின் தலைவர்; கோலாலம்பூர் ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் டிரஸ்டி.

சுவாமி சத்தியானந்தா: பூச்சோங் சுத்த சமாஜத் தலைவர். "மலாயாவின் சரித்திரம்" என்னும் தமிழ் நூல் எழுதியவர்,

ஜெரால்டு ஹாக்கின்ஸ்: சிலாங்கூர் சமஸ்தானத் தேர்தல் அதிகாரி; "மலாயா" என்னும் ஆங்கில நூல் எழுதியவர்.

எஸ். துரைராஜ சிங்கம்: குவாந்தான் அப்துல்லா (ஆங்கில) பாடசாலையின் ஆசிரியர்; மலாயா–இந்தியா கலாசாரத் தொடர்புகள் பற்றி ஆங்கிலத்தில் நூல்கள் எழுதியவர். கலாயோகி டாக்டர் ஆனந்தா கே. குமாரசாமியைப்பற்றிய அறிஞர்களின் பாராட்டுரைகளைத் தொகுத்து நூல் வடிவில் வெளியிட்டவர்.

ம. கந்தையா: கோலாலம்பூர் சங்கீத அபிவிருத்தி சபாவின் ஸ்தாபகர்களில் ஒருவர்.

கே. தம்மானந்த தேரா: கோலாலம்பூர் பிரிக்பில்ட்ஸில் உள்ள புத்தர் கோவிலின் பிரதம பிக்ஷு.

க. குருபாதம்: சிலாங்கூர் சமஸ்தான சட்டசபை, கோலாலம்பூர் நகரசபை ஆகியவற்றின் அங்கத்தினர். ம. இ. கா. சிலாங்கூர்க் கிளையின் உப தலைவர்.

புகைப் படங்கள்: பெடரேஷன் தகவல் இலாகா, கே. பழநி, யோங் போட்டோ ஸ்டூடியோ.

இந்திய நடனம், மலாய் நடனம் ஆகிய 2 படங்களுக்கும் வர்ணம் தீட்டியவர்கள்: லைப் பிராஸஸ்.
மற்றப் படங்களுக்கு வர்ணம் தீட்டி தலைப்புக்களையும் எழுதியவர்: ஜேவியர்.

மலாயா மக்களின்
மங்கள வாசகம் மெர்தேகா

போன்: 789
★
த. பெ. நெ. 79

எல்லோரும் விரும்புவது
எம். கே. ஆர்.
போஜனக் கொரடா

எலுமிச்சை, ஊறுகாய், மாங்காய்
ஊறுகாய் மொத்தமாகவும்
சில்லரையாகவும் கிடைக்கும்

POJANA KORADA FACTORY
283, Convent Road, Taiping

Phone: **789** *P. O. Box* **79**

மெர்தேகா வாழ்த்துக்கள்!
எல்லா எஸ்டேட்டுகளுக்கும்
தமிழ், ஹிந்தி, மலாய், சீன
மொழிகளில்

35, 16 M. M. படங்களை
நாங்கள் விசேஷமாக
வழங்குகிறோம்.

தயவுசெய்து
தேவைக்கு எழுதுங்கள்

BAJAJ BROTHERS
FILM DEPARTMENT
42, MOUNTBATTEN ROAD
KUALA LUMPUR

PHONE: 7858 P. O .BOX: 418

மதராஸ் கபே

301, ஈப்போ ரோடு, கோலாலம்பூர்

உரிமையாளர்: ஆர். எம். கருப்பையா *போன்:* **69154**

- கை தேர்ந்த ஆட்களைக் கொண்டு சுத்தமான முறையில் தயாரிக்கப்பட்ட சிற்றுண்டி வகைகளும், நெய்யினால் தயாரிக்கப்பட்ட இனிப்புப் பதார்த்தங்களும் கிடைக்கும் இடம்.
- விருந்துகளுக்கு குறித்த நேரத்தில் நேர்த்தியான முறையில் உணவுகள் தயாரித்துக் கொடுக்கும் இடம்.
- இரவு பகல் இரு நேரங்களிலும் இறைச்சி வகைகளும், காய்கறி வகைகளும் சூடாகக் கிடைக்கும் இடம்.

வெண்ணெய், நெய் எப்பொழுதும் கிடைக்கும்,

MADRAS CAFE
301, IPOH ROAD, KUALA LUMPUR

Prop: **RM. Karuppiah** *Phone:* **69154**

மெர்தேகாவுக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்!

V. M. S. அப்துல் ரெஜாக் & Co.,

ஏற்றுமதி. இறக்குமதியாளர்கள், கமிஷன் ஏஜண்ட். ஜவுளி & ஜாவா பத்தை
மொத்தம் & சில்லரை வியாபாரம்.

ஹெட் ஆபீஸ்:-
98, அராப் ஸ்திரீட்,
சிங்கப்பூர்
போன்:- 34896 & 30061.
தந்தி:. RAZAKCO

பிராஞ்சு ஆபீஸ்;-
10, பத்து ரோடு,
கோலாலம்பூர்
போன்:- 88605
தந்தி:- RAZAKCO

பழநி தண்டபாணி வைத்தியசாலேயார் தயாரிக்கும் நம்பிக்கை வாய்ந்ததும் உத்தரவாதம் பொருந்தியதுமான உயர்ந்த, ஒப்பற்ற மருந்துகள் அனைத்தும் எங்களிடம் கிடைக்குமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிரோம்.

ஓவர்ஸீஸ் ஜெனரல் ஏஜன்ஸி (N)

16. அம்பாங் ஸ்திரீட். கோலாலம்பூர்

தபால் பெட்டி 171 — போன் 4378

தமிழ் வெளியீடுகள்

திங்கள், கிழமை இதழ்களாகவோ. சிறு சிறு புத்தகங்களாகவோ பல பகுதிகள் அடங்கிய புதின (நாவற்) புத்தகங்களாகவோ வெளியிட விரும்புபவர்களுக்கு பொறுப்பேற்று சிறந்த முறையில்

அச்சிட்டுக் கொடுக்கப்படும். மேலும்

- திருமண அழைப்புகள்
- காதணி மடல்கள்
- பெயரிடும் இதழ்கள்
- கோவில் பத்திரிகைகள்
- வசூல் ரசீது புத்தகங்கள்
- ஆண்டு அறிக்கைகள்
- அழகிய விசிட்டிங் கார்டுகள்
- உயர்ந்த லட்டர் தாள்கள்
- உறைகள்
- விழா அறிக்கைகள்
- வண்ண வாழ்த்திதழ்கள்
- ரேடியோ நேயர் கார்டுகள்

ஆகியவை அழகிய அமைப்பில் மலாயாவில் எந்த மூலேயிலிருப்பினும் குறித்த தவணையில் உங்களுக்குக் கிடைக்கும்படி அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

ஸ்டார் பதிப்பகம் - *75, பெல்பீல்டு ஸ்திரீட், ஈப்போ*

THE STAR PRINTING WORKS - Belfields Street, Ipoh.

Phone: 4142

Post Box: 82

வாடிக்கைக்காரர்களுக்கும், அபிமானிகளுக்கும் மெர்தேகா வாழ்த்துக்கள் !

உங்களுக்குப் பிடித்தமான

கைத்தறி ஜவுளி தினுசுகளுக்குப்

பெயர் பெற்ற இடம்

K. T. நாகராஜ செட்டியார் அண் கோ.,

34, பத்து ரோடு,
கோலாலம்பூர்
த. பெ. எண்: 426 — போன்: 4389
தந்தி: "NAGAR"

கிளை:
53, பெல்பீல்டு ஸ்திரீட்
ஈப்போ
பேரா

எமது சுதந்திரதின வாழ்த்து, மக்களாட்சி பெற்றுய்யும் மலைநாடே [illegible]
இன்றுபோல் என்றும் உய்ய வாழ்த்துகின்றோம்.

த. அழகர்சாமி,

நகை வியாபாரம்,

63, ரம்போ ஸ்திரீட், ஸ்தாபிதம் (1929) கிள்ளான்.

மலரவன் படைத்த மதிவதனம் என்செய்யும் புகழ்பெற்ற பொன்னுபரணங்கள் இல்லையேல், எனவே திறமையடைந்தவர்களைக்கொண்டு காலத்திற்கேற்றவாறு புதுப்புதுப் பாணியில் நானுவித நகைகளும் உத்தரவாதத்துடன் குறித்த காலத்தில் செய்து கொடுக்கின்றோம். எமது 57-ம் வருட சுமங்கலி மாலை தயாரிப்பு மிகவும் உன்னதமானது. யாவரும் நேரில் விஜயம் செய்ய கோருகிறோம். பல ஆண்டுகளாக உங்களிடம் நற்கீர்த்திபெற்று விளங்கும்:

T. ALAGARSAMY, KLANG.

Telephone: No. 141. Post Box No. 54.

மலாயா சுதந்திரம் நீடூழி வாழ்க!

மைசூர், பனாரஸ், அண்டு காஞ்சீபுரம் பட்டுச் சேலைகளுக்கும், ஜாக்கெட் ரகங்களுக்கும்

சிறந்த இடம் **யானைச் சாப்புக் கடை**

நீடித்த உழைப்பிற்கும்
சாயத்திற்கும்
உத்திரவாதமானவை

கைலிகளை வாங்கும்போது
"யானை" மார்க் குத்தப்
பட்டிருப்பதை பார்த்து
வாங்கவும்.

V. GOVINDA MUDALIAR SONS.

28, BATU ROAD, KUALA LUMPUR.

Branches: Singapore, Ipoh, and Penang.

MAKERS OF BLOCKS FOR THIS MAGAZINE

QUALITY
BLOCKS by
LIFE PROCESS ENGRAVING CO.

- LINE, TONE & COLOUR BLOCKS
- SCHOOL BADGES & EMBOSSING DIES
- ART WORK & CINEMA SLIDES
- ALUMINIUM & BRASS PLATES

தரத்தில் சிறந்த
பிளாக்குகளுக்கு

லைஃப் புரோஸஸ்' என்கிரேவிங் கம்பெனிக்கு

விஜயம் செய்யுங்கள்

★ லைன், ஹாப்டோன், கலர் பிளாக்குகள்
★ பள்ளிக்கூட பாட்ஜ், எம்போஸிங் டைகள்
★ சித்திர வேலைகள், சினிமா ஸ்லைடுகள்
★ அலுமினியம், பித்தளைத் தகடு - பெயர்ப் பலகைகள் ஏனைய வேலைப்பாடுடன் அழகுறச் செய்துதரப்படும்.

ஆபீஸ்: **82, பெட்டாலிங் ஸ்திரீட், கோலாலம்பூர், போன்: 2016**

தொழிற்சாலை: **3, ஜாலன் அம்பாட், சான் சோ லின் ரோடு, K. L.**
போன்: 79005

Office: 82, PETALING STREET, KUALA LUMPUR. PHONE 2016
Works: 3, JALAN AMPAT, CHAN SOW LIN RD., K.L. PHONE 79005

மெர்தேகா! மெர்தேகா!! மெர்தேகா!!!

சுதந்திர மலாயா
சுபிட்சமுடன் ஓங்குக!

★

மெர்தேகாவைத் தேடித் தந்த
கூட்டணித் தலைவர்களுக்கும்
அவர்களுக்கு நல்லாதரவு தந்த
மலாயா மக்களுக்கும் எங்களின் நல்வாழ்த்துக்கள்

★

கரு. சிதம்பரம்பிள்ளை

5, மார்க்கெட் ஸ்திரீட், தெலுக்கான்சன்

போன்: 27

ஸ்தாபகர்: தெலுக்கான்சன் சிதம்பரம்பிள்ளை தமிழ்ப் பாடசாலை

பத்து பகாட்
பழைய நகை
வியாபாரி

★

சாப் சூன் சியோங்

★

பத்து பகாட்டில் நாங்கள் கடந்த 30 வருட காலமாய் உத்தரவாதத்துடன் பவுன், தங்க, வெள்ளி நகைகளை திறமையான தொழிலாளர்களைக் கொண்டு நவீன வேலைப்பாட்டுடன் செய்து கொடுத்து, பொது மக்களால் பாராட்டப்பட்டு வருகிறோம். எப்போதும்போல் எங்களை ஆதரிக்க வேண்டுகிறோம்.

CHOP SOON CHEONG

6, Jalan Penggaram

BATU PAHAT.

ஜோதிடம்

உங்கள் எதிர்கால பலன்களை தெளிவாக அறிந்து கொள்ள விரும்பினால், ஜாதக மூலமாகவும், ஆருட மூலமாகவும் தெரிந்து கொள்ளலாம். ஜாதகம் அல்லது எழுதும் நேரம், தொழில், சுமார் வயது தேவை.

விவரம் தெரிய விரும்புவோர் 10 காசு ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

கே. ஏ. தாமோதரன்

246, ஈப்போ ரோடு,

செந்தூல்

கோலாலம்பூர்

பத்துபகாட் நகை வியாபாரி
டொன் கிங்

கை தேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு இந்தியர்கள் அணிந்து கொள்ளக் கூடிய சகல விதமான நகைகளும் உத்தரவாதமுள்ள பவுன் தங்கத்தில் செய்து தரப்படும்.

வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்பட்டு ஆர்டர்படி நகைகளை ஏர்மெயில் பார்சலிலோ அல்லது இன்ஷ்யூர் செய்தோ, அல்லது ரிஜிஸ்தர் பார்சலிலோ அனுப்பப்படும்.

நம்பிக்கை, நாணயம் வேலைப்பாடு இவற்றை விரும்புவோர் எங்களிடம் வாருங்கள்.

நீங்கள் நியமித்த தங்க நகைகள் விற்பனையாளர்கள்:

TON HING GLD SMITHS

No. 33, JALAN PENGGARAM, BATU PAHAT

JOHORE, PHONE: 456

சுதந்திர மலாயாவில் நிலவளம், நீர்வளம் செழித்தோங்குக!

கங்கா ஸ்டோர்

201, ஈப்போ ரோட், கோலாலம்பூர்.

போன்: 69220

ஜெனரல் மெர்ச்செண்ட்ஸ், மளிகை வியாபாரம்

கே. கே. சாமி

நகரின் பிரபல கண்ட்ராக்டர்

★ 25, டாமன் ரோடு, ★

கோலாலம்பூர்

போன்: 4027, 69220

ரஸ்தா வேலைகள், அல்லூர் கட்டுதல், தள வேலைகள், புல் வேலைகள், ஆகிய வைகளுக்கான அரசாங்கப்பதிவு பெற்ற கண்ட்ராக்டர். குறித்த காலத்தில் கச்சிதமான முறையில் ஒப்பந்தப்படி வேலைகள் முடித்துத் தரப்படும்.

ரோடு ரோலர்கள் சேவாவுக்கு விடப்படும்.

SP. RM. ராமச்சந்திரன்பிள்ளை & கோ.,

Importers, Exporters & General Merchants

22, AMPANG STREET. KUALA LUMPUR

Phone No. **2469** Telegram: "Azad Hind" P. O. Box No. **358**

எங்களிடம் பழநித் திருவருள் தைலம், ஸ்நானத்திற்கும் உடல் நலத்திற்கும் சிரஞ்சீவி போன்றது. தினசரி சிரசில் வைத்து ஸ்நானம் செய்தால் உடம்பிற்கு நல்ல குணம் உண்டு.

S. R. சந்தனாதித் தைலம், பவுன் மார்க் ஓமத் திராவகம், கல்நார் பற்பொடியும் எங்களால் வைத்திய சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்படுவது. மலாயாவில் புகழ் பெற்றது. உபயோகித்துப் பயனடையுங்கள்.

தி ஈஸ்ட்டர்ன் ஷிப்பிங் கார்ப்பொரேஷன் லிமிடெட்

"ஸ்டேட் ஆப் மதராஸ்"

நாகை சென்னைக்கு துரிதப் பிரயாண போக்குவரத்து

சலூன், பங்க், டெக் வகுப்புகளுடன் கூடியது. டெக் பிரயாணிகளுக்கும் நிறைந்த வசதிகள் அளிக்கப்பட்டிருக்கிறது. 8680 டன் எடையுள்ள பெரிய கப்பல். வயோதிகர்கள், குழந்தைகள் பெண்கள்யாவரும் மயக்கமின்றி உல்லாசமாக பிரயாணம்செய்யலாம். சலூன் வகுப்புகளுக்கு இந்திய முறைப்படி சுவையான உணவுகள் அளிக்கப்படுகின்றன. சந்தோஷ மாக பொழுது போக்க சினிமாப் படங்கள், புத்தக நிலையம் (**Smoking Room**) பொது அறை, விளையாட்டுகள் இவைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ், ஹிந்தி, ரெக்கார்டுகளும், ரேடியோ பாட்டுகள், செய்திகளும் அளிக்கப்படுகின்றன.

டெக் பிரயாணிகளுக்கு நிறைந்த தண்ணீர் வசதிகள், காற்று வாங்குமிடம் வைத்திய வசதி, தமிழ், ஹிந்தி படங்கள், நவீன முறையில் அமைக்கப்பட்ட சாப்பாடுக்கடை, அதிலே சுத்தமான சுவையான உணவுகள், ரேடியோ ரெக்கார்டு பாட்டு, செய்தி வசதிகள் இன்னும் பல அமைக்கப் பட்டுள்ளன:

போர்ட் சுவட்டன்ஹாம் ஏஜண்ட்ஸ்:

உபைதுல்லா கம்பெனி

18, மவுண்ட்பேட்டன் ரோடு, கோலாலம்பூர். போன் 2046

சுதந்திர மலாய் மக்களுக்கு

எங்கள் வாழ்த்துக்கள்!

50 ஆண்டுகளுக்கு மேலாக

சுத்தமான, சுவைமிக்க

போஷாக்குள்ள

ரொட்டி & கேக்கு

தயாரிப்பாளர்கள்

பெடரல் பேக்கிரி

39 & 41, அம்பாங் ரோடு,

கோலாலம்பூர்

போன்: 4050 ஸ்தாபிதம்: 1906

ரஸிகர்களுக்கு

எமது

மெர்தேகா வாழ்த்துக்கள்!

★

அமர்ஜித் பிக்சர்ஸ்

76, ஹை ஸ்திரீட்,

சிங்கப்பூர் - 6

★

தந்தி: "PURKH" த. பெ. எண் : 1513

Telephone *No. 258*

PERAK

MUSLIM RESTAURANT

No. 37, Market Square,

Taiping, Perak

- Cattle Dealers, Beef & Mutton Supplier.
- First Class Dinning Hall, Meals Hot & Cole Drinks.
- Cater for all Parties.
- **Serve from 10 a. m. to Midnight.**

Proprietor: HAJEE K. K. IBRAHIM ALI

சலாமட் மெர்தேகா

★

உயர்ந்த பேப்பர்

சிறந்த ரக மை

குறைந்த விலையில்

கிடைக்கும் இடம்

★

M. M. அப்துல் ரஹிம் அண் கோ,

37, பிரின்ஸஸ் ரோடு,

கோலாலம்பூர்

போன்: 6106 த. பெ. நி. 521

பொலிக மெர்தேகா! வாழ்க மலாயா!

சிங்கப்பூர்

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வர்த்தக சங்கம்

★

உலக அரங்கில் விடுதலை பெற்ற
நாடுகளின் வரிசையில், மலாயா சுதந்திரம் அடையும்

மெர்தேகா

தினமாகிய இன்று (31-8-1957)

**அதன் மக்களையும், அரசாங்கத்தையும்
மனமாறப் பாராட்டுகின்றது**

★

சுதந்திர மலாயாவின் பொருளாதார அபி விருத்திக்கும், அதன் மேன்மைக்கும், கடந்த காலத்தைப் போன்று எதிர்காலத்திலும் விஸ்வாசமுடன் சேவை செய்வதே எங்கள் வர்த்தக சங்கத்தின் உளப் பூர்வமான, மகிழ்ச்சிக்குரிய பணியாகும்

மலாயா மாண்புற்றோங்குக! மெர்தேகா பொலிக!

வாழ்க சுதந்திர மலாயா!

கோலாலம்பூர்

அகில மலாயா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வர்த்தக சங்கம்

★

பிரிட்டிஷ் காமன்வெல்துக்கு உட்பட்டு

மலாயா சுதந்திரம் அடையும்

மெர்தேகா

தினமாகிய இன்று (31-8-1957)

அதன் மக்களையும்

அரசாங்கத்தையும் பாராட்டுகின்றது

★

கடந்த காலத்தைப் போன்று எதிர் காலத்திலும் சுதந்திர மலாயாவின் பொருளாதார அபிவிருத்திக்குச் சேவை செய்வதே எங்கள் சங்கத்தின் மகிழ்ச்சிகரமான பணியாகும்.

மலாயா வாழ்க! அதன் மக்கள் வாழ்க! மெர்தேகா பொலிக!

மெர்தேகா ஆண்டின் எமது சிறப்பான வெளியீடுகள்!

★

அசோகா பிக்சர்சாரின்
அற்புதத் தயாரிப்பு!

- ஜெமினி கணேசன்
- அஞ்சலி தேவி
- தங்கவேலு
- ஈ. வி. சரோஜா
- ராஜ சுலோசனு

இன்னும் ஏராளமான நடிக, நடிகையர் நடித்த இவ்வாண்டின் இணையற்ற சித்திரம்

★

சிவாஜி கணேசன், பி. எஸ். சரோஜா
பாலையா, தங்கவேலு நடிக்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்

காத்தவராயன்

காதல், வீரம், சோகம் யாவும் கலந்த ஒப்பற்ற ஓவியம்

விரைவில் வருகிறுள்!
ஷகிலா, ஜெய்ராஜ் நடித்த

மாய மோகினி

கேவா கலர் படம்

எதிர்பாருங்கள்!

சாந்தி

(தமிழ் விளக்கத்துடன் கூடிய தெலுங்குப் படம்)
சாவித்திரி மற்றும் பலர் நடித்தது

யாவும் இந்தியன் பிலிம் கம்பைன் வெளியீடுகள்

Besant Nagar Chennai 90

மெர்தேகா!

சுதந்திர மலாயாவின் மக்களுக்கு

எங்களின் உளப்பூர்வமான வாழ்த்துகள்

★

நெடுங்காலமாக நகரின் பிரபல வர்த்தகர்கள்

★

ஜெனரல் ஸ்டோர்ஸ்

42, மெயின் ரோடு, தஞ்சோங் மாலிம்

போன்: 39

பாண்டியன் ஸ்டோர்ஸ்

இறக்குமதி -- ஏற்றுமதியாளர்கள்

டெலிபோன்: 3720

★

சரஸ்வதி மார்க் நல்லெண்ணெய், பாண்டியன் சோப்,
காப்பித்தூள், மசாலைத்தூள், முதலியவை தயாரிப்பாளர்

ரப்பர், காண்டா விறகு விற்பனையாளர்

22, பிரிக்பீல்ட்ஸ் ரோடு, கோலாலம்பூர்

த. பெ. எண்: 491, ★ தந்தி: பாண்டியன்கோ.

மாவு, எண்ணெய் மில், 3 1/4 மைல், கிள்ளான் ரோடு

டெலிபோன்: 89241

Printed & Published by N. Malayandi Chettiar at the Tamil Nesan Press,
37, Ampang Road, P. O. Box 299, Kuala Lumpur. Phone: 3577

ஆட்டு மார்க் 25 சுருட்டுகள்

கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு
உயர்ந்த புகையிலையினால் தயார் செய்யப்பட்டது.
எங்கள் ஆட்டு மார்க் சுருட்டைப் பார்த்து வாங்கவும்
காரம், குணம், மணம், வாசனையுள்ளது.

25 ஆட்டு மார்க் சுருட்டுகள்

GOAT BRAND
TRADE MARK

25 ஆட்டு மார்க் சுருட்டுகள்

D. E. J. COMPANY

Cigar Merchants

207, IPOH ROAD, KUALA LUMPUR

REGISTERED

CHUAN JOO HIN

KUALA LUMPUR

உ

பால் பொழிந்தே வளம் சேர்த்த பசுமை நாடு
பன் மொழியார் வாழுகின்ற பகையில் நாடு
பால் நிறைந்த பசுக்கூட்டம் நிறைந்த நாடு
பலபேரும் பாலருந்தும் பண்பு நாடு

மலைநாட்டில் வாழுகின்ற மக்களெலாம்
மனமுவந்து சுதந்திரத்தை வாழ்த்துகின்றார்
விலைபேசி வாங்கியவர் உணர்ந்தே இன்று
விட்டுவிட மனந்துணிந்தார் கொடுத்தே விட்டார்

சாதியில்லை; சமயமில்லை; நல்ல நாடு
சழக்குகளும் நிறையவில்லை நம்ம நாடு
நீதியுண்டு நேர்மையுண்டு இந்த நாடு
நிறைய இங்கே பசுவுமுண்டு தோழ நாடு

ஸ்ரீ அம்பாள் அண் கோ.,

(பசு மார்க் சுருட்டுத் தயாரிப்பாளர்கள்)

87, ஈப்போ ரோடு,
கோலாலம்பூர்

அதிபர்:
வி. பி. லிங்கத்தேவர்

போன்:
4765